24 பக்கங்கள்

யாழ்., வன்னி 20/=

உதயன்

சுடர்: 29 கதிர்: 277 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 14, சனி 30.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

புகையிரத சேவை
தொடர்புகளுக்கு:
மனோஜ் எக்ஸ்பிரஸ் சேர்விஸ் (யாழ். - கொழும்பு)
கட்டணம் 1690/=
T.P: 0777 517 019
0772 293 206

# 18 தடவைகள் பேசியும் எதுவும் கிடைக்கவில்லை

## மஹிந்தவுடனேயே பேச வேண்டும் என்ற கருத்துக்கு முதலமைச்சர் விக்கி சீற்றமுடன் பதில்

யாழ்ப்பாணம், ஓக. 30

எங்கு சென்றாலும் தீர்வுக்காக இறுதியில் தன்னிடமே வர வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி, நாம் 18 தடவைகள் பேச்சுக்கு வந்தபோது என்ன தீர்வைத் தந்தார். இந்த அரசு சர்வதேச அழுத்தத்துக்கு மட்டுமே செவிசாய்க்கும் - இவ்வாறு கூறியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

தீர்வு எதுவுமே வழங்காத மஹிந்த ராஜபக்ஷ, நாம் எமது குறைகளைச் சர்வதேசத்திடம் முறையிடுவதை தடுக்க முனையக் கூடாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தும்பளை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பற்றிக் உற்பத்தி நிலையத்தின் அடிக்கல் நடும் விழா நேற்று நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே வடக்கு முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

### அரசியல் தீர்வு

"எங்கு சென்றாலும் இறுதியில் தன்னிடம் வந்தால்தான் அரசியல் தீர்வு கிடைக்கும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். நாம் அவருடன் 18 தடவைகள் பேசியபோது என்ன தீர்வு கிடைத்தது. எதுவும் கிடைக்கவில்லை. 60 வருடங்களாகவே எந்தத் தீர்வும் எமக்கு கிடைக்கவில்லை.

ஏன் இந்த வடக்கு மாகாண சபைத் தேர்தல் கூட எப்போதோ நடத்தப்பட்டிருக்க வேண்டியதொன்று. அதனை நாம் சர்வதேசத்துக்கு தெரிவித்ததால்தான் வடக்கு

22 ஆம் பக்கம் பார்க்க



தும்பளை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பற்றிக் உற்பத்தி நிலையத்துக்கு அடிக்கல் நடும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

## இராணுவம் வாக்களிக்க யாழ்ப்பாணத்தில் சாவடி

யாழ்ப்பாணம், ஓக. 30

ஊவா மாகாணத்துக்கு வெளியே, தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச் சாவடிகள் எதுவும் அமைக்கப்படாதென்று தேர்தல்கள் ஆணையாளரால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும், படையினருக்காக யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் 70 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஊவா மாகாணசபைத் தேர்தல் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. இதற்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

ஊவா மாகாணத்துக்கு வெளியே தபால்மூல வாக்குச் சாவடிகள் அமைக்கப்படமாட்டாதென்றும், அவ்வாறு தபால்மூலம் வாக்களிக்க வேண்டியவர்கள் ஊவா மாகாணத்தின் பதுளை அல்லது மொனராகலையில் அமைக்கப்பட்டுள்ள தபால்மூல வாக்குச் சாவடியிலேயே வாக்களிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாகாண சபைகள் சட்டவரைவின் பிரகாரம், தபால்மூல வாக்களிப்பதற்கு விடுமுறை பெற்று அவ்வாறு வந்து

22 ஆம் பக்கம் பார்க்க

## பேச்சில் இடமில்லை இந்தியாவுக்கு போர்க்கொடி தூக்குகிறது கொழும்பு



கொழும்பு, ஓக.30

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் பேச்சில் இந்தியா உட்பட எந்தவொரு நாட்டையும் கண்காணிப்பாளராக ஏற்பதற்கு அரசு தயாரில்லை என்று நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா.

தேசியப் பொறிமுறையே தீர்வுக்கு வழியென்ற நிலைப்பாட்டில் அரசு உறுதியாக இருப்பதால் இது விடயத்தில் மாற்றுத் தேர்வுக்கு இடமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க



கீரிமலையில் காணி அபகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டம் ஒன்று - கோப்புப்படம்

## காணி உரிமையை நிரூபித்து நீதிமன்றூடாகப் பெற முடியும்

### நகுலேஸ்வரம் காணி சுவீகரிப்பு குறித்து யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கருத்து

யாழ்ப்பாணம், ஓக. 30

கீரிமலை நகுலேஸ்வரம் வீதியில் உள்ள சுமார் 6 பரப்புக் காணியை கடற்படையினர் உரிமை கோரியுள்ள நிலையில், அந்தக் காணி தம்முடையதுதான் என்று நிரூபிக்கப்பட்டால் அதனை உரிய பொது மக்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கீரிமலை நகுலேஸ்வரம் வீதியில் உள்ள காணிகள் பொது மக்களுக்கு விடுவிக்கப்பட்ட நிலையில் அங்கு அவற்றினது உரிமையாளர்கள்

22 ஆம் பக்கம் பார்க்க

## மகேஸ்வரி நிதியடிப்பரின் வழித்தட அனுமதியை நோண்டுகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஓக. 30

நேற்றுமுன்தினம் புத்தூரில் கர்ப்பிணிப் பெண் ஒருவரை மோதி உயிரிழப்பை ஏற்படுத்திய டிப்பர் வாகனத்துக்கு மணல் ஏற்றிச் செல்வதற்கான வழித்தட அனுமதி பெறப்பட்டிருந்ததா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த டிப்பர் வாகனம் மகேஸ்வரி நிதியத்துக்காக மணல் ஏற்றிச் சென்றது என்றும் அந்த டிப்பருக்குரிய அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்து உறுதிப்

22 ஆம் பக்கம் பார்க்க

## பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு தடை உத்தரவு பிறப்பித்தது நீதிமன்று

கொழும்பு, ஓக.30

நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுநர்களின் ஒன்றிணைந்த சங்கம் கடந்த 26ஆம் திகதியிலிருந்து முன்னெடுத்துவரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்குக் கொழும்பு பிரதான நீதிவான் சுஜாதா அழகப்பெரும இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களிடம் இது குறித்துக் கேட்டபோது தமது போராட்டம் தொடரும் என்றும், தடை உத்தரவு பற்றி தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவரும் நோயாளி ஒருவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிவான் நேற்று இந்தத் தடை உத்தரவைப்

22 ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்காலில் மனித எச்சங்கள் குவித்து எரியூட்டப்படுகின்றனவா?

### நேரில் கண்ட மக்கள் அச்சம்; பதற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 30

இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் கடந்த சில தினங்களாக எரியூட்டப்படும் பொருள்கள் குறித்து அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் எழுப்புகின்றனர். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம்பெறும் இந்த நடவடிக்கையில்,

22 ஆம் பக்கம் பார்க்க

"கடந்த சில தினங்களாக, இரவு - பகலாக குறித்த பகுதியில் படையினர் பலவற்றையும் எரியூட்டி வருகின்றனர் என்று நேரில் கண்ட மக்கள் கூறுகின்றனர்."

# ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தாத வடக்கு மாகாண விவசாய அமைச்சு

## 157 மில். ரூபாவில் 11.1 மில்லியன் ரூபாவே இதுவரை செலவு

யாழ்ப்பாணம், ஓக. 30

வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு கடந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக 157 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதும், கடந்த ஜூலை மாத இறுதி வரையில் 11.1 மில்லியன் ரூபாவே செலவு செய்யப்பட்டுள்ளது என்று, வடக்கு மாகாண நிதி நிலை முன்னேற்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியினூடாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு 157 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி நிதியில் விவசாயத்துக்கு 101 வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு 60 மில்லியன் ரூபாவும், வாழ்வாதார உதவித் திட்டங்கள் 26க்கு 30 மில்லியன் ரூபாவும், நீர்பாசனத்தின் கீழ் 7 வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பதற்கு 30 மில்லியன் ரூபாவும், நீர்பாசன - பின்தங்கிய மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட கிராம அபிவிருத்திக்கு 32 மில்லியன் ரூபாவும், அதனைவிட நீர்பாசனத்துக்கு மேலதிகமாக 5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில், கடந் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையில், விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 3.56 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதே போன்று வாழ்வாதாரத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 7.54 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய 145 மில்லியன் ரூபா வரையில் இதுவரை செலவிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 2013 ஆம் ஆண்டு விவசாயம் தொடர்பான 9 வேலைத் திட்டங்களுக்கு 8.65 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அந்த நிதி முழுமையாகச் செலவிடப்பட்டுள்ளது. வாழ்வாதாரத்துக்கு 7 வேலைத் திட்டங்களுக்கு 21.15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 12.93 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்துக்கு 22 வேலைத் திட்டங்களுக்கு 156.38 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 115.5 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. (ற-5)

# மன்னாரில் விபத்து; குடும்பஸ்தர் சாவு



மன்னார், ஓக.30

மன்னார் பஸ் நிலையத்துள் நேற்று நடந்த விபத்தொன்றில் உப்புக்குளத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 58 வயதுடைய சாகுல் ஹமீட் முஹம்மது அன்சாருல்லா என்பவரே உயிரிழந்தவராவார்.

பஸ் நிலையத்துக்குள் வேகமாக நுழைந்த பஸ், குறித்த நபரை உரசியதை அடுத்து அவர் பஸ்ஸின் முன்பாக விழுந்துள்ளார். அப்போது பஸ் சக்கரம் அவரது இடுப்புக்கு் மேலாக ஏறியுள்ளது. உடனடியாக அவர் மன்னார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். குறித்த பஸ் சாரதி தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸும் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ற-56)

# இலக்கிய விருது விழா செப்ரெம்பரில்

கொழும்பு, ஓக.30

அரச இலக்கிய விருது வழங்கும் விழா செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி.எக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் இலக்கியவாதிகளுக்கான வாழ்த்துரையை கலாசார அலுவல்கள் பணிப்பாளர் விஜித் கனுகல வழங்கவுள்ளதுடன் விருது பெறுநர் பட்டியல் கையளிப்பும் வாழ்த்துரையையும் அரச இலக்கியக் குழுத் தலைவர் பேராசிரியர் சமந்த ஹேரத் வழங்கவுள்ளார். (ற-10)



நடப்பாண்டில் இலங்கைக்குப் பயணம் செய்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை பத்து லட்சம் என்ற மைல் கல்லை எட்டியுள்ளது. இந்த வருடத்துக்கான பத்தாவது லட்சம் சுற்றுலா பயணியாக பிரித்தானிய தம்பதியினர் அமைந்துள்ளனர். இந்தத் தம்பதியினர் நேற்றுமுன்தினம் நண்பகல் 12.45 மணியளவில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி செயலக முகாமைத்துவப் பணிப்பாளர் ரூமி ஜவுபர் உட்பட மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். இவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. (ற)

# சிறுவர்கள் இருவர் குளத்தில் மூழ்கிச் சாவு

மன்னார், ஓக.30

மன்னார், முத்தரிப்புதறை கிராமத்தில் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். முத்தரிப்பு துறையின் வெட்டு குளம் எனப்படும் சிறிய குளத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. முத்தரிப்புதறையைச் சேர்ந்த புஸ்பகுமார் றினோகா (வயது - 13), ப.றேக் சன் (வயது - 8) ஆகிய இரு சிறுவர்களுமே உயிரிழந்துள்ளனர்.

குறித்த கிராமத்திலுள்ள குளத்துக்கு ஐந்து சிறுவர்கள் குளிக்கச் சென்றுள்ளனர். இவர்களில் ஒரு சிறுமியும் ஒரு சிறுவனும் தண்ணீரில் மூழ்கி காணாமற் போயுள்ளனர். அதையடுத்து அங்கு விரைந்து சென்ற ஊர்மக்கள் நீரில் மூழ்கிய இரு சிறுவர்க்ளையும் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட சிறுவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றையவர் குற்றுயிராக இருந்துள்ளார். இவரை மருத்து வமனைக்கு எடுத்துச் சென்றவேளை உயிரிழந்துள்ளார்எனத்தெரிவிக்கப்படுகின்றது. இரு உடல்களும் தற்பொழுது மன்னார்பொது வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் இரவுசென்ற மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் சடலங்களைப் பார்வையிட்டு உறவினர்களுக்கு தனது அனுதாபத்தையும் தெரிவித்தார். (ற)

# கடும் நிபந்தனைகளுடன் கமலுக்கு நேற்றுப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், ஓக 30

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளர் றெக்ஷயனின் கொலைக் குற்றச்சாட்டில் 9 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பியின் முன்னாள் அமைப்பாளரும், வடக்கு மாகாண சபையில் எதிர்க்கட்சியின் முன்னாள் உறுப்பினருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) மற்றும் றெக்ஷயனின் மனைவியான அனித்தா ஆகிய இருவரும் யாழ்.மேல் நீதிமன்று நேற்றுப் பிணை அனுமதி வழங்கியது.

வழக்கு நடவடிக்கைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்துக்காகவும் யாழ். குடாநாட்டுக்குள் வரக்கூடாது என்பது உட்பட கடுமையான நிபந்தனைகளுடன் கமல் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் பிணை விண்ணப்பம் தொடர்பான கட்டளை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. கமலும் நேற்று மேல்நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷயன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கடந்த டிசெம்பர் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதற்கு முந்தையநாள் வேலணையில் வசித்து வந்த லண்டன் யசிந்தன் மற்றும் றெக்ஷயனின் மனைவியான அனித்தா ஆகியோர் கைதாகி தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் கமல், அனித்தா ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த நீதிபதி நேற்று கட்டளையைத் தெரிவித்தார். அதன்படி, கமல் 2 லட்சம் ரூபா பெறுமதியான றொக்கப் பிணையிலும், தலா 5 லட்சம் ரூபா பெறுமதியுடைய இரண்டு ஆள் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டார். தவிர பிணையாளிகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் பிணையாளிகளின் பெறுமதி, வதிவிடம் என்பன கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு குறித்த பிரதேச செயலாளரால் அத்தாட்சிப்படுத்த வேண்டும் என்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெறும் அவரது வழக்குக்கு மாத்திரம் அவர் செல்ல முடியும் என்றும் அது தவிர்ந்த வேறு எந்தக் காரணம் கொண்டும் நீதிமன்று மறுஅறிவித்தல் பிறப்பிக்கும் வரை அவர் ஊர்காவற்றுறை நீதிமன்ற பிரிவு உள்ளடங்கும் யாழ். குடாநாட்டில் இருப்பதோ, வசிப்பதோ, தங்கியிருப்பதோ, நடமாடுவதோ, தடை செய்யப் படுகிறது. அதனால் அவர் வசிக்க உள்ளதாகக் குறிப்பிட்ட கொழும்பு முகவரியை நீதிமன்ற பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும். ஊர்காவற்றுறை நீதிமன்ற வழக்கு விசாரணை நடவடிக்கைகளில் எந்தவித தலையீடுகளையோ, இடையூறுகளையோ தானாகவோ பிறர் மூலமாகவோ ஏற்படுத்தக்கூடாது என்றும், வழக்கின் முறைப்பாட்டுக்காரர்களுடனோ சாட்சிகளுடனோ, சம்பந்தப்பட்டவர்களுடனோ, தொடர்புடையவர்களுடனோ குறிப்பாக றெக்ஷயனின் உறவினர், உரித்தாளர், தங்கியிருப்போர், தொடர்புடையோருக்கு எந்த வித பயமுறுத்தல்களோ, தலையீடுகளோ ஏற்படுத்தக்கூடாது. தொடர்பாடல்களை தாமாகவோ பிறர்மூலமாகவோ ஏற்படுத்தக்கூடாது.



மறு கட்டளை பிறப்பிக்கும் வரை கொழும்பு வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணிக் கும் மாலை 4 மணிக்கும் இடையில் கையெழுத்திட வேண்டும். அது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊர்காவற்றுறை நீதிமன்றப் பதிவாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்ற அனுமதியின்றி நாட்டை விட்டுவெளியேறக்கூடாது. அது தொடர்பில் விமான நிலையம், குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர்களுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றப் பதிவாளர் அறிவிக்க வேண்டும், பிணை நிபந்தனை மீறப்பட்டால் பிணை ரத்துச் செய்யப்படும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தவிர அனித்தா 50 ஆயிரம் ரூபா றொக்கப் பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டார். பிணையை கிராமஅலுவலர் உறுதிப்படுத்தி பிரதேச செயலர் அத்தாட்சிப்படுத்த வேண்டும். வழக்கு விசாரணையில் எந்தவித இடையூறுகளோ தடைகளோ தாமாகவோ பிறர்மூலமாகவோ ஏற்படுத்தக்கூடாது. மறுஅறிவித்தல்வரை ஊர்காவற்துறை நீதிமன்றில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும்இடையில்கையொப்பமிட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

கொலை வழக்கில் இரண்டாவது சந்தேக நபரான லண்டன் யசிந்தனைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் அவர்களை நேற்றையதினம் பிணையெடுப்பதற்கான பிணை உள்ளீட்ட நடவடிக்கை இல்லாததால் அவர்கள் எதிர்வரும்திங்கட்கிழமைக்குப்பின்னர் பிணையில் செல்வர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 14 சனி (30.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 277

# ஐ.நா. குழுவின் அறிக்கைக்கு பதிலடி கொடுக்க அரசு திட்டம்

## செப்ரெம்பர் அமர்வில் பீரிஸ், சமரசிங்க கூட்டாகக் களமிறக்கம்





**கொழும்பு, ஓகஸ்ட் 30**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான விசாரணையின் வாய்மொழி மூல அறிக்கை அடுத்த மாத நடுப்பகுதியில் சமர்பிக்கப்படவுள்ள நிலையில், இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இலங்கை அரசும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இதன் ஒரு கட்டமாக, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மற்றும் மனித உரிமை தொடர்பிலான விடயங்களைக் கையாளும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோர் ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் கூட்டாகக் களமிறங்கவுள்ளனர்.

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வீதிகளின் தாங்குதிறன் அறிவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்.குடாநாட்டில் உள்ள சிறு வீதிகளில் செல்லக் கூடியதான பாரமான வாகனங்களின் வரையறை-நிறை அல்லது தொன், வகை தொடர்பில் ஆராய்ந்து அதனை அறிவிக்கும் பலகைகளை நாட்டுவது தொடர்பில் வீதி அதிகார சபைக்கு அறிவிக்க உள்ளதாக யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தூர் நவக்கிரியில் நேற்று முன்தினம் 23 வயதுடைய கர்ப்பிணிப் பெண் மகேஸ்வரி நிதியத்துக்குச் சொந்தமான டிப்பரால் மோதிக் கொல்லப்பட்டார். சம்பவம் நடந்த வீதியில் குறித்த டிப்பர் வாகனம் செல்ல முடியாதவாறு நிலத்தின் தன்மை, அகலம் காணப்பட்டபோதும் டிப்பர் வாகனம் பயணித்துள்ளது.

குறித்த வீதி உட்பட யாழ். குடாநாட்டில் உள்ள சிறு வீதிகளில் செல்லக்கூடிய அல்லது செல்ல அனுமதிக்கக்கூடியதான நிலத்தின் தாங்குதிறன், வீதியின் அகலம் என்பனவற்றைக் குறிப்பிட்டுப் பாரவூர்தி

(22ஆம் பக்கம் பார்க்க)

## 73 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் யாழில் மோசடி

### கடந்த வாரங்களில் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஓக. 30

வெளிநாடு அனுப்புவதாகவும், வியாபார நோக்கம் கருதியும் யாழ். குடாநாட்டில் 73 லட்சத்து 18 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகக் கடந்த வாரங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வியாபார நோக்கம் கருதி 35 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளது. வண்ணார் பண்ணையைச் சேர்ந்த ஒருவர் அது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். வெளிநாட்டுக்கு அனுப்பி வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி 4 லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளதாக அரசடியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். கொக்குவிலில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வியாபார நோக்கில் ஒருவரிடமிருந்து 6 லட்சத்து 20

(19ஆம் பக்கம் பார்க்க)

## 4ஆம் கட்ட மீனவர் பேச்சை கொழும்பில் நடத்த முடிவு

### இரு நாடுகளின் அதிகாரிகளும் நேற்று டில்லியில் கூடி ஆராய்வு

புதுடில்லி, ஓக. 30

இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண 3 தடவையாக நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை. எனினும் மீண்டும் அடுத்த கட்ட பேச்சை கொழும்பில் நடத்துவதற்குக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டி இரு நாடுகளின் மீன்பிடித்துறை சார்ந்த உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழுவினர் நேற்று டில்லியில் சந்தித்துப் பேசினர்.

இரு தரப்பு அதிகாரிகளும் தமது கோரிக்கைகளை முன்வைத்திருந்தபோதும் இரு தரப்புக்களிடமும் இருந்தும் சாதகமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

இலங்கையில் இருந்து பங்குபற்றிய அதிகாரிகள் மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறும், இதனால் தமது வளம் பாதிப்படைவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தனர். இலங்கை தரப்பில் இருந்து பெரிதாக விவா

(22ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமிகள் துஷ்பிரயோகம்; ஆசிரியர் உட்பட இருவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஓக 30

பதின்ம வயதுச் சிறுமிகள் இரண்டு பேர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் ஆசிரியர் ஒருவர் உட்பட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

நேற்று நடந்த செய்தியாளர்

(19ஆம் பக்கம் பார்க்க)

## 327 பேர் இரு வாரத்தில் கைது

வலி. வடக்கு ஓக.30

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரண்டு வார காலத்தில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் 327 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளில் உள்ள பொலிஸார் மேற்கொண்ட தேடுதல்கள் மற்றும் பரிசோதனைகள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள ஒன்பது பொலிஸ் நிலையங்களிலும் கடந்த 14 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான இரு வார காலத்தில் 206 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடித்துக் காயப்படுத்தியமை தொடர்பாக 58 பேரும், கொள்ளை தொடர்பில் ஒருவரும், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் ஒருவரும், குடிபோதையில் கலகம் விளைவித்தமை தொடர்பில் 6 பேரும், சந்தேகத்தின் பேரில் 8 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் 33 பேரும், வாகன விபத்து தொரடர்பாக 12 பேரும், களவு தொடர்பில் 5 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 4 பேரும், அத்துமீறி வீட்டில் நுழைந்தமை தொடர்பில் ஒருவரும், போலி நகையை அடைவு வைத்தமை தொடர்பில் 2 பேரும், சுற்றுச் சூழல் பாதிப்படையும் வகையில் செயற்பட்ட 2 பேரும், பாதுகாப்புக் காரணங்களுக்காக 4 பேரும், சட்டவிரோமாக மின்சாரம் பெற்றவர்கள் 2 பேரும், மோசடி சம்பந்தமாக ஒருவரும், ஏனைய குற்றங்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோருக்காக இன்று அணி திரளுங்கள்

### தமிழ்க் கட்சிகள், அமைப்புக்கள் அழைப்பு

வவுனியா, ஓக.30

"சர்வதேச காணாமற்போனோர் தினமான இன்று வவுனியாவில் நடைபெறவுள்ள காணாமற்போன உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு வலியுறுத்தும் ஜனநாயகப் போராட்டத்திலும், பொதுக் கூட்டத்திலும் அனைவரும் கலந்துகொண்டு தமிழர் உணர்வைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவோம்" - என்று தமிழ்க் கட்சிகளும், சிவில் அமைப்புகளும் அழைப்புவிடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய தமிழ்க் கட்சிகளும், காணாமற்போனோரைத் தேடியறியும் குழு

(19ஆம் பக்கம் பார்க்க)

ஆச்சரியமான, அதிரடியான, அபூர்வமான, தனித்துவமான வரவு

நிரந்தர குடியுரிமை PR உடன் ஐரோப்பிய நாட்டில் படிக்க உழைக்க 5 வருட விசா

- ஒரு மாதத்தில் பறக்கலாம்.
- ஐரோப்பிய நாடொன்றில் படிக்க.
- 2½ இலட்சம் வரை உழைக்க. உணவு, இருப்பிடம் இலவசம்.
- 3 வருடத்தில் PR உம் பெற்றுவிடலாம்.
- எண்ணி 6 பேருக்கு மட்டுமே இவ்வாய்ப்பு.
- 100% விசா உறுதிப்பாடு

நிபந்தனைகளுக்கு அமைவாக.

(51447)(10.6.3)



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

இல. 175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 9016, 021 568 9090

## காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இரும்பு கடத்தல் தொடர்பில் நேரடி விசாரணை

யாழ்ப்பாணம், ஓக. 30

காங்கேசன்துறையிலுள்ள சிமெந்து உற்பத்தித் தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்களின் இரும்புப் பகுதிகள் வெட்டிக் கடத்தப்படுகின்றமை தொடர்பில் அங்கு சென்று பார்த்து விசாரணை நடத்தவுள்ளதாக யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்;.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அங்கிருந்து இரும்பினாலான பகுதிகள் வெட்டப்பட்டுத் தென் பகுதிக்குக் கடத்தப்படுகின்றமை தொடர்பிலான செய்திகளை அறிந்துள்ளோம். அது தொடர்பில் அங்கு சென்று பார்த்து விசாரணை நடத்தவுள்ளோம். அதன் பிறகு மேலதிக நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று தெரிவித்தார். (த-4)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னுத்துரை தர்மலிங்கம்**
திதி : 30.08.2014



தோற்றம்
10.08.1946

மறைவு
09.09.2013

ஆண்டொன்று அகன்றது
ஆறுதல் கொள்ள மனம் இல்லை
ஆனைபலம் குன்றி சிங்கநடை தளர்ந்து
படுக்கையில் வீழ்த்தியது - எம்மை
பரிதவிப்பில் ஆழ வைக்கிறது
பழகிய இடமெல்லாம் பார்க்கையில்
பதற்றம் தான் குடிகொள்கிறது
சொர்க்கத்தில் அமர்ந்துவிட்டீர்
ஆனால் நம் சோகமோ ஆறவில்லை
ஆறுதல் அளித்து இரட்சியுங்கள் எம்மை
தெய்வங்களோடு தெய்வங்களாக இருந்து
வானத்தில் நட்சத்திரமாக அமர்ந்து
எம்மை நல்வழிப்படுத்தி ஆசீர்வதியுங்கள்.
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்.
மனைவி, மக்கள், மருமக்கள், மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.
**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**
(51134) (7.6.3)

## சமய சந்நிதிகளில்

நவாலி, ஓக.30
நவாலி அந்திரான் முருக மூர்த்தி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக் கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறும்.
எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த் தத் திருவிழாவும் இடம் பெறும். (வ-100)

◆◆◆

உரும்பிராய் பரந்தைப்புலம் கருணாகரப் பிள் ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.
எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா வும் இடம்பெறும். (வ)

◆◆◆

வவுனியா வெளிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருவிழா வின் 6 ஆம் நாள் மாம்பழத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து வரும் நாள்களில் வேட் டைத்திருவிழா, சப்பரத் திருவிழா என்பனவும் இடம்பெறும். எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த்தி ருவிழாவும் 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (வ)

## தோத்திரத் திரட்டு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.30
கைதடி அருள்மிகு இணுங்கித் தோட்டம் கந்த சுவாமி ஆலய மண்டபத்தில் இன்று சனிக் கிழமை இரவு 8.30 மணிக்கு 'தோத்திரத்திரட்டு' என்னும் நூல் வெளியீட்டு விழா ஆலயப் பிரதம குருவின் வாழ்த்துரையுடன் ஆரம்பமாகும்.
வெளியீட்டுரையைப் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தி யானந்தசர்மா நிகழ்த்துவார். ஆலயப் பிரதம குரு நூலை வெளியிட்டு வைப்பார். தொடர்ந்து இசைக் கச்சேரியும் இடம்பெறும் என்று ஆலய நற்பணிக்குழு அறி வித்துள்ளது. (ஓ)

## இனியாவது திருத்தப்படுமா அச்சுவேலி பேட்டை வீதி?

கரணவாய், ஓக.30
அச்சுவேலி - கைத்தொழில் பேட்டைக்குச் செல் லும் தென் மூலை வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப் படுவதால் அந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டையில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் குறித்த வீதியைப் புனரமைக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
இதனால் குறிப்பாக அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கும் விவசாய நிலங்களுக்கு வேண்டிய உள்ளீடுகள் மற்றும் பசளைகளைக் கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
இந்த வீதியில் எந்த வித வீதி விளக்குகளும் இல்லாத நிலையில் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் விபத்துக்குள்ளாகும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.
எனவே அந்தப் பகுதி விவசாயிகள் பொது மக் கள் மற்றும் தொழிற்பேட்டைக்குச் செல்வோர் ஆகியோரின் நலன் கருதி குறிப்பிட்ட வீதியை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (வ-108)

## இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் இறுதி நிகழ்வு இன்று

நல்லூர் கந்தப் பெருமான் ஆலய பெருந்திரு விழா காலத்தில் சின்மயா மிஷன் நடத்திய 'இந்து வாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் நிறைவு நிகழ்வாக குறித்த திட்டத்தில் இணைந்து செயற் பட்டவர்களுக்கான ஒன்று கூடும் நிகழ்வும் மாணவர்களுக்கான ஆன்மிக வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கலும் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சின் மயாமிஷன் நிலையத்தில் நடைபெறும். (வ)

## 24ஆவது அகவை நிறைவில் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கணேசலிங்கம் பத்மஜா**



மலர்வு
30.08.1990

உதிர்வு
15.08.2008

ஆண்டுகள் ஆறு அடிநகர்ந்து சென்றதம்மா
ஆண்டவன் பாதம் நீயுறைந்து எம்மலரே
நீண்டவிழி தேடிக் காத்திருந்தோம் பத்மஜாவே
நீயும் வந்திலையே நினைவுகளில் வாடுகிறோம்.

ஆண்டாண்டு நாமும் அழுது புரண்டாலும்
மாண்டார் வாராரே என்றறிந்து தேறுகிறோம்
விண்ணோர் அடைந்துவிட்ட எம்விழுதே
விழிநீர் சொரிகின்றோம் நீயிலையே எமைத்தேற்ற.

**குடும்பத்தினர்.**
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
கிருஷ்ணா வெதுப்பகம்—நீர்வேலி.
(51437)(7.6.3)

**காணி விற்பனைக்கு**

எழுதுமட்டுவாள் பகுதியில்
தென்னங்காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு : 077 492 7947 (சி/15851) (7.6.3)

**தேவை**

பேக்கரி வேலைக்கு ஆண்கள்
தேவை, பொதிசெய்வதற்கு
பெண்பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 077 253 6162 (51433) (12.3.6)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm





Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு, புகையிரத வீதி, இலக்கம் 42 இல் அமைந்துள்ளதும், நில பரப்பு 1 குழி 5.7 அளவுள்ளதுமான வீடு விற்பனைக்கு உண்டு. (51442) (10.6.3) தொடர்பு: 077 573 3128

## காணவில்லை



இருபாலை கிழக்கைச் சேர்ந்த
**குமாரசிங்கம் கேதீஸ்வரன்**
என்பவர் கடும் நீல நிறத்தில் கட்ட மிடப்பட்ட ரிசேட்டும், இளம் நீலநிற டெனிம் ஜீன்சும் அணிந்து 27.08.2014 புதன்கிழமை கிளிநொச்சிக்கு சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: எஸ். ஜெயரட்ணம்
077 6544419
(51440) (46.6.3)

## 45ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



**நிர்மலா சிவபாதசுந்தரம்**

தோற்றம்
01.12.1962

மறைவு
18.07.2014

கடந்த 18.07.2014 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி நிர்மலா சிவபாதசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் மண்டான் கரணவாய் மேற்கு, கரவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு நடைபெற்று, கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நீருடன் சங்கமமாக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மண்டான், கரணவாய் மேற்கு,
கரவெட்டி. [51438](4.3.6)
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் **கண்ணதாசன் ரஜந்தன்** (அன்பு)
(முன்னாள் தரம் 4 மாணவன், இணுவில் இந்துக்கல்லூரி)

அன்னை மடியில்
25.06.1998

பரமன் அடியில்
30.08.2007



ஆறவில்லை மகனே எம் இதயம்
ஆசையாய் உமை வளர்த்து அறிவூட்டி
வளமுடன் வாழ வைக்க நினைத்த வேளை
பள்ளி செல்லும் உம் அழகை
பொறுக்காமல் பறித்தானோ காலனவன்
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

# மொழிகளுக்கு இடையேயான புரிந்துணர்வு மூலம் சமூகத்தில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தலாம்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஓக. 30


மொழிகளுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் ஊடாகவே சமூக மக்களுக்கிடையில் ஓர் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும் என்று யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு மொழிச் சங்கத்தின் ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில்-

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இசை, ஊற்று ஆகிய மொழிச் சங்கங்கள் ஊடாக செயற்பட்டு வரும் ஆவரங்கால் கிழக்கு லிங்கன் முன்பள்ளி, புத்தூர் கிழக்கு குருநாதர் முன்பள்ளி ஆகியவற்றுக்கு பாண்ட் இசைக் கருவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

மொழிகளுக்கிடையில் ஒரு புரிந்துணர்வை வளர்ப்பதன் மூலம் சமூகங்களுக்கிடை யில் ஒற்றுமையை வளர்க்கலாம் என்கின்ற கருத்தில் சமூக



ஒருமைப்பாட்டு அமைச்சு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள மொழிச் சங்கங்கள் ஊடாக மொழியைப்பயிற்றுவிப்பதற்காகவும் அதனை புரிந்துணர்வதற்காகவும் இந்தச் செயற்பாடுகள் வாய்ப்பளித்துள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரையில் 3 மொழிகள் தெரிந்திருந்தால் போதுமானது. இதனால் மிகச் சிறப்பாக தொடர் பாடல்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆனால் இந்தியா போன்ற பிரதேசங்களுக்கு பல மொழிகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

எனவே இந்த மொழிகள் ஊடாக சமூக மட்டத்தில் புரிந்துணர்வை வளர்த்து மக்களுக்கு இடையே, சமூகங்களுக்கு இடையில் ஓர் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்.

குழந்தைப்பருவத்தில் இருந்தே இன,மத, மொழி வேறுபாடின்றி பிள்ளைகள் வளர்க்கப்படும்போது மனிதம் மதிக்கப்படும். பெரிய பாட சாலைகளில் தான் அதிகமாக இந்த பாண்ட் இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இன்று நவீன காலத்துக்கு ஏற்ப முன்பள்ளிகளுக்கும் வழங்கப்படுவது வர வேற்கக்கூடியது" - என்றார். (வ-14)

## தண்ணீரைப் பெற கொள்கலன்களை வழங்கியது செஞ்சிலுவை

யாழ்ப்பாணம், ஓக.30

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை வறட்சி நிலவும் பகுதி மக்கள் தண்ணீரைப் பெற்றுக்கொள் வதற்கு வசதியாக கொள் கலன்களை (கான்களை) வழங்கி வருகிறது. ஊர்காவற்றுறைக்கு ஒவ்வொன்றும் இருபது லீற்றர் கொள்ளக்கூடிய 150 தண்ணீர் கொள்கலன்களையும், வேலணைப் பிரிவுக்கு பத்து லீற்றர் கொள்ளளவுள்ள 250 கொல்கலன்களையும் மற்றும் 20 லீற்றர் கொள்ளக்கூடிய 225 கொள் கலன்களையும் காரை நகருக்கு 20 லீற்றர் கொள்ளக் கூடிய 90 கொள்கலன்களையும், வழங்கியுள்ளதாக யாழ். கிளைத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார். (ஓ-7)

## நகைகள், பணம் வரணியில் திருட்டு

வரணி வடக்கு கறுக்காய் பிரதேசத்தில் அண்மையில் வீடு ஒன்றில் பட்டப் பகல்வேளை நகைகள், பணம் என்பன திருட்டுப் போயுள்ளன.

10 பவுண் பெறுமதியுடைய நகைகளும் பணமும் திருட்டுப் போயுள்ளதாக கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-122)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி,ஓக.30

மந்துவில் மேற்கு கமக்கார அமைப்பு கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தென்மராட்சி பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் சத்தியேந்திரா தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளின் விவரம் வருமாறு:- தலைவர் - அ.நாகராசா, உப தலைவர்- சு.தர்மலிங்கம், செயலாளர்-மு.பாலசுப்பிரமணியம், உதவிச் செயலாளர்- வே.இரத்தினசிங்கம், பொருளாளர்- பெ.நடராசா. நிர்வாக சபை உறுப்பினர்களாக மேலும் இருவர் தெரிவு செய்யப் பட்டனர். (வ-9)

◆◆◆

வரணி மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் மாசேரி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுேணஸ்திரா சுதாகர் தலைமையில் இடம் பெற்றது. புதிய நிர்வாக சபையின் தலைவராக தியாகராசா ராஜரூபன், செயலாளராக கணேசமூர்த்தி பத்மகாந்தன், பொருளாளராக சிவசுப் பிரமணியம், உப தலைவராக சி.ரவிபாலச் சந்திரன், உப செயலாளராக க.சுப்பிரமணியம், கணக்காய்வாளராக சி.அருணாசலம் ஆகியோரும். நிர்வாகசபை உறுப்பினர்களாக ச.கணேசமூர்த்தி, நீ.கணேசன், வீ.சிவபாதசுந்தரம், வ.யோகநாதன், ம.மகராசா, வ.யோகநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-122)

## 40 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி, ஓக.30

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த மிருசுவில் தவசிகுளம் வாசியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த நபர் ஏற்கனவே இவ்வாறான நான்கு குற்றங்களுக்காக நீதிமன்றால் தண்டிக்கப்பட்டவர் என்று பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

அதனை அடுத்து குறித்த நபருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



யாழ். மானிப்பாய் சுவாம்பிள்ளை மரியதாஸ் அண்மையில் நீதி மற்றும் மறு சீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்.தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் முகாமையாளராவார். (ஓ)


சீமெட் வைத்திய பரிசோதனை ஆய்வுகூடசேவை
CEYMED HOSPITAL SERVICE (Pvt) Ltd.
CEYMED
தற்போது உங்களுக்கான வைத்திய ஆலோசனை சேவை ஆரம்பம்
மருத்துவ சேவை / ஆய்வுக்கூட சேவை / E.C.G / மருந்து விநியோகம்

கொழும்பிலிருந்து எங்களிடம் வருகை தரும் விசேட கண் வைத்திய நிபுனர் (Eye Surgeon) — வியாழன் மட்டும் பி.ப 4.00

| | |
|---|---|
| பொது வைத்திய நிபுணர்கள் (PHYSICIANS) | திங்கள் முதல் வெள்ளி பி.ப 4.00 மணி, சனி ஞாயிறு மதியம் 12.00 மணி |
| இருதய வைத்திய நிபுணர் (CARDIOLOGIST) | சனி பி.ப 1.30 மணி |
| தோல் வைத்திய நிபுணர் (DERMATOLOGY) | திங்கள் முதல் வெள்ளி பி.ப 4.00 மணி, சனி ஞாயிறு மதியம் 12.00 மணி |
| சத்திரசிகிச்சை நிபுணர்கள் (GENARAL SURGEONS) | திங்கள் முதல் வெள்ளி பி.ப 4.00 மணி, சனி ஞாயிறு மதியம் 12.00 மணி |
| காது வைத்திய நிபுணர் (ENT SURGEON) | சனி மாலை 4.00 மணி |
| மூட்டு வாதவியல் வைத்தியர் நிபுணர் (RHEUMATOLOGYS) | புதன் வியாழன் மாலை 4.00 மணி |

உங்கள் பதிவுகளுக்கு:
021 221 9777
550, HOSPITAL ROAD, JAFFNA.
(C/16198)(10.6.3)

வேலைவாய்ப்பு

யாழ். மற்றும் கிளிநொச்சிக் கிளைகள்
காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது 53ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.
* நீங்கள் அரசாங்க நிதித் துறையில் பணிப்புரிய ஆர்வமுள்ளவரா?
* உங்கள் சமூகத்தில் சிறந்த நிதி ஆலோசகராக செயற்பட விரும்புகிறீர்களா?
* பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடி நிற்பவரா?
* துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
* 18 வயதினைக் கடந்தவரா?
* குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
* ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
* சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
* ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்!

தகைமை
G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக.
நீங்கள் எம்முடன் இணைந்தால்.
* அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்.
* வெளிநாட்டுச் சுற்றுலா
* ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
* இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
* வாகனக் கடனுதவி
* போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
* தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு BANK ASSURANCE சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF, ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்.

காப்புறுதியில் முன்அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள். இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 10.09.2014 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர்
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
இல. 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (51254) (10.6.3)
ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தந்தையும் தாயும் போன்று

தவறிவிட்டது
சிக்மா சிவில் கென்செக்சன் இச் சாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தகம், கிளிநொச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.
இதனைக் கண்டெடுத்துத்தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: இல.267, அன்புவெளிபுரம், திருகோணமலை.
077 933 6747, 077 804 8447 (47860) (4.6.3)

வீடும் காணியும் விற்பனைக்கு
வடக்கு புன்னாலைக்கட்டுவன் இராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு அருகில் 14 பரப்புக் காணியும், 4 அறையும், விறாந்தையும், கழிவறையும், குழாய்க் கிணறும், 2 வெட்டுக் கிணறும், வீட்டுக்கு முன்பதாக சிறிய வாழைத்தோட்டமும் அமைந்துள்ளது. இத்துடன் போக்கு வரத்துக்கான பாதை வசதியும் உண்டு.
தொடர்பு: 077 796 7766 (50083)(4.6.3)

கட்டடம் விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியில் 8.2 பேர்சர்ஸ் காணியில் 3மாடிகளைக் கொண்ட கட்டடம் விற்பனைக்குண்டு. கார்கில்ஸ் பூட் சிற்றிக்கு அடுத்து சிலிங் கோவுக்கு எதிரே. கழிவறை, கிணறு மற்றும் காற்றோட்டமான வசதிகள் கொண்டது. பொது நடைபாதை - வாகனங்கள் நிறுத்தும் வசதி வீதியில் உண்டு. இலகுவாக நகருக்குச் செல்லலாம்.
தொடர்பு: 077 595 8186 (51430) (45.6.3)

ஒத்துமாறல்
கொழும்பில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு: 077 111 9671 (51432)(4.6.3)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
இரண்டு வருடம் மட்டும் பாவித்த Joy Row Sprit விற்பனைக்குண்டு.
தொடர்பு: கலட்டி வீதி, கரவெட்டி மேற்கு. 077 423 9303 (51300)(4.6.3)

Personal Class தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் ஏனைய பாடங்களும் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். சிங்களம் கற்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம் 072 368 2977

வீடு வாடகைக்கு
இல.19, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் (சந்தனமாதா கோயில் ஒழுங்கை, கச்சேரியிலிருந்து 300 மீற்றர் தொலைவில்) இணைந்த குளியலறை, கார் தரிப்பிட வசதி என்பவற்றுடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 394 0997 (51293) (4.6.3)

பிரதம குருவின் இறை ஆசி
பொலிகண்டி இருப்பை மூலை (உப்புக்கிணற்றடி) சித்தி விநாயகர் தேவஸ்தானம்.
சாவகச்சேரி, நுணாவில் மேற்கு பத்திரகாளி அம்பிகா சமேத வீரபத்திரர் தேவஸ்தானம் ஆகிய திருக்கோயில்களில் ஆவணி 14 ஆம் திகதியாகிய இன்று (30.08.2014) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் இடம்பெறுகின்ற வருடாந்த ஜயவருட பெருந் திருவிழா திருவருள் பொலிவோடு திவ்விய மகோற்சவமாக எழில்பெற இறைபாதம் தொழுது ஆசி வேண்டுகின்றேன்.

வேதாகம கிரியா கலாபூஷணம் (சி/15605)(4.3.6)
சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் B.A (ஆசிரியர் கல்வயல் சாவகச்சேரி.)
ஆலய மகோற்சவ குரு, பொலிகண்டி சித்தி விநாயகர் தேவஸ்தானம்.
ஆலய பிரதம குரு, நுணாவில் மேற்கு, வீரபத்திரர் தேவஸ்தானம்.

# உமையாள்புரத்தில் 15 குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை இந்திய வீட்டுத்திட்டம்

## அரச காணிகளில் குடியிருப்பதே காரணமாம்

கிளிநொச்சி, ஓக.30

கிளிநொச்சி உமையாள்புரம் கிராமத்தில் 15க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு [illegible] வீடுகள் வழங்க இயலாதென கண்டாவளை பிரதேச செயலகம் அறிவித்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

ரயில் பாதைக்கும் ஏ-9 பாதைக்கும் இடைப்பட்ட பகுதியில் பரந்தன் தொடக்கம் உமையாள்புரம் கண்ணகியம்மன் ஆலயம் வரையுள்ள பகுதியில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தில் வீடுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் விவரம் வெளியானபோதிலும், அவற்றில் சில குடும்பங்கள் வீட்டுக்கான அத்திபாரக் கற்களைப் பறித்துள்ள நிலையில் கண்டாவளைப் பிரதேச செயலக அதிகாரிகளால் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு நிரந் தர வீடுகள் வழங்கப்படமாட்டாதெனக் கூறப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.



ஓலைக்குடிசைக்குள் தொடரும் வாழ்க்கை

இரணைமடுக்குளம் வான் பாயும்போது தாங்கள் குடியிருந்த வயல்வெளிகளில் வெள்ளம் பாய்ந்து ஆனையிறவு ஊடாகக் கடலை சென்றடைவதாகவும், இதன் காரணமாகவே தாங்கள் தற்போதுள்ள பகுதியில் குடியமர்ந்ததாகவும், வீட்டுத்திட்டம் மறுக்கப்பட்டிருப்பதன் காரணமாகத் தாம் குழப்பத்தில் இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இவ்விடயம் தொடர்பாகக் [illegible] கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தனிடம் கேட்டபோது, ரயில் வீதிக்கும் ஏ-9 சாலைக் கும் இடைப்பட்ட பகுதி அரச காணியாகும்.

இந்தக் காணியில் குடியிருக்கும் குடும்பங்களை அவர்கள் முன்பு குடியிருந்த பகுதிக்குச் செல்லுமாறும் அந்தப் பகுதிக்குச் சென்றாலே வீட்டுத் திட்டம் வழங்கப்படும் எனவும் தாம் தெரிவித்துள்ளதாகவும், தனது வேண்டுகோளை ஏற்று முன்பு குடியிருந்த நிலப் பகுதிக்குச் சென்ற குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டு வருவதாகவும், அரச காணியில் எவரும் அனுமதியின்றிக் குடியேற முடியாது என்பதால், அவ்வாறு குடியேறினால் அரச உதவிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார். (த-18)

# கள் விற்பனை நிலையத்தை இடம்மாற்ற கோரிக்கை

கிளிநொச்சி பரந்தன் நகரத்தில் உள்ள கள் விற்பனை நிலையத்தை மக்கள் பழக்கம் [illegible] ஒதுக்குப்புறமான இடத்துக்கு மாற்றுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில்கள் விற்பனை நிலையம் அமைந்திருப்பதன் காரணமாக கள் அருந்த வருவோர் வீதிகளில் மோதல் களில் ஈடுபடுவதால் வீதியில் பயணிக்கும் மக்கள் அசௌ கரியங்களை எதிர்கொள்கின் றனர்.

மதுபோதையில் தகாத வார்த்தைகளை அடிக்கடி பேசிக் கொள்பவர்களினால் பரந்தன் நகரத்துக்கு வரும் மக்கள் இடர்களை எதிர்கொள்ள நேர் கிறது. இந்த நிலையில் ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள கள் விற்பனை நிலையத்தை ஒதுக்குப் புறமான இடமொன்றுக்கு மாற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (த-18)

# இரணைதீவில் தங்கிநின்று மீன் பிடிக்க அனுமதியுங்கள்

கிளிநொச்சி, ஓக .30

கிளிநொச்சி இரணைதீவில் தங்கிநின்று மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட கடற்றொழில் அபிவிருத்திக் கூட்டத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இரணைதீவிலிருந்து 1994 ஆம் ஆண்டு தாம் இடம் பெயர்ந்த பின்னர் இன்று வரை மீண்டும் சொந்த இடத்துக்குச் சென்று மீளக்குடியமரவும் கடற்றொழிலில் ஈடுபடவும் முடியாத நிலை காணப்படுவதாகவும், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளமையால் இரணைதீவுக்குச் சென்று தங்கிநின்று கடற்றொழில் ஈடுபட அனுமதி பெற்றுத்தருமாறும் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன்போது கூட்டத்திற்குத் தலைமை வகித்த கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், இரணைதீவில் கடற்றொழிலாளர்கள் தங்கிநின்று தொழிலில் ஈடுபடுவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோரியுள்ளதாகவும், அனுமதி கிடைக்க வில்லையெனவும் தெரிவித்தார்.

இ ர ணை தீ வி லி ரு ந் து இடம்பெயர்ந்த மக்களுக்காக முழங்காவில் கிராமத்தில் இரணைமாதா நகர் என்ற குடியிருப்பு உருவாக்கப் பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் குட்டத்திலும் இரணைதீவில் மீளக்குடிய மரவும் கடற்றொழிலில் ஈடுபடவும் அனுமதி பெற்று தாருங்கள் என்ற கோரிக்கை முக்கிய கோரிக்கையாக விடுக்கப்பட்டது. (த-18)








# எபோலா தடுப்பூசி பரிசோதனை மனிதனில் அடுத்த வாரம்

### தயாராகிறது அமெரிக்கா

வொஷிங்டன், ஓக.30
எபோலா நோயைத் தடுக்கும் தடுப்பூசியை அடுத்தவாரம் தொடக்கம் மனிதனுக்குச் செலுத்தி பரிசோதிக்க உள்ளதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.
மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நைஜீரியா, லைபீரியா, சியர்ராலோன், கினியா ஆகிய நாடுகளில் எபோலா நோய் வேகமாகப் பரவி வருகிறது.
இந்த நோய்க்கு இதுவரை 1400 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தநிலையில் அமெரிக்கா இந்த நோயைக் குணப்படுத்துக் கூடிய ஒரு மருந்தைத் தயாரித்துள்ளது. அடுத்த வாரம் தொடக்கம் எபோலா நோயைத் தடுக்கும் குறித்த தடுப்பூசியை மனிதனுக்குச் செலுத்தி பரிசோதிக்க உள்ளதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.
மருத்துவ பரிசோதனைக்காக செலுத்தப்படும் இந்த தடுப்பூசி நோய் எதிர்ப்பு சக்தியைப் போதுமான அளவு தூண்டுகிறது என அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (வ)



சிரியாவில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போரால் சிரியர்களில் அதிகமானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி இடம்பெயர்ந்துள்ளனர். அகதிகளில் 1.14 மில்லியன் பேர் தற்போது பாதுகாப்புக் கோரி இடம்பெயர்ந்துள்ளனர் என்று அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் தெரிவித்துள்ளது. (வ)

# எனது மகனை மன்னித்து உயிர்ப்பிச்சை வழங்குக

### அமெ.பத்திரிகையாளரின் தாய் உருக்கமான வேண்டுகோள்

வொஷிங்டன், ஓக.30
"இஸ்லாமிய அரசின் தலைவரான உங்களது கையில்தான் எனது மகனின் உயிர் உள்ளது. அவரை, முகமது நபியின் வழித் தோன்றல் கலிபாவான நீங்கள் மன்னித்து உயிர் பிச்சை வழங்க வேண்டும்" என்று ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டுள்ள அமெரிக்க பத்திரிகையாளரின் தாய், தனது மகனை விடுவிக்ககோரி பயங்கரவாதிகளுக்கு உருக்கமான வேண்டுகோளை முன் வைத்துள்ளார். அமெரிக்கப் பத்திரிகையாளரை கொன்றுவிடப் போவதாகப் பயங்கரவாதிகள் மிரட்டல் விடுத்த நிலையில், அந்த அமைப்பின் தலைவருக்குப் பத்திரிகையாளரின் தாய் ஷெர்லி சட்லாப் விடுத்துள்ள கோரிக்கையில்,
"இஸ்லாமிய அரசின் தலைவரான உங்களது கையில்தான் எனது மகனின் உயிர் உள்ளது. அவரை, முகமது நபியின் வழித் தோன்றல் கலிபாவான நீங்கள் மன்னித்து உயிர் பிச்சை வழங்க வேண்டும். எனது குழந்தையை விடுவிக்கும்படி நான் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். உங்களது தலைமை அதிகாரத்தைப் பயன்படுத்தி அவனது உயிரைக் காக்குமாறு கேட்கிறேன்"-என்று கூறியுள்ளார்.

# உக்ரைன் போரில் நேரடி பங்காளியாக ரஷ்யா

### குற்றஞ்சாட்டுகிறது அமெரிக்கா

வொஷிங்டன், ஓக.30
உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு நேரடித் தொடர்பு இருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.
சோவியத்யூனியனில் இருந்து பிரிந்த உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகின்றன.
உக்ரைனில் வசிக்கும் ஒரு பகுதியினர் தங்கள் பகுதியை ரஷ்யாவுடன் இணைக்கக் கோரி போராடி வருகின்றனர்.
இதனால் உக்ரைன் படையினருக்கும் ரஷ்யாவின் ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் கடந்த 4 மாதங்களாக போர் நடைபெற்று வருகிறது.
இதில் கிழக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் இருந்த கணிசமான பகுதிகளை உக்ரைன் படைகள் கைப்பற்றின. அந்தப் பகுதியை மீட்க கிளர்ச்சியாளர்கள் இராணுவத்தை எதிர்த்து போரிட்டு வருகிறார்கள். தங்கள்வசம் உள்ள டொனெட்ஸ்க் நகரை இராணுவம் நெருங்க முடியாத அளவுக்கு கிளர்ச்சியாளர்கள் கைக் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.



ரஷ்யா உதவியுடன் கிளர்ச்சிப் படையினர் முன்னேறி வருவதால் தங்களுக்கு நேட்டோ படைகள் உதவ வேண்டும் என்று உக்ரைன் கோரிக்கை விடுத்துள்ளது.
இதற்கிடையே உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு நேரடி தொடர்பு இருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.
இதுதொடர்பாக உக்ரைனுக்கான அமெரிக்கத் தூதர் ஜெப்ரி பியாட் கூறியதாவது:-
நாளுக்கு நாள் உக்ரைனில் ரஷ்யப் படைகள், அதிகரிக்கப்பட்டு அங்கு நடைபெறும் சண்டையில் நேரடியாக பங்கேற்கின்றன. அதிநவீன எஸ்.ஏ.22 ஏவுகணைகள் உள்ளிட்ட தனது புதிய வான் பாதுகாப்புத் தளபாடங்களை ரஷ்யா கிழக்கு உக்ரைனுக்கு அனுப்பி உள்ளது.
இதன் மூலம் ரஷ்யா இந்தப் போரில் தன்னை நேரடியாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்றார்.
அதேபோல் ஐரோப்பிய நாடுகளும் உக்ரைன் பிரச்சினையில் ரஷ்யா நேரடியாகத் தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளன. (வ)

# காஸாவை கைப்பற்ற தீவிரமாக ஆலோசித்த இஸ்ரேல்

ஜெருசலேம், ஓக.30
காஸா பகுதியை மீண்டும் இராணுவத்தை அனுப்பிக் கைப்பற்றுவது குறித்து இஸ்ரேல் அரசு தீவிரமாகப் பரிசீலித்ததாக இஸ்ரேல் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
இஸ்ரேல் உளவுத் துறை அமைச்சர் யுவல் ஸ்டீனிட்ஸ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூறியதாவது:
காலவரையற்ற போர் நிறுத்தம் அறிவிப்பதற்கு முன்னர் இஸ்ரேல் இராணுவத் தளபதிகள் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சுடன் போர் நிலவரம் குறித்து விளக்கமளித்தனர்.
அப்போது, இராணுவத்தை அனுப்பி காஸா பகுதி முழுவதையும் கைப்பற்றும் திட்டம் குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது.
ஒருவேளை ஹமாஸ் இயக்கம் ஏவுகணைத் தாக்குதலை இன்னும்சிலவாரங்களுக்கோ, சில மாதங்களுக்கோ தொடருமானால், அந்த நிலைமையைச் சமாளிக்க இராணுவ ஆக்கிர மிப்புத்தான் ஒரே தீர்வாக இருக்கும் முடியும் என்று கூறினார். (வ)

# சீனாவில் நிலச்சரிவு 6 பேர் உயிரிழப்பு




சீனாவின் தென்மேற்கு பகுதியில் கைஜவ் மாகாணத்தில் உள்ள யிங்பிங் கிராமத்தில் புதன்கிழமை பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 77 வீடுகள் சரிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 21 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும்பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது. நிலச்சரிவின் காரணமாக அங்கிருந்த சிறிய நீர்த் தேக்கம் உடைந்து அதில் இருந்த தண்ணீர் வெளியேறி பயங்கர வெள்ளம் ஏற்பட்டது. இதில் அந்தக் கிராமமே மூழ்கியது. மீட்புப்பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. (வ)

# சிறையில் இருந்தபடி லஸ்கர் இ தொய்பாவை வழிநடத்தும் மும்பை தாக்குதல் தீவிரவாதி

இஸ்லாமாபாத், ஓக.30
மும்பை தாக்குதல் தீவிரவாதி ரகுமான் லக்வி, பாகிஸ்தான் சிறையில்இருந்தவாறேலஸ்கர் இதொய்பா தீவிரவாத இயக்கத்தை வழிநடத்தி வருகிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
2008 ஆம் ஆண்டு மும்பை நகரில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் உள்ள லஸ்கர் இதொய்பா தீவிரவாதிகளின் தலைவர் சகிபுர் ரகுமான் லக்வி மற்றும் அப்துல் வாஜித், மசார் இக்பால், ஹமீது அமீன் சாதிக், சாகித் ஜமீல் ரியாஸ், ஜமீல் அகமத், அன்சும் ஆகியோர் தான் காரணம் என்று இந்தியா குற்றஞ்சாட்டியது.
மேலும் தாக்குதலுக்கு திட்டமிட்டதோடு, அதற்காகப் பணத்தை ஏற்பாடு செய்தது, திட்டத்தை நிறைவேற்றியது ஆகியவற்றையும் இவர்களே மேற்கொண்டதாகக் கூறி அவர்கள்மீது விசாரணை நடத்துமாறு பாகிஸ்தானை இந்தியா கேட்டுக்கொண்டது. சர்வதேச அளவில் நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து இது பற்றி விசாரிக்க பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது.
இதுதொடர்பான வழக்கு விசாரணை பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் உள்ள தீவிரவாத தடுப்பு கோர்ட்டில் நடைபெற்று வருகிறது.
ஆனால் கடந்த 3 மாதங்களாக ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி இந்த விசாரணையை பாகிஸ்தான் இழுத்தடித்து வருகிறது.
இது தொடர்பாக பாகிஸ்தான் துணைத்தூதரை நேரில் அழைத்து இந்திய அதிகாரிகள் கண்டனம் தெரிவித்தனர்.



ஆனால், மும்பை தாக்குதல் தீவிரவாதி ரகுமான் லக்வி, பாகிஸ்தான் சிறையில் இருந்தவாறே லஸ்கர் இதொய்பா தீவிரவாத இயக்கத்தை வழிநடத்தி வருகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
தாக்குதல் நடத்தப்பட்டு 6 வருடங்கள் ஆகியும் லக்வி மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவன் சிறையில் இருந்து கொண்டே லஷ்கர் இதொய்பா தீவிரவாதிகளை வழிநடத்துவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)




விநாயகப்பெருமான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஆசிர்வதிப்பதாக சூரத் மணல் கலைஞரால் உருவாக்கப்பட்ட ஒரு மணல் சிற்பம்

## இன்டர்போல் தூதரானார் ஷாருக்கான்



சர்வதேச காவல் அமைப்பான இன்டர்போல் அமைப்பின் தூதராக பொறுப்பேற்றுள்ளார் பொலிவூட்டின் முதல் நிலை நடிகர் ஷாருக்கான்.

ஒரு நாட்டில் குற்றம் செய்துவிட்டு, வேறு நாட்டில் போய் பதுங்கி இருப்பவர்களைக் கண்டுபிடிப்பது, நாடுகளுக்கிடையே இரகசிய குற்றத் தகவல்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொள்வது போன்ற பணிகளைச் செய்யும் அமைப்பு இன்டர் போல். அதாவது சர்வதேச பொலிஸ் துறை. இந்த இண்டர்போல் அமைப்பின் பிரசாரத் தூதர்களாகப் பிரபல நடிகர் ஜாக்கி சான், கால் பந்தாட்ட வீரர் லியோனெல் மெசி, பார்முலா ஒன் கார் பந்தய வீரர்களான ஃபெர்ணான்டோ அலோன்சோ மற்றும் கிமி ரெய்க்கோனென் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த நிலையில், பொலிவூட் கதாநாயகனும் உலக அளவில் பிரபலமான நடிகர்களில் ஒருவருமான ஷாருக்கானை மற்றுமொரு பிரசாரத் தூதராக இன்டர் போல் நியமித்துள்ளது. (வ)

## 'ஜெ' மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு செப்.20 இல்



ஜெயலலிதா

சென்னை, ஓக.30

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்த வழக்கில் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் நடைபெற்றுவரும் இதுதொடர்பான வழக்கின் விசாரணையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அரசு தரப்பு என இருதரப்பின் இறுதிக்கட்ட வாதங்கள் மற்றும் பிரதிவாதங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முடிவடைந்துள்ளன.

அதைத்தொடர்ந்து இந்த வழக்கின் தீர்ப்பு செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி வழங்கப்படும் என்று கூறிய நீதிபதி ஜான் மைக்கேல், அப்போது வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி உள்ளிட்டோர் அன்றைய தினம் நீதிமன்றத்தில் நேரில்முன்னிலையாகவேண்டும் என்று உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றைய மூவரான சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி ஆகியோருடன் கூட்டுச்சதியில் ஈடுபட்டு ஏராளமான சொத்துக்களை சேர்த்துள்ளதாக வழக்கு பதியப்பட்டுள்ளது. கடந்த 1997 இல் தொடுக்கப்பட்ட இந்த வழக்கு விசாரணை 17 ஆண்டுகளாக நடைபெற்று வந்த சூழலில் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. (வ)

## உள்ளாட்சி மன்ற இடைத் தேர்தலை புறக்கணிப்பதாக தி.மு.க. அறிவிப்பு

சென்னை, ஓக.30

உள்ளாட்சி மன்ற இடைத் தேர்தலைப் புறக்கணிப்பதாக தி.மு.க. அறிவித்துள்ளது. இதுகுறித்து அந்தக்கட்சி தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில்;

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட ஓகஸ்ட் 28ஆம் திகதியே, வேட்புமனுத் தாக்கல் ஆரம்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய செப்ரெம்பர் 4-ஆம் திகதிஇறுதி நாள் என்று தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பதை குறிப்பிட்டுள்ள கருணாநிதி, இடையில் எதிர்வரும் 29, 30 மற்றும் 31 ஆம் திகதி ஆகியவை விடுமுறை தினங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் தங்களது வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு நேரம் கொடுக்காத வகையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் நடைபெறவுள்ள மாநகராட்சிகளுக்கு கடந்த ஒரு வார காலமாக புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டன.

அ.தி.மு.க. வேட்பாளர்களை ஏற்கனவே தயார் செய்து வைத்துக்கொண்டு, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள கருணாநிதி, தமிழக அரசின் விருப்பத்துக்கு ஏற்ப மாநில தேர்தல் ஆணையம் செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டி யுள்ளார்.



கருணாநிதி

அவசர அவசரமாக பல கோடி ரூபாய்க்கு தேர்தல் நடைபெறவிருக்கின்ற மாநகராட்சிகளுக்கு திட்டங்களை முதலமைச்சர் அறிவிப்பது முறைதானா? இது தேர்தல் விதிகளுக்கு உட்பட்டதுதானா என்பதை மாநிலத் தேர்தல் ஆணையம் தான் விளக்க வேண்டும்.

ஆளுங்கட்சியின் அராஜகங்கள், பல கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிற விதிமுறை மீறல்கள், தங்களுக்கு வேண்டிய அதிகாரிகளை குறிப்பிட்ட சில இடங்களுக்கு மாற்றுதல், வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் போதிய நேரம் எதிர்க்கட்சிகளுக்கு வழங்காமல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள கொடுமை ஆகியவற்றைக் கண்டிக்கின்ற வகையில், நடைபெறவுள்ள உள்ளாட்சி மன்ற இடைத் தேர்தல்களில் திராவிட முன் னேற்றக் கழகம் கலந்து கொள்வதில்லை.-என்றுள்ளது. (வ)

## மோடி இன்று ஜப்பான் பயணம்

டில்லி, ஓக.30

பிரதமர் நரேந்திர மோடி 5 தினங்கள் அரசு முறைப் பயணமாக இன்று ஜப்பான் செல்கிறார்.

இந்த பயணத்தின் போது இரு நாட்டு பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று தெரிகிறது.

மேலும் இந்த பயணத்தால் இரு நாட்டு உறவில் ஒரு புதிய நிலை உருவாகும் என தான் நம்புவதாக மோடி தெரிவித்தார். அவர் முதலில் அங்குள்ள க்யோட்டோ நகருக்கு சென்று தங்கிய பின்னர் டோக்கியோ நகருக்கு செல்வதாக அவரது பயணம் அமையவுள்ளது. (வ)



## 50 மொழிகளில் தட்டச்சு செய்யும் 8 வயது சிறுவன்

சென்னை, ஓக.30

சென்னையைச் சேர்ந்த 8 வயது பாடசாலை மாணவன் சுமார் 50 மொழிகளில் தட்டச்சு செய்யும் தனது அபார திறமையின் மூலம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி வருகின்றார்.

சென்னை வியாசர்பாடி மகாகவி பாரதியார் நகரைச் சேர்ந்த அப்துல் ஹமீது, ஆமினாள் பேகம் ஆகியோரின் மூத்த மகன் மகமூத் அக்ரம். சென்னையில் மருத்துவர் ராதாகிருஷ்ணன் ஆங்கில மேல்நிலைப் பாடசா லையில் 4 ஆம் வகுப்பில் பயின்று வருகின்றார்.

கணினியில் தட்டச்சு செய்யும் ஆற்றலை சிறு வயதிலேயே பெற்ற அக்ரம் சுமார் 50 இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளிலும் சரளமாக டைப்பிங் செய்யும் திறனை பெற்றார்.

அக்ரமின் திறமையை அறிந்த, யுனிக் உலக சாதனைகள் அமைப்பு, தங்களுடைய 2014 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு, அக்ரமின் திறமையை வெளிக்காட்டுமாறு அழைப்பு விடுத்தனர். இதனை ஏற்ற சிறுவன் மகமூத் அக்ரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பஞ்சாப்பின் பதிண்டா என்ற இடத்தில் நடைபெற்ற யுனிக் உலக சாதனைகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். இதில் யுனிக் வேர்ல்ட் ரிக் கார்ட்ஸ் அமைப்பின் பெயரை 50 மொழிகளில் தட்டச்சு செய்து அக்ரமின் திறமையை வெளிக்காட்டுமாறு நிகழ்ச்சியாளர்கள் கோரினார். அக்ரமின் திறமையை எல்லோரும் அறிய பெரிய திரையில் திரையிட்டு காட்டப்பட்டது. அதன்படி கூடியிருந்த அனைத்து ஊடகங் கள் முன்பாகவும் விழாவுக்கு வந்திருந்த அனைவரின் முன்பாகவும் மகமூத் அக்ரம் தட்டச்சு செய்து எல்லோரையும் ஆச்சரியத்தில் அசத்தினார். (வ)



இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் தாஹீர் ரபீக் பட் நேற்று இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் கோலி குணதிலகவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள விமானப் படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இருநாடுகளின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்துப் பல விடயங்கள் பேசப்பட்டன என்று கூறப்படுகின்றது. (ற)

# முஸ்லிம் மக்களுக்கு எதிராக இவ்வாண்டு 80 சம்பவங்கள்

கொழும்பு, ஓக.30

2014ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்குள் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக 80 வெறுக்கத்தக்க சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முஸ்லிம் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தசெயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகள் என்ற அடிப்படையில் இந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் அளுத்கம சம்பவங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தன. குறிப்பாக அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள் தெரிந்து கொள்ளாதபடி ஊடகங்களால் வெளிப்படுத்தப்படுவது தடுக்கப்பட்டது.

பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் கருத்துக்கள் யாவும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அந்த அமைப்பினர் கையிலெடுத்து செயற்படுவது போன்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. அது தவிர ஒரு இடத்தில் முஸ்லிம் மாணவி ஒருவரின் தாயை இஸ்லாமிய உடையுடன் வரக்கூடாது என்று பாடசாலை நிர்வாகம் ஒன்று தடுத்தமையானது, முஸ்லிம் மக்களுக்கு எதிரான வெறுப்பைக் காட்டும் செயல்களில் ஒன்றாகும்"- என்றுள்ளது. (ற)

# நாய் விற்பனை சுவரொட்டி; பொலிஸாரிடம் முறைப்பாடு

## நிமல்கா, சுனில் ஜயசேகர இணைந்து



கொழும்பு, ஓக.30

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு என்ற சுவரொட்டியில் தமது தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந் தமை தொடர்பில் மனித உரிமை செயற்பாட்டாளரான நிமல்கா பெர்ணான்டோ மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளர் சுனில் ஜயசேகர ஆகியோர் கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அவர்கள் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். முறைப்பாட்டை அடுத்து.குறித்த இருவருக்கும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி நாய்க்குட்டிகள் குறித்த தொடர்புகொள்ளும் இலக்கங்களின் தரவுகளைத் தருமாறு மூன்று தொலைபேசி நிறுவனங்களுக்கு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

கொழும்பு புகையிரத நிலையத்துக்கு அண்மைய பகுதிகளில்நாய்க்குட்டிகள்விற்பனைக்கு என்ற சுவரொட்டிகள் கடந்த 6ஆம் நள்ளிரவு ஒட்டப்பட்டிருந்தது. நாய்க்குட்டிகளை வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசிகள் என குறிப்பிட்டு மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்ணாண்டோவினதும் சுதந்திர ஊடக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சுனில் ஜயசேகரவினதும் தொலைபேசி இலங்கங்களை இனந்தெரியாத நபர்கள் குறிப்பிட்டிருந்தனர். (ற)

# யாழ்தேவியில் குழப்பம்: இராணுவத்தினர் மூவர் கைது



கொழும்பு, ஓக.30

யாழ்தேவி ரயிலில் குழப்பம் விளைவித்தனர் என்று மூன்று இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரயில் பரிசோதகருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மூன்று இராணுவத்தினரும் நேற்று கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த யாழ். தேவி ரயிலில் அனுராதபுரத்தில் வைத்து இராணுவ வீரர்கள் ஏறியுள்ளனர். ரயில் பரிசோதகருடன் ஏற்பட்ட தகராறை அடுத்து; அவர் மீது மூன்று இராணுவத்தினரும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான ரயில் பரிசோதகர் கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பனாகொடை இராணுவ முகாமைச் சேர்ந்த மூன்று வீரர்களே கைதாகியுள்ளனர். கல்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# இலங்கையின் விமர்சனம் என்னைப் பாதிக்கவில்லை

## நவநீதம்பிள்ளை தெரிவிப்பு



கொழும்பு, ஓக.30

இலங்கை போன்ற நாடுகளில் தான் எதிர்கொண்ட விமர்சனங்கள் தன்னைப் பாதிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் பதவி விலகவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

இலங்கையில் புலி என வர்ணிக்கப்பட்டமை மற்றும் இஸ்ரேலின் குற்றச்சாட்டுகள் உங்களை பாதிக்கவில்லையா என்று கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு பதிலிளித்துள்ளார்.

"இல்லை. நான் தார்மீக அதிகாரத்துடன்தான் பேசுகிறேன் என்பது குறித்து உயர்ந்தபட்ச நம்பிக்கை கொண்டிருந்தேன். இவ்வாறான கருத்துகள் என்னை பாதிப்பதில்லை. நாங்கள் அவர்களுக்கு உதவுவதால் எங்களது அலுவலகத்தின் பணிகளை பாராட்டும் 190 வேறு நாடுகள் உள்ளன. முக்கியமான சம்பவங்களை விசாரணை செய்ய வேண்டியதன் அவசியம் அந்த நாடுகளுக்குத் தெரியும். அதனால் எங்களது பணிகளை தொடர்கிறோம்" - என்று பதிலளித்துள்ளார் நவி.

மனித உரிமை விடயங்களில் உலக நாடுகள் எதிர்பார்க்கும் தராதரத்திலிருந்து அமெரிக்கா விலகிச் செல்கிறது என்ற சர்ச்சைக்குரிய கருத்தையும் அவர் அந்தச் செவ்வியில் முன்வைத்துள்ளார்.(ற)

# முக்கொலையுடன் தொடர்பான இருவருக்கு தூக்கு தண்டனை

கொழும்பு, ஓக.30

காலி, உடுகம பிரதேசத்தில் இடம்பெற்ற முக்கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து காலி மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் மற்றும் மகள் ஆகிய மூவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைதான இருவர், குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட நிலையில் நேற்றுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

கள்ளத்தொடர்பொன்றே இந்த முக்கொலைக்கு கார ணம் என விசாரணைகளின் போது கண்டறியப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். (ற)

# புகலிடக் கோரிக்கையாளருக்காக புதிதாக இரு முகாம்கள் அமைப்பு

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

கொழும்பு, ஓக.30

வெளிநாட்டு புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து வைக்கும் நோக்கில் இரண்டு புதிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான ஏற்பாடுகளை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்மேற்கொண்டுவருகின்றது. இலங்கையில்புகலிடம்கோரும் வெளிநாட்டுப் பிரஜைகளை தடுத்து வைக்கும் நோக்கிலேயே இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொழும்பு மற்றும்பூசாஆகிய இடங்களில்இந்த முகாம்கள்அமைக்கப்பட்டுள்ளன.

நுழைவிசைவுச் சட்டங்களை மீறி நீண்ட காலம் நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகளை தடுத்து வைக்க மிரிஹானவில் ஒரு முகாம் காணப்படுகின்றது. இந்த முகாமில் பெரும் எண்ணிக்கையிலான புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தில் பதிவு செய்துகொண்ட ஆயிரத்து 500 வெளிநாட்டுப் பிரஜைகள் தற்போது தடுப்பு முகாம்களில் தங்கியிருக்கின்றனர். குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் புகலிடம் கோரி வருகின்றனர். (ற)

# "ஷில்போதயம் 2014" தேசிய கைவினைக் கண்காட்சி நேற்றுமுன்தினம் ஆரம்பம்



கொழும்பு, ஓக.30

"ஷில்போதயம் 2014" தேசிய கைவினைக் கண்காட்சி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. அதை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அவர்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின்னர் காட்சிக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த கைவினைப் பொருள்களைப் பார்வையிட்ட அமைச்சர்கள் அடங்கிய குழுவினர், துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி, அவர்களின் தேவை கள் மற்றும் ஏனைய விடயங் கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியினூடாகக் கடன் வழங்கும் பொருட்டு, அதற்கான பத்திரங்களைப் பயனாளிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வழங்கியதுடன், சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கி ஓய்வுதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில் அதற்கான பத்திரங்களையும் பயனாளிகளுக்கு வழங்கினார். (ற)

## தரம் 4, 3 மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி!

**2015, 2016** ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கான **புலமைச்சுடர்** கையேடானது **செப்ரெம்பர் 08** ஆம் திகதியிலிருந்து வெளிவரவுள்ளது.



முற்றிலும் பாடத்திட்டத்தை தழுவியதாக பிரபல வளவாளர்களின் தயாரிப்பில் சிறந்த பயிற்சிகளுடன் மற்றும்,

தரம் 03, 04 மாணவர்களுக்கான வினாத்தாள்

தரம் 4, 3 கற்றல் குறிப்புகள்
தமிழ்மொழி, கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்

ஆங்கிலம்
சிங்களம்

கட்டுரைக்களம்

சங்கமம்

படக்குறிப்புக்கள்

கடந்தகால வினாக்கள் / பயிற்சிகள்

பகுதி I வினாக்களுக்கு விடை காணும் விளக்கங்கள்

**மாணவர்களின் சுமையைக் குறைத்து அவர்கள் வீட்டிலிருந்தே பூரண விளக்கத்துடன் பயிற்சியை மேற்கொள்வதற்கான ஒரு சிறந்த தெரிவு**

**தரம் 3, 4 மாணவர்கள் தமக்கிடையே பங்கிட்டு பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டடுள்ளது.**


**மாணவர்கள் சித்தியடையும் எண்ணிக்கையை அதிகரிக்க பாடசாலைகள், பெற்றோர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்பாசிரியர்களே புலமைச்சுடர் தொடருடன் இணைந்து கொள்ளுங்கள்.**

பரீட்சை அண்மித்த காலப்பகுதியில் புலமைச்சுடர் பெறும் புலமைசாலி அங்கத்தவர்களை ஒன்றிணைத்து உங்கள் பிரதேசத்திலேயே இலவசக் கருத்தரங்கினை நடாத்தி மாணவர்களை வழிப்படுத்த உள்ளோம். இச்செயற்றிட்டமானது வருடாவருடம் நடைபெறும் ஒன்றாகும்.

## பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

| யாழ்ப்பாணம் | ஆசிரியர் - கல்விச்சுடர் இல.85, ஜயந்த மல்லிமாரச்சி மாவத்தை, கொழும்பு-14. | ஏனைய பிரதேசங்கள் |
| --- | --- | --- |
| தொலைபேசி இல.: 077 4228102 / 077 1945812 | 011 5738855 / 078 2825009 | தொலைபேசி இல.: 071 8628379 / 011 5737599 |

# ஆபத்தான ரயில் பயணம்







## இன்றைய பேஸ்புக் தத்துவம்

வயதுப் பசங்க 'பிகரைப்' (பெண்களை) பார்க்கிறதும், வயசானவங்க 'சுகரைப்' (நீரிழிவு) பார்க்கிறதும் சகஜம்தான்.

## அஞ்சானுக்கு அஞ்சிய படங்கள் களம் இறங்குகின்றன


கடந்த இரண்டு வாரங்களாக அஞ்சான் வருகையையொட்டி பெரிய அளவில் படங்கள் எதுவும் வெளியாகவில்லை. பார்த்திபனின், கதை திரைக்கதை வசனம் இயக்கம் படம் மட்டும் வெளியானது. அஞ்சானின் வீழ்ச்சி கதை திரைக்கதை இயக்கம் படத்துக்கு சாதகமாக அமைந்தது. இதனால் கடந்த இரண்டு வாரங்களாக தேங்கி இருந்த படங்கள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன. 6 நேரடித் தமிழ் படங்களும் மூன்று டப்பிங் படங்களும் வெளிவந்துள்ளது.

**இரும்புக் குதிரை**

பரதேசி படத்தில் அழுக்காக நடித்த அதர்வா, படு ஸ்டைலாக மோட்டார் சைக்கிள் வீரனாக நடித்து வெளிவரும் படம். கதாநாயகியான ப்ரியா ஆனந்தும், அதர்வாவும் மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சாதனை படைத்திருக்கிறார்.

**சலீம்**

நான் படத்துக்கு பிறகு விஜய் அன்ரனி நடிப்பில் வரும் படம். கிட்டத்தட்ட நான் படத்தின் தொடர்ச்சிதான். சாவை முன்கூட்டியே அறிந்து கொண்ட ஒருவன், ஒரு நாளை தன் இஷ்டப்படி வாழ நினைக்கிறான். அதுதான் கதை.

**மேகா**

மங்காத்தா, இதற்கு தானே ஆசைப் பட்டாய் பாலகுமாரா, படங்களில் நடித்த அஸ்வின் சோலோ கதாநாயகனாக நடித்திருக்கும் படம். சிருஷ்டி டாங்கே கதாநாயகி. ஒரு பொலிஸ் அதிகாரியைக் கொன்ற இன்னொரு பொலிஸ் அதிகாரி பற்றி துப்பறியும் கைரேகை நிபுணன் பற்றிய கதை. மென்மையான காதலும் தடதட அக்‌ஷனும் நிறைந்த படம்.

**காதல் 2014**

2014 ஆம் வருடத்தில் காதல் எப்படி இருக்கிறது என்பதை சொல்லும் படம். ஒரு பெண் பலரால் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறாள். அய்யோ கற்பு போய் விட்டதே என்று உயிரை விடாமல். தன் இழப்புக்கு காரண மானவர்களைப் புத்திசாலித்தனமாகப் பழிவாங்கி விட்டு அது ஒரு விபத்து என்று சொல்லி தன் வாழ்க்கையை தொடருகின்ற கதை.

**சிவப்பு எனக்கு பிடிக்கும்**

மும்பை, கொல்கத்தாவில் இருப்பது போன்று எல்லா நகரங்களிலும் சிவப்பு விளக்குப் பகுதி அமைக்க வேண்டும் என்ற கருத்தை ஒரு பாலியல் தொழிலாளியின் வாழ்க்கை வழியாக சொல்லும் கதை. எழுத்தாளர் யுரேகா இயக்கி உள்ளார்.

**புதியதோர் உலகம் செய்வோம்**

இலஞ்ச ஒழிப்பை ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் இருந்தே தொடங்க வேண்டும் என்ற அப்துல் கலாம் சொன்ன வாக்கியத்தை மையமாக வைத்து தயாராகி இருக்கும் படம். சிறுவர்கள், இலஞ்சம் வாங்கும் தங்கள் பெற்றோரைத் திருத்துகிற கதை. சின்னத்திரை நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற குழந்தை நட்சத்திரங்கள் நடித்திருக்கிறார்கள்.

## இப்படியும் விளம்பரப்படுத்தலாம்



அப்பிள் நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர் தனக்கு ஆண் குழந்தை பிறந்த விடயத்தை வித்தியாசமாக இணையத்தில் விளம்பரப்படுத்தியுள்ளார். இந்த விளம்பரம் தற்போது பலரின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. அப்பிள் நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் அண்ட்ரியாஸ் கிளெய்ன்க் என்ற நபரே இவ்வாறு விளம்பரப்படுத்தியுள்ளார்.

கிளெய்னுக்கு அண்மையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. தனக்கு மகன் பிறந்ததை தனது நண்பர்களுக்குத் தெரியப்படுத்த தனியாக இணையத்தளம் ஒன்றை உருவாக்கினார் கிளெய்க். அதில் தனது மகன் குறித்து அவர் கூறியுள்ளதாவது.

புதிய சிறிய ரகம் ஜொனாதன் அறிமுகம். ஜொனாதன் (2014 வருட படைப்பு) 20 அங்குல நீளமுள்ள ஒரே உடல் அமைப்பு கொண்ட திடமான அழகை உடையது. ஒழுங்கான 10 விரல்கள் நேர்த்தியான பன்முகத் தொடுதல் அனுபவம் தரக் கூடியது.

கூடுதலாக, ஒன்று அல்ல பார்வைத் திறன் கொண்ட இரு கமராக்களைக் கொண்டது. ஒவ்வொன்றும் ரெடினா ரெசல்யூசனில் திகைக்க வைக்கும் படங்களைத் தருவது. இரு மைக்ரோ போன்கள் இரு புறமும் அமைந்து ஒவ்வொரு சத்தத்தையும் கேட்கும் திறன் கொண்டது.

நடுவில் அமைந்துள்ள ஸ்பீக்கர் உங்களை ஆச்சரியத்தின் எல்லைக்கே கொண்டு சென்று விடும். அதுவும் அதிகபட்சமாக 120 டெசிபல் அளவுள்ள சத்தத்தை அதிகமாக வெளியிடும் திறன் கொண்டது. இந்தப் படைப்பு 5 வேறுபட்ட சுவையை அறியத்தக்கது. ஆனபோதும் தற்பொழுது ஒரு சுவையை (பால்) மட்டும் அறியத்தக்கதாக உள்ளது. இது மாற்றத்துக்கு உட்பட்டது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

## ரிலாக்ஸா வாசியுங்க

### மகள்களைப் பெற்ற அப்பாக்கள்

மகள் : அப்பா, இந்தா அப்பா உனக்காக நான் சுட்ட தோசை...
அப்பா : ஆஹா ருசியா இருக்குடா செல்லக்குட்டி...
மகள்: அம்மா சுட்ட தோசைய விடவா ருசியா இருக்கு..?
அப்பா : ஆமா டா தங்கம்...
மகள் : பொய் சொல்லாதப்பா. அம்மா சுடுற தோசை அழகா வட்டமா இருக்கும். நான் சுட்டது பிஞ்சு போச்சு...
அப்பா : உங்க அம்மாக்கு என் மேல் பாசம் இல்லை. அதுதான் அவ சுடுற தோசை வட்டமா இருக்கு. நான் பிச்சு பிச்சு சாப்பிட வேண்டி இருக்கு. உனக்கு என் மேல அதிக பாசம் இருக்கு. அதுதான் நீ சுட்ட தோசைய எனக்காக பிச்சு குடுத்துருக்க. நீ சுட்ட தோசையில தான் டா குட்டி ருசி அதிகமா இருக்கு...

மகள் தவறாக செய்தால் கூட அதை ரசிப்பவர் தான் தந்தை. நமக்காகத் தானே இத்தனை கடினப்பட்டு செய்கிறாள் என்று உணர்ந்து கொள்வார்கள் மகளின் விடயத்தில் மட்டும்...!

## நச்சுனு கடி



பேருந்தில் இண்டு பெண்கள் ஒரு ஆசனத்துக்குச் சண்டை போட்டுக் கொண்டார்கள். யார் அமர்வது என்பதில் இருவருக்கும் வாக்குவாதம்.
பேருந்து நடத்துநர் "அம்மா உங்களில் வயதில் மூத்தவர் யாரோ அவங்க உட்காருங்க" என்றார்.
கடைசி வரை அந்த ஆசனம் காலியாகவே இருந்தது !!!!

---

அமைச்சரே! மகாராணி மீது அயல் நாட்டு அரசருக்கு ஒரு கண் என்று எதை வைத்து சொல்கின்றீர்?

முன்பெல்லாம் அவரிடமிருந்து ஓலை வரும். இப்போது சேலை வருகிறதே..!



# புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலைக்கு கொக்கிளாயிலிருந்து கனியமணல் கடத்தல்

## கடற்கரையில் இதுவரை 250 'லோர்ட்' அகழப்பட்டது

முல்லைத்தீவு, ஓக. 30

புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலைக்கு, முல்லைத்தீவு கொக்கிளாய் கடற்கரையிலிருந்து அனுமதி பெறப்படாமல் கடந்த இருதினங்களாகக் கனிய மணல் அகழப்பட்டுக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இதுவரை சுமார் 250 லோர்ட் மணல் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கொக்கிளாய் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில், கடற்கரையோரமாக உள்ள பிரதேசத்திலேயே இந்த மணல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இல்மனைட் கனிய வளம் கூடுதலாகக் கொக்கிளாய் கடற் பிரதேசத்தில் காணப்படுகின்றது. அண்மைக் காலத்தில் குறித்த பகுதியில் கனிய மணல் அகழப்படவில்லை.

இருப்பினும் கொக்கிளாய் கிழக்கில் 13 பொதுமக்களுக்குச் சொந்தமான 47 ஏக்கர் காணியில் இல்மனைட் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த காணிகளைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தலும் ஒட்டப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலைக்குரிய டிப்பர் வாகனங்களில் வந்த சிலர், கடந்த புதன்கிழமை இரவும், வியாழக்கிழமை காலையும் கொக்கிளாயில் கனிய மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தனர்.

சுமார் 250 லோர்ட் மணல் இதுவரை அவர்களால் அகழப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பகுதிக்கு அண்மையிலுள்ள பொது மக்கள் இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அந்தப் பகுதியில் கனிய மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள், 2012 ஆம் ஆண்டு பெற்ற அனுமதிப் பத்திரத்தை வைத்தே மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பின்னரே பிரதேச செயலாளரால் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதியில் மணல் அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனாலும், பொலிஸ் பாதுகாப்பு எதுவும் போடப்படாமையால் மீண்டும் சட்டவிரோத கனிய மணல் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படக் கூடும் என்று பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (து-5)

## வெள்ளி விழா காண்கிறது மடுமாதா சிறிய குருமடம்

மன்னார், ஓக 30

மன்னார் மடுமாதா சிறிய குருமடம் ஸ்தாபிக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு வெள்ளிவிழா திருப்பலி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது

சிறிய குருமடம் மன்னாரில் ஸ்தாபிக்கப்பட்டது முதல் 25 வருடங்களாக தேவ அழைத்தலினுடாக இறைபணியாற்றத் தெரிவு செய்யப்பட்ட துறவிகள் தமது இறை அழைத்தலுக்கான மறைக்கல்வியை மடுமாதா சிறிய குருமடத்திலேயே கற்று வந்திருந்தனர்.

இந்நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தக் குரு மடத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்கள் நடை பெறவுள்ளன.

வெள்ளிவிழா நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் தேவ அழைத்தல் என்னும் கருப்பொருளில் கண்காட்சி ஒன்று இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. (த)



கிளிநொச்சி மாவட்டத்தில் மழை பெய்ததன் காரணமாகக் காலபோக நெற்செய்கைக்கான நிலம் தயார்ப்படுத்தல்களில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (து-18)

## வவுனியாவில் வீடொன்றில் இறந்து கிடந்தது புலிக்குட்டி

வவுனியா, ஓக 30

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் புலிக் குட்டியொன்றை இறந்த நிலையில் மீட்டெடுத்திருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றிருந்து நேற்றுக் காலை புலிக்குட்டியொன்று இறந்தநிலையில் கிடந்ததை அவதானித்த வீட்டார் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து அங்கு தாம் சென்று அதனை மீட்டதாகவும், இவ்விடயம் வனவிலங்கு அதிகார சபையின் கவனத்துக்குக் கொண்ட வரப்பட்டதாகவும், இந்தப் புலிக்குட்டி எங்கிருந்த வந்தது என்பது இதுவரை கண்டுபிடிக்கவில்லை எனவும் பொலிஸார் மேலும் கூறினர்

இது குறித்து குருமன்காட்டுப் பகுதி மக்கள் தெரிவிக்கையில், புலிக்குட்டியொன்று வவுனியாவில் ஊர்ப் பகுதிக்கு வந்து இறந்து கிடக்கின்றமை இதுவே முதல் தடவையாகும். இது எமக்கு பயமாகவுள்ளது என்று அவர்கள் கூறினர். (து-402)

## 148 ஆவது ஆண்டு பொலிஸ் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சிரமதானம்



வவுனியா, ஓக 30

148 ஆவது ஆண்டு பொலிஸ் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சிரமதானப் பணிகளை அரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

எதிர்வரும் 3ஆம் திகதி பொலிஸ் திணைக்களத்தின் 148 ஆவது ஆண்டு நிகழ்வு கொண்டாடப்படவுள்ள நிலையில் பொலிஸ்மா அதிபர் இலங்கக் கோனின் ஆலோசணைக்கு அமைய வவுனியா மாவட்ட பொலிஸ் அதிகாரி வசந்த விக்கிரமசிங்கவின் வழி நடத்தலில் நேற்றில் இருந்து ஒரு வாரத்துக்கு பொலிஸ் உத் தியோகத்தர்களினால் வவுனியாவில் உள்ள பல இடங்களில் சிரமதான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு வவுனியா ரயில் நிலையத்தின் முன்பாக நேற்று நடைபெற்றது. (து-421)

## யானைகளிடம் இருந்து எம்மை விடுவியுங்கள் வடகாடு மக்கள் உருக்கமான வேண்டுகோள்

வவுனியா, ஓக. 30

யானைகளின் தொல்லைகளிலிருந்து தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, வடகாடு மக்கள் அரசியல்வாதிகளிடம் உருக்கமான கோரிக்கை விடுத்துள் ளனர்.

செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வடகாடு கிராமத்துக்குள் மாலையிலும் இரவிலும்புகும் யானைகள் பெரும் அட்டகாசம் செய்கின்றன. அவற்றால் தமது இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது என்று மக்கள் முறையிடுகின்றனர்.

1977 ஆம் ஆண்டு தென் இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன் முறைத் தாக்குதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களில் 125 குடும்பங்களே வடகாட்டில் குடியேறின.

போர் காரணமாக 1990 ஆம் ஆண்டு மீண்டும் இடம் பெயர்ந்து வன்னிக்குள் அலைந்து திரிந்த இவர்கள், போர் முடிந்ததைத் தொடர்ந்து தமது கிராமத்துக்குத் திரும்பினர்.

கூலி வேலையே இங்குள்ள பெரும்பாலானவர்களின் தொழில். அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ள காயா குளத்துக்கு கீழுள்ள காடுகளை துப்பரவு செய்து நிலங்களைப் பகிர்ந்தளித்துத் தந்தால் தம்மால் விவசாயம் செய்ய முடியும் என்று அந்த மக்கள் கூறுகிறார்கள்.

எனினும் கிராமத்தில் வாழ்வதற்கும் வாழ்வாதாரங்களைத் தேடுவதற்கும் யானைகள் தமக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யானைகளின் அச்சுறுத்தல்களிலிருந்து விடுபட்டுத் தாம் பாதுகாப்பாக வசிக்க தமது கிராமத்துக்கு மின்சார வசதியை ஏற்படுத்தி தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிராமத்தின் உள்ளக வீதிகளை புனரமைத்து தருவதும் அவசியம் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமது கிராமத்துக்கு கடந்த வாரம் வருகை தந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமும் அந்த மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். (உ-402)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய நபருக்கு அபராதம்

கிளிநொச்சியில் அனுமதியின்றி மணல் ஏற்றிய நபரொருவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் 50 ஆயிரம் தண்டம் விதித்துள்ளது.

கிளிநொச்சி கோரக்கன்கட்டுப் பகுதியில் அனுமதியற்ற வகையில் மணல் ஏற்றியவரை கைது செய்த பொலிசார் கிளிநொச்சிநீதிமன்றில் நேற்று முந்தினம் முன்னிலைப்படுத்தினர். இதன் போது மேற்படி தண்டம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது. (து-18)

## மானிப்பாய் வைத்தியசாலையில் மருந்தாளர் ஒருவர் மட்டுமே

### இதனால் நோயாளிகள் சிரமம்

வலி.தென்மேற்கு, ஓக.30
மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அங்கு ஒரே ஒரு மருந்தாளர் மட்டுமே கடமையாற்றுவதால் நோயாளர்கள் தமக்கான மருந்துகளைப்பெற்றுக்கொள்ள கால் வலிக்க நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த நிலை குறித்து கவலை தெரிவித்துள்ள நோயாளர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்தியில் மட்டும் அக்கறை காட்டிவரும் நோயாளர் நலன்புரி சங்கம், நோயாளர்களின் நலன் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மருந்தாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

மானிப்பாயில்வாடகைவீடொன்றில் வசதியீனங்கள் மத்தியில் சிறிய இடத்தில் இயங்கி வந்த பிரதேச வைத்தியசாலை இந்தப் பகுதி மக்கள் இணைந்து மேற்கொண்ட முயற்சியால் மக்கள் வழங்கிய நிதியின் மூலம் ஆனைக்கோட்டை நவாலி வீதியில் மூத்த விநாயகர் ஆலயத்துக்கு அருகில் கொள்வனவு செய்யப்பட்ட 17 பரப்புக் காணியில் பல வசதிகளுடன் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் பிரதேச வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இதையடுத்து மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தினசரி 300 இற்கும் மேற்பட்ட வெளிநோயாளர்கள் வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்காக வருகிறார்கள்.

நோயாளர்களின்எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து நோயாளர் நலன்புரி சங்கம் எடுத்த நடவடிக்கையின் பயனாக மேலும் ஒரு வைத்தியர் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார். தற்பொழுது இரு வைத்தியர்கள் இங்கு கடமையாற்றி வருகிறார்கள்.

இதேவேளை, வைத்தியசாலை அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு நோயாளர் அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய அம்புலன்ஸ், ஜெனரேற்றர் உட்பட பலவசதிகள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மேற்படி வைத்தியசாலையில் ஒரே ஒரு மருந்தாளர் மட்டும் கடமையாற்றுவதால் நோயாளர்கள் தமக்கான மருந்துகளைப் பெற்றுக் கொள்ள கால் வலிக்க நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. முதியோர்கள், கைக்குழந்தைகளுடன் தாய்மார், சிறுவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் மருந்தைப் பெற்றுக் கொள்ள காத்திருக்க வேண்டிய நிலைக்குள்ளாகிறார்கள்.

இந்த நிலைகுறித்து கவலை தெரிவித்துள்ள நோயாளர்கள், நோயாளர்களின் நலன் கருதி மருந்தாளர்களின் எண்ணிக்கையை இரண்டாக அதிகரிப்பதற்கு நோயாளர் நலன்புரி சங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரியுள்ளனர்.

இதேவேளை குடாநாட்டிலுள்ள சில பிரதேச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர்களின் எண்ணிக்கைக் கமைய இரு மருந்தாளர்கள் கடமையாற்றி வருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (த-115)



நாடளாவிய ரீதியில் மருத்துவவியல் தொழில் சார் வல்லுநர்கள் மேற்கொண்டுவரும் பணிப் புறக்கணிப்பால் நோயாளர்கள் பாதிப்படைகின்றனர். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மருந்து பெறும் இடத்தில் நேற்று நீண்ட நேரம் காத்திருந்த நோயாளர்கள் இவர்கள்... (த-9)

## மாநகர சபைச் செயற்பாடுகள் சில தொடர்ந்தும் வலுவற்ற நிலையில்

### தொழிற்சங்கத் தலையீடே காரணம் என்கிறார் எதிரணி உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஓக.30
கடந்த காலங்களை விட யாழ். மாநகர சபையில் பௌதீக வளங்களும், ஆளணி வளங்களும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் சில பகுதிகளில் வலுவான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு தொழிற் சங்கத்தின் தலையீடும் காரணமாக உள்ளது என்று யாழ்.மாநகர சபையின் எதிரணி உறுப்பினர் க.தங்கராஜசிங்கம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது சுகாதாரக் குழுவின் கூட்ட அறிக்கை அங்கீகாரத்துக்கு எடுக்கப்பட்ட சமயம் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களை விட யாழ். மாநகர சபையில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் அதிகரிப்பு, வாகனங்கள் 4 மடங்காக அதிகரிப்பு, பௌதீக வளங்கள் எனப் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சுகாதாரப் பிரிவுக்கு வலுவான தொழிற் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் வேலைத் திட்டங்கள் உரியமுறையில் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு அளவுக்கதிகமாகத் தொழிற் சங்கத்தின் தலையீடும் காரணமெனக் கூறப்பட்டுள்ளது. தேர்தல் பரப்புரைக் காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையப் புனரமைப்பு தொடர்பில் கூறப்பட்டிருந்தபோதும் அதற்கான நடவடிக்கைகள் கூட மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தார். (த-14-7)

## வலி.தென்மேற்கில் கொல்களம் இல்லை இறைச்சிக் கடைக்காரர்கள் பெரும் சிரமம்

வலி.தென்மேற்கு, ஓக. 30
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஏழு மாட்டிறைச்சிக் கடைகள் இருந்த போதிலும் கொல்களம் ஒன்று இல்லாததால் மாட்டிறைச்சிக் கடைக்காரர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதுடன் மாடு வெட்டுவதால் கிடைக்கும் வருமானத்தையும் பிரதேச சபை இழந்து வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள சுகாதாரப் பரிசோதகர், இவற்றைக் கருத்திற் கொண்டு வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு வசதியாகப் பொருத்தமான இடத்தில் கொல்களமொன்றை அமைக்குமாறு தவிசாளரைக் கோரியுள்ளார்.

காக்கைதீவு பகுதியில் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் பல வருடங்களாக இயங்கி வந்த கொல்களம் நாட்டில் நிலவிய போர்ச் சூழ்நிலை காரணமாக தொடர்ந்து இயங்குவதற்கு இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டதால் மூடப்பட்டது.

இதையடுத்து பண்டத்தரிப்பு பகுதியில் காட்டாப்புலத்திலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான 40 பரப்புக் காணியில் பல இலட்சம் ரூபா செலவில் கொல்களம் அமைக்கப்பட்டு இயங்கி வந்தது.

அந்தக் காணியை பிரதேச சபையின் அனுமதியின்றி ஆக்கிரமித்துள்ள பாதுகாப்புப் படையினர் அங்கு பெரிய முகாம் அமைத்துள்ளனர். இதனால் அங்கு இயங்கி வந்த கொல்களமும் மூடப்பட்டது.

இதனால் தற்பொழுது வலி. தெற்குப் பிரதேச சபையின் கீழுள்ள கொல்களத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலை வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது. பல கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கொல்களத்துக்கு மாடுகளைக் கொண்டு செல்வதால் கடைக்காரர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாவதுடன் மாடு வெட்டுவதால் கிடைக்கும் வருமானத்தையும் பிரதேச சபை இழந்து வருகிறது. இந்த நிலையைக் கருத்திற் கொண்டு வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பொருத்தமான இடத்தில் கொல்களமொன்றை அமைக்குமாறு சுகாதாரப் பரிசோதகர் தவிசாளரைக் கோரியுள்ளார். (த-115)

## யாழ். மாநகர சபையில் நிலவிய சாரதிப் பற்றாக்குறை நிவர்த்தி

யாழ்ப்பாணம், ஓக. 30
யாழ்.மாநகர சபையில் வெற்றிடமாக இருந்த வாகனச் சாரதிகளின் ஆளணிப் பற்றாக்குறை அதன் முக்கியத்துவம் கருதி தற்போது நிரப்பப்பட்டுள்ளது என யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும் போது,

கடந்த காலங்களில் கடமையில் இருந்த சாரதிகள் முதுமை அடைந்துள்ளதாலும், உடல் நலக்குறைவுக்கு உட்பட்டு வந்ததாலும் சாரதிகளை உள்வாங்க வேண்டி ஏற்பட்டது. இது தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரிடம் அனுமதி கோரப்பட்டபோது அதற்கான அனுமதி கிடைக்கப் பெறவில்லை.

ஆனாலும் வாகனச் சாரதிகள் தேவை என்ற நிலை ஏற்பட்டபோது வேறு வேலைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த தொழிலாளர்களில் வாகனம் செலுத்த அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தவர்களும் இருந்தபடியால் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (த-14)

## திண்மக் கழிவுகளை வீட்டு வளவுகளில் புதையுங்கள்

### நல்லூர் பிரதேச சபை மக்களிடம் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.30
கடந்த புதன்கிழமை முதல் வீடுகளில் சேரும் திண்மக் கழிவுகளைத் தத்தமது வீட்டு வளவுகளில் புதைக்குமாறு நல்லூர் பிரதேச சபை தனது பகுதியில் உள்ள மக்களுக்கு அறிவித்துள்ளது.

இதுவரை கோண்டாவில் பஸ் டிப்போவுக்குச் சமீபமாக உள்ள காணியில் திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன. அந்தக் காணி முற்று முழுதாக குப்பைகளால் நிரம்பியுள்ளதால் தொடர்ந்தும் அங்கு திண்மக் கழிவுகளைக் கொட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச சபை கூறியுள்ளது.

அண்மையில் அரியாலை கண்டி வீதியில் 800 மீற்றர் தூரத்தில் திண்மக் கழிவுகளைக் கொட்ட தனி நபர் ஒருவர் இரண்டு ஏக்கர் காணியை அன்பளிப்புச் செய்ததாகத் தெரிவித்த நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார், இந்தக் காணியில் திண்மக் கழிவுகளைக் கொட்டவும், பசளைகளை உற்பத்தி செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

எனினும் குறிப்பிட்ட இடம் விவசாய காணி என்பதால் அதில் திண்மக் கழிவுகளைப் போடக்கமநல சேவை ஆணையாளர் அனுமதி வழங்க மறுத்துள்ளார். அத்துடன் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளரினால் முதலமைச்சரின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் படி இந்தத் திண்மக் கழிவு நிலையத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

திண்மக் கழிவுகளைப் புதைப்பதற்கான இடம் இதுவரை நல்லூர் பிரதேச சபைக்குக் கிடைக்கவில்லை.

இதனையடுத்து பிரதேசத்தின் சுகாதார நலன்களைக் கருத்தில் கொண்டு தமது வீடுகளில் சேகரிக்கும் குப்பைகளை வெளியிடங்களில் கொட்டாமல் வீட்டு வளவுகளில் புதைத்து உதவுமாறும், திண்மக் கழிவுகளைக் கொட்டுவதற்கு உரிய இடம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் வரை இந்த நிலைமை நீடிக்கும் என்பதால் பொதுமக்கள் தமது கோரிக்கையை ஏற்று ஒத்துழைக்குமாறும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் கேட்டுள்ளார். (த-7)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற் போனோரை இன்று கண்ணீருடன் நினைவுகூருவோம்

காணாமற்போனோர் பிரச்சினை தேசங்கள் கடந்து உலகளாவிய பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்ததன் விளைவாகவே காணாமற்போனோர் பிரச்சினையை அனைவரினதும் கவனத்துக்குக் கொண்டுசென்று மனித தர்மத்தையும் மனித கௌரவத்தையும் நிலைநாட்ட வேண்டும் என்ற நல்லெண்ண நோக்கத்தோடு இன்றைய நாளை அதாவது ஓகஸ்ட் 30ஆம் நாளை ஐக்கிய நாடுகள் சபை அனைத்துலக காணாமற்போனோர் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது. இலங்கை உட்பட உலகெங்கும் காணாமற்போன பல்லாயிரக்கணக்கானோர் பற்றியும் அவர்களின் இருப்புப் பற்றியும் சிறு தகவலாவது கிடைக்காதா என்ற ஏக்கத் துடன் இரவையும் பகலாக்கி விழித்திருக்கும் காணாமற் போனோர் குடும்ப உறவுகளின் துன்ப துயரங்களில் நாம் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இத்தகைய மனித தர்ம சிந்தனையை ஒவ்வொரு மனிதரும் தமக்குள் வளர்த்துக்கொள்ளவேண்டும். இதற்கான வாய்ப்பை இன்றைய தினம் அளிக்கிறது. 2009 மே மாதம் முடிவுக்கு வந்த போரில் இலங்கையில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று தருஸ்மன் தலைமையிலான ஐ.நா. நிபுணர்கள் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. போரின் போது வன்னியில் இருந்தவர்களின் எண்ணிக்கையையும் போரின் பின்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர்களின் எண்ணிக்கை யையும் கூட்டிக் கழித்துப் பார்த்து இறந்தோர் எண்ணிக்கை, ஐ.நா. நிபுணர்கள் குழுவால் தெரிவிக்கப்பட்ட எண்ணிக் கையை விட மூன்று மடங்கு அதிகம் என்ற புள்ளிவிவரமும் உண்டு. இவர்கள் எல்லோரும் காணாமற்போனோர் பட்டியலிலேயே அடங்குகின்றனர்.

இலங்கையில் போர் முடிவடைந்த பின்னரும் காணாமற்போனோர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஆள்கள் காணாமற்போகும் சம்பவங்கள் இன்னும் இடம்பெற்றுக்கொண்டு இருக் கின்றன. காணாமற்போனோர் குறித்த உண்மைத் தகவல்களை வெளியிடுவதிலும் அவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதிலும் அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். இப்படியான நிலையிலும் தமது சாட்சியங்களைக் கண்ணீர் மல்க பதிவுசெய்து வருகின்றனர். இவர்களின் துணிச்சலைப் பாராட்டவேண்டும். இலங்கை அரசின் இந்த செயற்பாட்டை உலகின் கவனத்துக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் காணாமற்போனோர் குடும்ப அங்கத் தவர்களை ஒருங்கிணைத்து இன்று வவுனியாவில் கவன ஈர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

காணாமற்போனோரை மீட்டு அவர்களை அவர்களது குடும்பத்துடன் இணைக்கவேண்டும் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும். அவர்களை வேட்டையாடியோரை நீதியின் முன் நிறுத்தவேண்டும். எதிர்காலத்தில் காணாமற்போவது முற்றாகத் தடுக்கப்பட வேண்டும். காணாமற்போனோரின் குடும்பங்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்யவேண்டும். இத்தகைய பன்முக இலக்குகளை முன்வைத்தே காணாமற்போனோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் மொத்தமாக எத்தனைபேர் காணாமற்போயிருக்கிறார்கள் என்று எவருக்கும் திட்டவட்டமாகத் தெரியாது. ஆனால் இந்த எண்ணிக்கை இலட்சக்கணக்கில் இருக்கும் என்று மனித உரிமைக்காகக் குரல்கொடுக்கும் மையங்கள் எதிர்வு கூறுகின்றன.

மனிதன் இன்று நாகரிகத்தின் உச்சிக்கே சென்று விட்டான். தனது ஆற்றல் பிரபஞ்சத்தையே தாண்டிவிட்டது என்று அவன் மார்தட்டுகிறான். ஆனால் இன்றைய நவீன உலகிலே மனிதனை மனிதனே வேட்டையாடும் காட்டு மிராண்டிச் செயல் காரணமாகவே காணாமற்போனோர் என்ற புதிய அடையாளம் மனிதனுக்கு குத்தப்பட்டு காணாமற்போனோர் தினத்தை வேதனையுடன் கொண்டாடும் நிலைக்கு உலகம் தள்ளப்பட்டிருப்பது துரதிர்ஷ்டம் வாய்ந்ததாகும்.

காணாமற்போனோரை நினைவுகூரும் இன்றைய தினத்தில் சுவீடனைச் சேர்ந்த ரவுல் வாலன் பெக்கை நாம் மறந்துவிட முடியாது. இவர் 20ஆம் நூற்றாண்டில் மிகவும் தலைசிறந்த மனிதாபிமானி. அதனால்தான் காணாமற்போனோரை மீட் கும் புனிதப் போரில் அனைவரும் ரவுல் வாலன் பெக்காக மாற வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் அறைகூவல் விடுக்கின்றனர். இலங்கை அரசும் ரவுல் வாலன் பெக்காக மாற வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை, இது மனிதாபிமானப் பிரச்சினை. ஆயிரக்கணக்கான உறவுகளின் கண்ணீருடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அரசு மனிதாபிமானத்துடன் செயற்பட்டு குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்தவேண்டும்.

# ரணில் போன்ற ‘காட்போட்’ வீரரால் தூக்கவே முடியாது மஹிந்தவை

## இலங்கையிலும் உதிப்பாரா ஒரு ‘மோடி’?

சிங்கள மூலம் : சந்துன் ஜீவந்த
தமிழில் : வீ.எஸ்.ரீ



இம்முறை காங்கிரஸ் அரசு படு தோல்வி அடையும், சோனியாவும் சரி ராகுலும் சரி அதிகாரம் இழக்கப் போகிறார்கள்; இம்முறை பா.ஜ.கவே வெற்றிபெறும்.

கடந்த இந்தியப் பொதுத் தேர்தலுக்கான பரப்புரைகள் சூடு பிடித்திருந்த சமயத்தில் தேர்தல் முடிவுகள் குறித்து இலங்கையில் மட்டுமன்றி, உலக நாடுகள் பலவற்றிலும் பொதுவாக மேற்குறிப்பிட்ட விதத்திலான எதிர்வு கூறல்கள் வெளியாகியிருந்தன.

குறிப்பாக இந்தியப் பொதுத் தேர்தலில் பா.ஜ.க.வெற்றி பெறுமா னால், அது இலங்கையில் ஐ.தே.கட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வழிவகுக்கும் என்றதொரு கருத்து பொதுமக்கள் மத்தியில் தலையெடுத்திருந்தது.

பா.ஜ.கட்சிக்கு ஐ.தே.கட்சியுடன் நெருக்கம் இருந்தமை போன்று காங்கிரஸ் கட்சிக்கு சுதந்திரக் கட்சியுடன்-மஹிந்த தரப்பினருடன் நெருக்கம் உள்ளது. இந்தியாவில் காங்கிரஸ் அதிகாரம் இழக்க நேரிட்டால் அது இலங்கையில் சுதந்திரக் கட்சியின் அதிகாரம் வீழ்ச்சியுறுவதற்கான பின்னணியை உருவாக்கும்.

இது காங்கிரஸ் கட்சியை பா.ஜ.க. தோற்கடித்து அதிகாரத்தைக் கைப்பற்றுமென்ற அறிகுறி தென்பட்டபோது ஐ.தே.கட்சி தரப்பினர் மத்தியில் உருவாகியிருந்ததொரு எதிர்பார்ப்பாகும்.

மேற்குறிப்பிட்ட கருத்து நிலைப்பாட்டிலும் உண்மை இல்லாமலில்லை. அரசியல் வரலாற்றை நோக்கினால், இந்தியாவில் காங்கிரஸ் கட்சி அதிகாரத்திலிருந்த வேளைகளில், இலங்கையில் சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளுக்குப் பல வழிகளில் உதவி வந்துள்ளது. இவ்விரு அதிகாரத் தரப்புக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. இந்திராகாந்தி மற்றும் சிறிமாவோ ஆகியோர் அக்கா, தங்கை போன்று பழகி வந்திருந்தனர். 2004 ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டு முன்னணி அரசு இலங்கையில் அரசமைத்த வேளை இந்தியாவில் காங்கிரஸ் கட்சி



அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. இதனாலேயே இம்முறை காங்கிரஸ் கட்சி பதவி இழக்க நேர்ந்தமை போன்று சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசும் பதவி இழக்க நேருமெனப் பலர் எதிர்வு கூற நேர்ந்தது.

ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை. சோனியா மற்றும் ராகுல்காந்திக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடி பொது மக்களை ஒன்றுதிரட்ட பா.ஜ.கட்சிக்கு மோடியின் தலைமைத்துவம் வாய்த்தமை போன்று, நாட்டு மக்களை அரசுக்கு எதிராக ஒன்று திரட்ட, ஐ.தே. கட்சிக்கு அதனைச் சரியான பாதையில் வழிநடத்தக்கூடிய தலைமைத்துவம் அமையாததே அதற்குக் காரணமாகும்.

ஐ.தே.கட்சியைச் சரியான பாதையில் வழிநடத்தத்தக்க தலைவர் அமைந்திருந்தால், சோனியாவையும் ராகுல் காந்தியையும் அதிகாரத்திலிருந்து மோடி அகற்றியமை போன்று, மஹிந்தவையும் அதிகாரத்திலிருந்து வெளியேற்ற முடிந்திருக்கும். ஏதோ மஹிந்தவின் அதிர்ஷ்டம், இலங்கையில் எதிர்க்கட்சியில் மோடி போன்ற ஒருவர் உருவாகியிருக்காததால், மஹிந்தவால் எவ்வித அச்சமுமின்றி அதிகாரத்தில் நிலைத்திருக்க முடிகிறது.

ஐ.தே.கட்சி, மோடியிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளாததாலேயே இன்னமும் எதிர்க்கட்சியிலேயே இருக்க நேர்ந்துள்ளது. இலங்கையில் மோடியொருவர் உருவாகாததால் இன்று மஹிந்த எல்லையில்லா மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றார்.

மோடியிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளாத ரணிலுக்கும் ஐ.தே.கட்சிக்கும் தற்போது ஆகக் குறைந்தது பாகிஸ்தானின் இம்ரான்கானிடமிருந்தாவது பாடம் கற்றுக் கொள்ள முடியும். இம்ரான்கான் பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகளில் இரண்டாவது பெரிய கட்சியான தெஹ்ரீக் இன்சாப் கட்சியின் தலைவராவார். பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் 342 ஆசனங்களில் 34 ஆசனங்களை இம்ரான்கானின் தெஹ்ரீக் இன்சாப் கட்சி கொண்டுள்ளது.

இம்ரான்கானின் தெஹ்ரீக் இன்சாப் கட்சி முன்னெடுத்துவரும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக இன்றைய நாள்களில் பாகிஸ்தானில் பரபரப்பும் பதற்றமுமானதொரு சூழ்நிலை நிலவுகின்றது. பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி துறக்க வேண்டுமென வலியுறுத்தி தெஹ்ரீக் இன்சாப் கட்சி முன்னெடுத்து வரும் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் காரணமாக தற்போது நவாஸ் ஷெரீப்பின் அரசு ஆட்டம் காணும் நிலையில் உள்ளது. அரச எதிர்ப்பாளர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு அண்மையில் பாகிஸ்தான் நாடாளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். தற்போது பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரம் தெஹ்ரீக் இன்சாப் கட்சியினரின் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காரணமாக சோபையிழந்து, நிர்வாகம் சீர் குலையும் நிலையை எட்டியுள்ளது. அந்த வகையில் தெஹ்ரீக் இன்சாப் கட்சியினரின் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் அந்தக் கட்சியைப் பொறுத்தவரை வெற்றியளிக்கும் ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது.

இத்தகைய நிலையில் இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ளத் தவறிய பாடத்தை, பாகிஸ்தானிடமிருந்தாவது கற்றுக்கொள்ள ரணிலும் ஐ.தே.கட்சியும் தயாரென்றால் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களுக்கு புதிய எதிர்பார்ப்பொன்றை உருவாக்கிக்கொள்ள இயலும். ஆனால் துரதிருஷ்டவசமான நிலை என்னவென்றால், இம்ரான்கானின் பாகிஸ்தான் அரசுக்கு எதிரான போராட்டத்தின் மூலமாவது பாடம் கற்றுக்கொள்ள ரணிலுக்கும், ஐ.தே.கட்சிக்கும் கொஞ்சம் கூட விருப்பம் இல்லாதிருப்பதாகும்.

இம்ரான்கானின் தெஹ்ரீக் இன்சாப் கட்சி பாகிஸ்தானின் பிரதான எதிர்க்கட்சியாக இல்லாத பின்னணியிலும், அந்தக் கட்சியால் இந்த அளவுக்கு பாகிஸ்தான் அரசையே கலங்கடிக்க வைக்க இயலுமானால், இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியால் இலங்கை அரசுக்கு எதிராக நாட்டு மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்த ஏன் இயலாது போயுள்ளது என்பது கேள்விக்குரியதொன்றே.

இது குறித்து ஆராய்கையில் தெளிவாவது என்னவெனில், ஐ.தே.கட்சிக்கு மோடி போன்றதொரு தலைவர் கிடைக்கவில்லை என்பது போன்றே, இம்ரான்கான் போன்றதொரு தலைவரொருவரும் கிடைக்கவில்லை என்பதாகும். மோடி போன்றோ அல்லது இம்ரான் கான் போன்றோ ஒரு தலைவர் ஐ.தே. கட்சிக்குக் கிடைத்திருப்பாரானால், மஹிந்தவின் அரசியல் வசந்தகாலம் இன்று முடிவுக்கு வந்திருக்கும். ரணில், மோடி போன்றோ, இம்ரான்கான் போன்றோ தலைமைத்துவத்தை திறன் பட முன்னெடுத்துச் சென்றிருப்பாரானால் மஹிந்தவின் இரவுத்தூக்கம் அமைதியாகக் கழிய வாய்ப்புக் கிட்டியிருக்காது.

ஆனால் மஹிந்தவோ, சோனியாவைப் போன்றோ, ராகுல்காந்தி போன்றோ, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் போன்றோ துரதிருஷ்டமுள்ள தலைவரல்ல.

சோனியாவுக்கோ, ராகுல் காந்திக்கோ, ஏன் நவாஸ் ஷெரீப்புக்கோ கூட எதிர்க்கட்சிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்த போதிலும், மஹிந்தவுக்கு எதிர்க்கட்சிக்கு முகம்கொடுக்க வேண்டிய சிக்கல்கள் எதுவும் ஐ.தே.கட்சியால் உருவாக்கப்படவில்லை. இன்று ஐ.தே. கட்சியில் மத்தள விமான நிலையத்தின் நிலைமையைப் பார்வையிடச் செல்கிறோம், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நிலவும் சிக் கல்கள் குறித்து ஆராயச் செல்கிறோம், எனக் கூறி பெருமெடுப்பில் பயணம் செய்து கூக்காட்டி, அரச ஆதரவாளர்களின் எதிர்ப்புகளுக்கு ஆளாகி பிரபல்யம் தேட முயலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏதோ தாம் அரசுக்கு எதிராகச் செயற்படுகிறோம் எனக் காட்டிக்கொள்ள முயல்கின்றனர். அப்படியான சில 'காட்போட்' வீரர்களால் மஹிந்தவை வீழ்த்தி விட இயலாது.

அரசியலில் மஹிந்தவை வீழ்த்துவதற்கு மஹிந்த என்ற வைரம் பாய்ந்த மரத்தின் அடிவேரை ஆட்டமுற வைக்கத்தக்க, அரசியல் லட்சணங்களும் திறமையும், நாட்டு மக்களை தம்பால் ஈர்க்கத்தக்க கவர்ச்சியும் கொண்ட எவரும் இன்று ஐ.தே.கட்சியில் இல்லை. ஆதலால் மோடி, காங்கிரஸ் அரசை வீழ்த்தியமை போன்றோ, இம்ரான்கான், நவாஸ் ஷெரீப்பின் அரசை வீழ்த்த முயல்வது போன்றோ, மஹிந்தவின் அரசை எவராலும் இலேசில் வீழ்த்தி விடவோ, ஆட்டம் காண வைக்கவோ இயலாது.

உலக காணாமற் போனோர் தினம் இன்றாகும். இதனை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



# காணாமற் போனவர் பிரச்சினைக்கு தீர்வுதான் என்ன?

பிரகாஷ்

எம்மவர்கள் எங்கே?

இலங்கையில் மட்டுமல்லாது உலகளவில் கடத்தல்களும் காணாமற் போதல்களும் தினமும் இடம்பெறுகின்றன. போர்களும் பயங்கரவாத நடவடிக்கைகளும் இடம்பெறும்போது காணாமற் போகச் செய்யப்படுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இந்த வகையில் இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுற்றபோதும் இதன் கொடூரமான தாக்கம் இன்னமும் தணிந்ததாகத் தெரியவிலை. இந்தப் போர் காரணமாக அனைத்துத் தரப்பிலும் 80 ஆயிரம் விதவைகளும், 45 ஆயிரம் ஊனமுற்றவர்களும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக் கணக் கானவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இலங்கை அரசு இதற்குக் கூறிய விளக்கம் விசித்திரமானது. "சத்திர சிகிச்சை இடம்பெறும்போது இரத்தம் வெளியே சிந்தத்தான் செய்யும். இரத்தம் சிந்தாது சத்திரசிகிச்சை செய்ய இயலாது" என்பதுதான் அந்த விளக்கமாகும்.

ஆனால் இன்று இலங்கையில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் காணாமற் போயுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 16ஆயிரமாக உள்ளதாக ஐக்கியநாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரமே இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டது. ஆனால் உண்மையான எண்ணிக்கை இதனிலும் அதிகமாக இருக்கலாம். இவர்கள் தொடர்பாகவும் இவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் பல்வேறு அழுத்தங்களால் ஜனாதிபதி ஒரு விசாரணைக் குழுவை அமைத்தார்.

போர் இடம்பெற்றபோது போர்க்குற்றங்களில் அநேகமானவை. அரச தரப்பினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச அமைப்புக்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்தி வரும் நிலையில் அரச தரப்பே குற்ற விசாரணைகளை மேற்கொள்ளவென ஒரு குழுவை நியமித்துள்ளது. இதில் உண்மையான அக்கறை அரசுக்கு இருந்திருக்குமாயின் உடனேயே இந்த ஆணைக் குழுவை நியமித்திருக்கலாம். ஆனால் தற்போது அரச தரப்பு விசுவாசிகளும் அரச தரப்புப் பின்னணி கொண்டவர்களும் இந்த ஆணைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இதிலிருந்து இந்த விசாரணைக் குழுவின் நடுநிலைத் தன்மையும், ஸ்திரத் தன்மையும் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல சர்வதேசமும் உணர்ந்து கொள்ளும்.

இருப்பினும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த விசாரணை ஆணைக்குழு முன்பாகச் சாட்சியளிப்பதற்கு பாதிக்கப்பட்ட பலர் முன் வந்தார்கள். சாட்சியமும் அளித்தார்கள். "இராணுவமே என் கணவனை கொண்டு சென்றது" "இராணுவமே என் மகனைக் கொண்டு சென்றது" "இராணுவ வாகனத்தில் எம் உறவுகள் ஏற்றப்படுவதை நாம் பார்த்தோம்" இவையே சாட்சியமளித்தவர்களில் பெரும்பாலானவர்களின் கருத்தாக இருந்தது. ஆனால் அரசு இதைக் கருத்தில் கொள்ளுமென எதிர் பார்க்க முடியாது. வெறும் கண்துடைப்புக்காகவே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். இதன் காரணமாக எமது ஆதங்கங்களைக் கொட்டித் தீர்க்கவே இந்த ஆணைக்குழுவைப் பயன்படுத்துகின்றோம் என்று அங்கு சாட்சிய மளித்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் போக்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப் போவதாக அறிவித்தபோது ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்குள் வர அனுமதிக்கப்படமாட்டாது என இலங்கை அரசு அறிவித்தது. இவர்கள் குற்றமற்றவர்கள், போர் குற்றம் புரியாதவர்கள் என்றால் ஐ.நாவை இலங்கை வர அனுமதிக்கலாமே? ஏன் அனுமதிக்கவில்லை? இதுக்கெல்லாம் பயம்தான் காரணம். தமது குற்றச் செயல்கள் சர்வதேச அளவில் தெரிந்துவிடுமோ, போர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு விடுவோமோ என்று அஞ்சுகின்றனர். ஆனால் இலங்கைக்குள் வராமல் வெளியே இருந்த வாறு இலங்கையின் போர் குற்றம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும், சாட்சியங்கள் திரட்டப்படும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அறிவித்துள்ள நிலையில் காணாமற் போனோர் தொடர்பான உண்மைகள் இனியாவது வெளி வருமா? எம்மவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கிடைக்குமா? என்பது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் காணாமற் போனோரின் பட்டியல் வெளியிடப்பட்டதை அடுத்து தற்போது உலக அளவில் இந்தப் பட்டியல் திரட்டப்படுகின்றது. பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் ஹமாஸ் அமைப்பின் தீவிரவாதச் செயற்பாடுகளால் இஸ்ரேல் அரசு மற்றும் ஹமாஸ் இடையே போர் மூண்டது. இதன் காரணமாக 2000 இற்கும் அதிகமான பலஸ்தீன மக்களும், 70 இஸ்ரேலியப் பொது மக்களும் இறந்துள்ளனர். பல்லாயிரக் கணக் கானவர்கள் அகதிகளாக ஆகியுள்ளதோடு பலர் காணாமற்போயுள்ளனர்.

இதைவிட ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் பல பகுதிகளைக் கைப்பற்றிய தீவிரவாத அமைப்பு ஒன்று தாம் கைப்பற்றிய பகுதிகளை இணைத்து இஸ்லாமியதேசம் ஒன்றைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இவர்கள் தாம் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து பல நூற்றுக்கணக்கான மக்களைக் கடத்திச் சென்று கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுத்துவதோடு அவ்வாறு மதமாற்றத்துக்கு விரும்பாதவர்களைக் கொன்று குவிக்கின்றது. இந்த அமைப்பினரால் கடத்திச் செல்லப்பட்ட பலர் காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கெல்லாம் உலக நாடுகளும் உலக நாடுகளின் முக்கிய அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையும் தரும்தீர்வுதான் என்ன?





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**:வேற்றுமொழி பேசுபவர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பதவி அல்லது கூடுதல் பொறுப்புகள் கிடைக்கப் பெறுவார்கள்

**இடபம்**: பெண்களுக்கு மனதில் வீண்குழப்பம் உண்டாகும். உங்களிடம் ஆலோசனை கேட்டு உங்களை நாடி சிலர் வரக்கூடும். உத்தியோகத்தில் உயர்வு பெற எடுக்கும் முயற்சிகள் நல்ல பலன் தரும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மன அமைதி உண்டாகும்.

**மிதுனம்**: பெரியோர்களின் உதவி கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ ஏற்படாது. தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். வாக்குவன்மையால் லாபம் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்கள் சாதகமான பலன்தரும்.

**கடகம்**: மன நிம்மதியும், சந்தோஷமும் உண்டாகும். கடின உழைப்பும் முயற்சிகளில் வெற்றி பெறும் திறனும் அடைவீர்கள். நீண்ட நாள்களாகப் போட்டிருந்த திட்டம் முழுவதுமாகச் செயற்பட வாய்ப்ட உள்ளது. எதிர்த்துச் செயற்பட்டவர்கள் ஒதுங்கி விடுவார்கள்.

**சிங்கம்**: மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். தைரியம் உண்டாகும். செலவுகள் அதிகரிக்கச் செய்யும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும்.

**கன்னி**: உத்தியோக மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம், கவனம் தேவை. ஆயுதங்கள், நெருப்பைப் பயன்படுத்தும்போது கவனம் தேவை. வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கை தேவை.

**துலாம்**: மற்றவர்கள் நலனை அக்கறையுடன் கவனிப்பீர்கள். எந்த ஒரு செயலையும் சிந்தித்துச் செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்**: புத்திரர்கள் வழியில் மனவருத்தம் உண்டாகலாம். மனதில் இருந்த குழப்பம் நீங்கி துணிச்சல் உண்டாகும். மற்றவர்களுடன் விரோதம், கௌரவபங்கம், வீண் அலைச்சல் உடல் உழைப்பு ஆகியவை ஏற்படலாம்.

**தனுசு**: எச்சரிக்கையுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். நீங்கள் அவசரமாக எதையும் செய்யக்கூடாது. எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். பயணம் மூலம் வியாபாரம், தொழில் விரிவாக்கம் பெறும்.

**மகரம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாகச் செய்து முடிப்பார்கள். திருமண முயற்சியில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். உங்களது செயல்களுக்கு குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இருக்கும்.

**கும்பம்**: நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்துக் கூடும். கடினமான வேலைகளையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் தேவை.

**மீனம்**: எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும். எதிலும் முன்னேற்றம் காணப்படும். உங்கள் இஷ்டத்துக்கு விரோதமாகக் காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். இடமாற்றம் உண்டாகலாம். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## நாளை

**ஆவணி-15 ஞாயிற்றுக்கிழமை | 31.08.2014**

திதி: ஷஷ்டி பி.இ.01.29 வரை
நட்சத்திரம்: சுவாதி
பி.ப.02.52 வரை

சுபநேரம்: 09.05-10.35 வரை
இராகுகாலம்: 04.35-06.05 வரை
ஷஷ்டி விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மனிதர்களிடம் மலரும் அன்பு

" உண்மையில் எனது செய்தி என்பது சமயத் தத்துவ சாரமாகும். சமய அமைப்புகளில் சாரமுள்ள பகுதிகளும் சாரமற்ற பகுதிகளும் உள்ளன. சாரமற்றவையை நீங்கினால் எஞ்சி நிற்பதே எல்லாச் சமயங்களின் ஆதாரமானதாகும். அதுதான் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானது. அவை எல்லாவற்றின் பின்னாலும் ஒருமை நிலவுகிறது. அதைக் கட வுள், அல்லா, ஜெஹோவா, ஆன்மா, அன்பு என்று எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். மிகத் தாழ்ந்த மனிதன் முதல் மிக உயர்ந்த பிறப்புகள் வரை எல்லாவற்றையும் இயக்குவது அந்த ஒருமையே. இந்த ஒருமையைத் தான் நாங்கள் வலியுறுத்திப் பேசுகிறோம். ஆனால், மேலை நாடுகளிலோ சாரமற்றதையே வலியுறுத்திப் பேசுகிறார்கள். இதற்காகப் போராடி இறக்கவும் செய் கிறார்கள். ஆண்டவனிடமும் மனிதர்களிடமும் மலரும் அன்பு தான் சாரமான பொருளாக இருந் தும் இவர்கள் இப்படி நடப்பது ஆச்சரியமாக இருக்கிறது"

"ஓர் இந்து தன் கொள்கைக்காக மற்றவனைத் தாக்குவதில்லையா?"

"அவன் இதுவரையில் அவ்வாறு செய்யவில்லை. மனித இனங்களில் சகிப்புத் தன்மை அவனிடம் தான் அதிகமாக உள்ளது. இந்தியன் ஆழ்ந்த சமயப்பற்றுள்ளவன். எனவே கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவர்களை அவன் வதைத்திருக்கக் கூடும், என்று ஒரு சிலர் எண்ணவும் இடமுண்டு. கடவுள் நம்பிக்கையைச் சமணர்கள் ஒரு மயக்கம் என்றனர். அப் படியிருந்தும் ஒரு சமணனும் வதைக்கப்படவில்லை. மத வெறியில் முதன் முதலில் இந்தியாவிலே வாள் பிடித்தவர்கள் முகமதியர்களே".

## நீர்ப் பாலத்தில் பயணிக்கும் படகு

### விந்தை உலகில் இப்படியும் விநோதம்



மக்கள் எளிதான முறையில் இடம்பெயர்ந்து செல்வதற்காகக் கட்டப்படுவது பாலங்கள். பொதுவாக ஆற்றையோ, கடலையோ கடந்து செல்ல உதவுபவை தான் பாலங்கள். ஆனால் ஜேர்மனியில் ஆற்றின் மேலேயே பிரம்மிப்பூட்டும் வகையில் நீர்ப் பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த நீர்ப் பாலத்தின் மேலே படகுப் போக்குவரத்து நடைபெறுவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துவதாக உள்ளது.

உலகில் அமைந்துள்ள மிக நீள்மான நீர்ப் பாலம் எனப் புகழ்பெற்ற இது மேக்டீபர்க் என்றஇடத்தில்அமைந்துள்ளது. இந்தப் பாலத்தைக் கட்ட கடந்த 1905 ஆம் ஆண்டிலேயே திட்டமிடப்பட்டது. பல கட்டச் சோதனைகளுக்குப் பிறகு 1930 ஆம் ஆண்டு ஆரம்பித்த கட்டுமானப் பணிகள் 1942 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இரண்டாம் உலகப் போர் காரணமாகப் பணிகள் நிறுத்தப்பட்டன. அப்போது இரு நாடுகளாகக் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் பிரிந்ததால், கட்டுமானப் பணிகளைத் தொடர முடியவில்லை.

இதன் பின்னர் கடந்த 1990 ஆம் ஆண்டில் கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் ஒன் றாக இணைந்ததால் 1997 ஆம் ஆண்டில் இந்தப் பாலத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2003ஆம் ஆண்டில் பணிகள் நிறைவடைந்து போக்குவரத்துக்காக பாலம் திறக்கப்பட்டது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 3 | | | 8 | | |
| 7 | 1 | | | | | | | |
| 4 | | | | | 9 | | 2 | 6 |
| 1 | | 2 | 5 | | 8 | | 7 | 3 |
| 3 | | 9 | | 1 | | 2 | | 8 |
| 5 | 8 | | 7 | | 3 | 6 | | 1 |
| 2 | 4 | | 8 | | | | | 9 |
| | | | | | | | 8 | 7 |
| | | 5 | | | 1 | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 1 | 8 | 9 | 3 | 6 | 2 | 5 |
| 5 | 8 | 9 | 2 | 4 | 6 | 1 | 7 | 3 |
| 6 | 3 | 2 | 1 | 7 | 5 | 4 | 9 | 8 |
| 8 | 1 | 5 | 4 | 6 | 7 | 2 | 3 | 9 |
| 3 | 6 | 4 | 9 | 5 | 2 | 8 | 1 | 7 |
| 9 | 2 | 7 | 3 | 8 | 1 | 5 | 4 | 6 |
| 4 | 5 | 8 | 7 | 1 | 9 | 3 | 6 | 2 |
| 2 | 9 | 6 | 5 | 3 | 4 | 7 | 8 | 1 |
| 1 | 7 | 3 | 6 | 2 | 8 | 9 | 5 | 4 |

# செந்தமிழ் கிண்ணத்தை தனதாக்கியது விண்மீன்

கரணவாய்,ஓக.30

பலத்த போராட்டத்தின் மத்தியில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியான் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம்.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தியஅணிக்கு9பேர்பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியான் விளையாட்டுக் கழகம் மோதியது.

பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஆரம்பமான இந்தப் போட்டியில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதினர். ஆட்டம் ஆரம்பமாகி 3 ஆவது. 4 ஆவது நிமிடங்களில் விண்மீன் அணிக்கு அருமையான கோல் போடும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அதனை முன்னணி வீரர்களான றஞ்சித். காண்டீ ஆகியோர் தவறவிட அணி ஆதரவாளர்கள் வெறுப்படைந்தனர். இந்தச் சூழ்நிலையில் அடுத்த மூன்றாவது நிமிடத்தில் விண்மீன் விளையாட்டுக்கழக வீரர் காண்டீ எதிரணியின் கோல் கம்பங்களை நோக்கி வேகமாகப் பந்தை நகர்த்திச் சென்ற வேளை மின்னல் வேகத்தில் விரைந்த செபஸ்தியான் அணி வீரர் கால்தடம் போட பந்து தடைப்பட்டது. ஆனாலும் அவர் இழைத்த தவறுக்காக கோல் பிரதேசத்துக்கு அருகில் வைத்து விண்மீன் அணி வீரர் ஜோன் கெனடி பந்தை உயரமாக உதைக்க, செபஸ்தியான் அணியின் கோல்காப்பாளர் உயர எழுந்து தடுக்க முனைந்தார். இருந்த போதும் பந்து அவரை ஏமாற்றி கோல் கம்பங்களுக்குள் சரண் புகுந்தது. கெனடி உதைத்த இந்தக் கோலே அணியின் வெற்றிக் கோலாக மாறும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.



இடைவேளைக்கு முன்பு விண்மீன் அணிக்கு பல சந்தர்ப்பங்கள் கோல் போடக் கிடைத்த போதும் அந்த அணியின் முன்கள வீரர் றஞ்சித், காண்டீ ஆகியோரும் - எதிரணியின் தினேஸ்குமார், அருமை ஆகியோரும் தவறவிட்ட வண்ணமிருந்தனர். இதனால் ஆட்டம் 1:0 என்ற கணக்கில் இருந்த போது ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.


இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. செபஸ்தியான் அணியினர் எவ்வாறாயினும் கோல் ஒன்றைப் போட்டு ஆட்டத்தைச் சமப்படுத்தி விட வேண்டும் என்று கங்கணம் கட்டினர். அவர்கள் பலதடவைகள் முன்னேறிய போதும் விண்மீன் அணியின் தடுப்பு அரண்களான கெனடி, நிக்ஷன் அவர்களின் முயற்சிகளை தவிடு பொடியாக்கினர்.

இடைவேளையின் பின் இரு அணியினரும் கோல் போடாத நிலையில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் 25 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் தமதாக்கிக் கொண்டது.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இறுதியாட்டத்தில் வெற்றிக் கோல் அடித்த விண்மீன் அணியின் ஜோன் கெனடியும், தொடர் ஆட்டநாயகனாக கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக வீரர் குகரதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடரில் சிறந்த நன்னடத்தையை வெளிப்படுத்திய அணிக்கான விருதை மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டது.

### தொடர் நாயகனுக்கு பெறுமதியான பதக்கம்



இந்தச் சுற்றுப் போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணி வீரர் குகரதன், தங்கத்தால் செய்யப்பட்ட பந்து வடிவ பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் இந்தச் சுற்றுப் போட்டியில் அதிகமாக 12 கோல்களைப் போட்டு அசத்தியதுடன் நன்னடத்தைக்கான செயற்பாட்டிலும் ஈடுபட்டார். கழகத்தினரும், போட்டி நடுவர்களும் வழங்கிய புள்ளிகளின் அடிப்படையில் அதிக கூடிய புள்ளிகளைப் பெற்ற யங்கம்பன்ஸ் அணி வீரர் குகரதன் தொடர் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்கு செந்தமிழ் விளையாட்டுக்கழக வீரர் கஜேந்திரனால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கத்தினாலான பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இதுவரை யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் இதுவே ஒரு உதைபந்தாட்ட வீரருக்கு வழங்கப்பட்ட பெறுமதிவாய்ந்த பரிசு ஆகும்.

உதைபந்தாட்ட வீரர்களை வளர்க்கும் முகமாகச் செந்தமிழ் விளையாட்டுக்கழகம் தனிப்பட்ட வீரரைக் கௌரவித்தமையை உதைபந்தாட்ட ஆர்வலர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். (ரி-108)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.30

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ்விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

## கரைதுறைப்பற்று அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.30

முல்லைத்தீவு அரசஅதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த புதன்கிழமை கரைதுறைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றஇறுதியாட்டத்தில்மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலக அணி 17:09 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ரி-23)

## விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நலன்புரி சங்கத்தினால் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கயிறு இழுத்தல், வலைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், சதுரங்கம் போன்ற போட்டிகள் இடம் பெறவுள்ளன. (ரி-23)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய ஜுடோ சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்ற வவுனியா மாவட்ட வீரர்களான சதூர்சன், எழில்மேனன், நந்தகுமார், பகீதரன் ஆகியோர் பொறுப்பாசிரியர் சொரூபனுடன் காணப்படுகின்றனர். (ரி-23)

# நாவாந்துறை மேரிஸ் காலிறுதிக்குத் தகுதி

வலி.வடக்கு,ஓக.30

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கம் நடத்தும்அணிக்கு7பேர்பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற போட்டியில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாக இருந்த போதிலும் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் 4 கோல்களை இலகுவாகப் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதன் மூலம் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் காலிறுதியில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 7:2 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-86)

# கனடா அணியில் தமிழ்வீரர்கள்





துர்ஷனன் ஆனந்தராஜ் புருசோத் விஜயராஜ்

ஐசிசியின் 'அமெரிக்காஸ் கிரிக்கெட்' டினால் பேர்முடா நாட்டில் நடத்தப்பட்ட முக்கோணத் தொடரில் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிய கனடா அணியில் இரண்டு தமிழ் வீரர்களும் விளையாடியுள்ளனர்.

ஐசிசியின் 'அமெரிக்காஸ் கிரிக்கெட்' அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட 17 வயதிற்குட்பட்டோருக்கான முத்தரப்பு கிரிக்கெட் சுற்றுத்தொடர் ஒன்று பேர்முடா நாட்டில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்தது. இந்த சுற்றுத் தொடரில் கனடா, அமெரிக்கா மற்றும் பேர்முடா ஆகிய நாடுகள் கலந்து கொண்டிருந்தன. இத் தொடரில் கனடா அணி வெற்றி பெற்றுள்ளது.

தொடரைக் கைப்பற்றிய கனடா அணி சார்பாக இரண்டு தமிழ் வீரர்களும் அணியில் விளையாடியுள்ளனர். புருசோத் விஜயராஜ், துர்ஷனன் ஆனந்தராஜ் என்ற இரு தமிழ் இளைஞர்களே இவ்வாறு அணியில் இடம்பிடித்துள்ளனர். இதில் துர்ஷனன் ஆனந்தராஜ் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகவும் புருசோத் விஜயராஜ் பந்துவீச்சாளராகவும் அணியில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ரி)

# மூன்றாவது சுற்றுக்கு முன்னணி நட்சத்திரங்கள்



அமெரிக்க ஓபன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுக்கு ரஷ்யாவின் மரியா ஷரபோவா, டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, ருமேனியாவின் அலெக்சாண்டிரா டல்ஹெருவை எதிர் கொண்டார். அபாரமாக ஆடிய ஷரபோவா 4-6 என்ற ரீதியில் முதல் செற்றை இழந்த போதும் அடுத்த சுற்றுக்களில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு 6-3, 6-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், அமெரிக்காவின் வீனஸ்வில்லியம்ஸ் 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில், சுவிட்சர்லாந்தின் டிமியா பாக்சின்ஸ்கியை தோற்கடித்தார். டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 6-3, 6-4 என பெலாரசின் அலெக்சாண்டிரா சாஸ்னோவிச்சை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றைய போட்டிகளில், ருமேனியாவின் சிமோனா ஹலேப், செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச், ஜெர்மனியின் கெர்பர், ஆன்டிரியா பெட்கோவிச், சபைன் லிசிக்கி, பிரான்சின் அலைய்ஸ் கார்னட், இத்தாலியின் சாரா இரானி, ராபர்டா வின்சி, செக்குடியரசின் லூசி சபரோவா உள்ளிட்டோர் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இரண்டாவது சுற்றில், சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா, 6-3, 6-4, 3-6, 7-6 என்ற செற் கணக்கில் பிரேசிலின் தாமஸ் பெல்லுச்சியை வீழ்த்தினார். நான்காவது செற்றின் போது சத்தமிட்டு தொந்தரவு கொடுத்த ரசிகர் ஒருவரை நோக்கி, வாயை மூடவும் என வாவ்ரின்கா ஆத்திரமாக கூறினார். இதனால் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. பின் இயல்பு நிலைக்கு மாறிய வாவ்ரின்கா போட்டியில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றார்.

முதல் சுற்றுப் போட்டிகளில் செக்குடியரசின் தாமஸ் பெர்டிச், குரோஷியாவின் மரின் சிலிக், பல்கேரியாவின் டிமிட்ரோவ், ஸ்பெயினின் பெலிசியானோ லோபஸ், தென் ஆபிரிக்காவின் கெவின் ஆண்டர்சன், ஜப்பானின் டாட்சுமா இடோ உள்ளிட்டோர் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவுக்கான முதல் சுற்றில், இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக்குடியரசின் ரதக் ஸ்டெபானக் ஜோடி 7-6, 6-2 என்ற நேர் செற் கணக்கில், இத்தாலியின் போலெல்லி, போக்னினி ஜோடியை வீழ்த்தியது.

கலப்பு இரட்டையருக்கான முதல் சுற்றில், இந்தியாவின் சானியா மிர்சா, பிரேசிலின் புருனோ சோரஸ் ஜோடி 6-2, 3-6, 10-5 என்ற கணக்கில், அமெரிக்காவின் டொர்னாடோ அலிசியா பிளாக், எர்னஸ்டோ எஸ்கோபெடோ ஜோடியை வீழ்த்தியது. (ரி)

# காலிறுதிக்கு முன்னேறிய சாய்னா



உலக பூப்பந்தாட்ட சம்பியனுக்கான போட்டிகள் டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடைபெற்று வருகின்றன. இதில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சாய்னா நேவால் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், ஜப்பானின் சயாகாடகாஹாஷியுடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் சுற்றை 14-21 என்ற புள்ளிக்கணக்கில் சாய்னா இழந்தார். அடுத்த சுற்றை மிகவும் சாதுரியமாக விளையாடி 21-18 என்ற புள்ளிக்கணக்கில் வென்றார். மூன்றாவது சுற்றில் டகாஹாஷி வெற்றிபெறுவதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் சிறப்பாக விளையாடிய சாய்னா, 21-12 என்ற புள்ளிக்கணக்கில் அந்த சுற்றையும் கைப்பற்றி காலிறுதிக்கு முன்னேறினார். (ரி)

# சாஸ்திரி ஏற்படுத்திய தன்னம்பிக்கை வெற்றிக்கு காரணம் சொல்லும் ரெய்னா



முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி அணியினரிடத்தில் ஏற்படுத்திய தன்னம்பிக்கையே இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில்பெற்ற வெற்றிக்கு காரணம் என்று சுரேஷ் ரெய்னா கூறியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிராக 75 பந்துகளில் சதம் அடித்த சுரேஷ் ரெய்னா அணியின் வெற்றிக்கு ரவி சாஸ்திரி ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அணியினரிடத்தில் ஏற்படுத்திய தன்னம்பிக்கையே காரணம் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில், இந்திய அணி 133 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது. அந்த அணி சார்பாக அதிரடியாக ஆடிய சுரேஷ் ரெய்னா 75 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்றுக்கொண் டதுடன் பந்து வீசி ஒரு இலக்கினையும் வீழ்த்தியிருந்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், போட்டிக்கு முன்பாக அணி வீரர்கள் கூட்டத்திற்கு வந்த இயக்குனர் ரவி சாஸ்திரி சிறிய உரையாற்றினார். அது மிகவும் உத்வேக மூட்டுவதாக அமைந்தது. மேலும் மைதானத்திற்கு பஸ்ஸில் வரும்போது அவர் என்னருகில் அமர்ந் திருந்தார். அவர் என்னிடம் தைரியமான ஆட்டத்தை வெளிப்படுத்துமாறு கூறினார்.

மேலும் ஒரு முன்னாள் வீரரிடம் பேசும் போது வித்தியாசமான ஒரு சௌகரியம் ஏற்படுகிறது. மற்ற பயிற்சியாளர்களும் எங்களுக்கு ஆதரவு அளித்தாலும், ரவி சாஸ்திரியிடம் நாம் நம்மை சுதந்திரமாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

நிச்சயம் அவர் அணி வீரர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுபவராக திகழ்கிறார். என்னைப் பொறுத்தவரையில் அணிக்கு ஒரு புத்துணர்வு ஊட்ட வேண்டும் என்று நினைத் திருந்தேன். அதை எனது ஆட்டத்தின் மூலம் செய்ய முடிந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் டோனியுடன் இணைந்து துடுப்பெடுத்தாடுவதில் என்ன அனுகூலம் என்றால் அவர் எனது இயற்கையான ஆட்டத்தைக் கைவிடுமாறு என்றுமே கூறியதில்லை. மேலும் அவர் அடிக் கடி என்னிடம் வந்து பேசி நான் இலக்கைத் தூக்கி எறியாமல் இருக்க உதவினார் என்று ரெய்னா கூறினார்.

இந்திய அணி இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரை 1-3 என்ற ரீதியில் இழந்ததையடுத்து இந்தியாவின் ஒரு நாள் ஆட்ட அணிக்கு இயக்குனராக ரவி சாஸ்திரியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நியமித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# சகிப்பிற்கு தடை குறைப்பு

பங்களாதேஷ் அணி வீரர் சகிப் அல் ஹசனுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைக்காலம் 3 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சகிப் அல் ஹசன் ஒழுக்கமின்மையாக நடந்து கொள்கின்றார் என குற்றஞ்சாட்டப்பட்டு 6 மாதங்களுக்கு கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தடை விதித்திருந்தது. அத்துடன் 2015ஆம் ஆண்டு முடியும் வரை வெளிநாட்டு அமைப்புகளினால் நடத்தப்படுகின்ற தொடர்களில் பங்குபற்றுவதற்கான அனுமதியையும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இரத்து செய்திருந்தது.

இந்நிலையில் தற்போது தடைக்காலம் 3 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள சிம்பாப்வே அணியுடனான தொடரில் இவர் போட்டிகளில் பங்கு பற்ற முடியும். ஆனாலும் வெளிநாட்டு அமைப்புகளின் தொடர்களில் பங்குபற்றுவதற்கான தடை நீக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)



# மூன்றாம் இடத்தை வென்றது கம்பர்மலை யங்கம்பன்ஸ்



ஆட்டத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும் குகரதன் கோல் போட்டு அசத்த 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தட்டிக் கொண்டது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்றன.


இதில் மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் பரபரப்பாக ஆரம்பமான இங்கப் போட்டியில் [illegible] எதிரணியினர் தம்மை சுதாகரித்துக் கொள்வதற்கு முன்பாக ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர் குகரதன் தூரத்தில் வைத்து உதைத்து பந்து. கோல்காப்பாளரை ஏமாற்றி கோலாக மாறியது.

இதனை அடுத்து உடுப்பிட்டி யுத் அணி வீரர்கள் பதில் கோல் போடுவதற்கு கடும் முயற்சி செய்த போதும் அது பலிக்காத நிலையில் 1:0 என்று ஆட்டம் இடை வேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்ற போதும் இரு அணியினராலும் எளிதில் கோல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை இச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைவதற்காக சற்று முன்னதாக எவரும் எதிர்பாராத விதமாக புயல் வேகத்தில் பந்தைக் கொண்டு சென்ற யங்கம்பன்ஸ் அணியின் முன்னணி வீரர் குகரதன் மீண்டும் ஒரு கோலைப் போட 2:0 என்ற கோல்கள் [illegible] அடிப்படையில் யங்கம்பன்ஸ் அணி வெற்றி வாகைசூடி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மூன்றாமிடத்தைப் பெற்ற யங்கம்பன்ஸ் அணிக்கு பெறுமதி வாய்ந்த வெற்றிக் கிண்ணமும் 20 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டன. (ரி-108)

# இணைப்பாட்டத்தில் கலக்கும் டோனி – ரெய்னா ஜோடி



இந்திய அணியில் ஓட்டங்கள் சேர்ப்பதில் சிறந்த ஆட்ட இணையாக அணித்தலைவர் டோனியும், ரெய்னாவும் மிரட்டி வருகின்றனர்.


இந்திய அணி, ரெய்னாவின் அதிரடி சதத்தின் மூலம் இங்கிலாந்தை 2ஆவது ஒருநாள் போட்டியில் வீழ்த்தியது. இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ரெய்னாவுக்கு இது முதல் சதம் ஆகும். அதேபோல் துணை கண்டத்திற்கு இவர் வெளியே எடுக்கும் முதல் சதம்.

ஒருநாள் ஆட்டங்களில் 10 ஆட்டநாயகன் விருதைப்பெற்ற ரெய்னாவுக்கு, இங்கிலாந்துக்கு எதிராக இது 5ஆவது ஆட்ட நாயகன் விருதாகும். மேலும் கார்டிப் மைதானத்தில் விராட் கோஹ்லி, ஷிகர் தவான் ஆகியோருக்குப் பிறகு சதம் எடுக்கும் 3ஆவது இந்திய வீரர் ஆவார்.

ரெய்னாவும், டோனியும் இணைந்து எடுத்த 144 ஓட்டங்கள் 5ஆவது விக்கெட்டுக்காக சேர்த்த 3ஆவது பெரிய ஓட்டங்களாகும். 2011ஆம் ஆண்டு ரெய்னாவும், டோனியும் இணைந்து லார்ட்ஸில் 169 ஓட்டங்களை புரட்டி எடுத்ததே அதிகபட்ச இணைப்பாட்ட ஓட்டங்களாகும்.

தற்போது டோனி 2ஆவது ஒருநாள் ஆட்டத்தில் பெற்ற அரைச்சதம் அவரது 55ஆவது அரைச்சதமாகும். அதே போன்று இங்கிலாந்துக்கு எதிரான 10ஆவது அரைசதமாகும். அத்துடன் 5ஆவது விக்கெட்டுக்காக ரெய்னா- டோனி இருவரும் இணைந்து 2091 (சராசரி 53.61) ஓட்டங்களை சேர்த்துள்ளனர் என்பதும் சாதனையாகும். (ரி)

# சிம்பாப்வேயை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



சிம்பாப்வேயில் நடைபெற்ற வரும் முத்தரப்பு ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி சிம்பாப்வே அணியை வெற்றி கொண்டுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி தென்னாபிரிக்காவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தனர். அதன்படி களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மிகச்சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினர். பந்துகளை அடித்து ஆடி ஓட்டங்களைச் சேரத்த அம்லா - டி கொக் ஜோடி முதலாவது இலக்குக்காக 142 ஓட்டங்களைச் சேர்த்திருந்த போது அம்லா 66 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து இலக்குகள் மளமளவென சரிய அடுத்த 5 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது. மத்திய வரிசை வீரர்கள் மோசமாக விளையாட பின்வரிசை வீரர்களின் துணையுடன் ஓரளவுக்கு சிறப்பான இலக்கை நிர்ணயித்தனர். 49.5 ஓவர்களில் சகல இலக்குளையும் இழந்த தென்னாபிரிக்கா 231 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டி கொக் 76 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் உட்சயா 5 இலக்குகளையும், நியும்பு 3 இலக்குகளையும், சதரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

232 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிம்பாப்வேக்கு தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. மத்திய வரிசை வீரர்கள் ஓரளவிற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்த போதும் பின்வரிசை வீரர்களின் ஒத்துழைப்பு இன்மையால் வெற்றி பெறுவதற்கு போதுமான பந்துகள் மீதமிருந்த போதும் சகல இலக்குகளையும் 170 ஓட்டங்களுக்கே இழந்தமையால் 61 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டனர். துடுப்பாட்டத்தில் வில்லியம்ஸ் 46 ஓட்டங்களையும், சிகாண்டர ரஷா 35 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன், மக்லெரன் தலா 3 இலக்குகளையும், பாங்கிசோ 2 இலக்குகளையும், தாகிர ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக சிம்பாப்வே அணியின் உட்சயா தெரிவானார். (ரி)

## தொடர்ச்சிகள்

### காணாமற்

மற்றும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பிரசைகள் குழுக்களும் மேற்படி அழைப்பை விடுத்துள்ளன.

'எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் உறவுகள் எங்கே? அரசே பதில் சொல்' என்ற தொனிப்பொருளில் இன்று வவுனியாவில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தையும், பொதுக் கூட்டத்தையும் காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் இணையம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை வவுனியா நகரசபை மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். ஒரு மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை வவுனியா நகர சபை மண்டபத்திலிருந்து வவுனியா பஸ் நிலையம் வரை காணாமற்போனோரைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி ஜனநாயகப் போராட்டம் நடைபெறும். அதன் பின்னர் அங்கிருந்து பேரணியாக மாவட்ட செயலகம் வரை செல்லும் காணாமற்போனோரின் உறவுகள், காணாமற்போனவர்கள் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும் என வலியுறுத்திய ஜனாதிபதிக்கான தமது மகஜரை மாவட்ட செயலகத்திடம் கையளிப்பர்.

காணாமற்போனோரைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி வவுனியாவில் இன்று நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கும் ஜனநாயகப் போராட்டத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் முழு ஆதரவு வழங்குகின்றது என்றும். இதில் அனைவரும் கலந்துகொண்டு தமிழர் அவலங்களை வெளியுலகத்திற்கு எடுத்துக்கூற வேண்டும் என்றும் அக்கட்சிகளின் பொதுச் செயலாளர்களான மாவை சேனாதிராசா., செ.கஜேந் திரன் ஆகியோர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தனர்.

அதேவேளை, ஜனநாயக மக்கள் முன்னணியும் காணாமற்போனோர் தினமான இன்று வவுனியாவில் நடைபெறும் நீதிக்கான போராட்டத்திற்கு முழு ஆதரவை வழங்குகின்றது என்றும், அனைவரும் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்று அக்கட்சியின் ஊடக செயலாளர் சி.பாஸ்கரா நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவ சக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகரா தலிங்கம் ஆகியோர் வவுனியா போராட்டம், பொதுக் கூட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

"வடக்கில் பல ஆயிரக்கணக்கானவர்கள் காணாமலாக்கப் பட்டுள்ள நிலையில் இந்தத் தினத்தில் அவர்களின் நிலை குறித்துச் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நாம் அமைதியான முறையில் எமது உணர்வுகளை வெளிக் கொண்டு வரவேண்டும்.

காணாமற்போன உறவுகளைக் கண்டுபிடிக்கக்கோரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்த ஆதரவை வழங்குகிறது. காணாமற் போன உறவுகளின் சொந்தங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் அமைதியான முறையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு எமது உறவுகளின் நிலை என்ன என்று கண்டறிய சர்வதேசத்திடம் வலியுறுத்த வேண்டும்" - என்றனர்.

இதேவேளை, காணாமலாக்கப்படுதலுக்கெதிராக இன்று வவுனியாவில் நடைபெறும் ஜனநாயகப் போராட்டத்திலும், பொதுக்கூட்டத்திலும் காணாமற்போனோரின் உறவுகள், சிவில் சமூகத்தினர் அனைவரும் கலந்து கொண்டு நீதிக்காக அச்சமின்றி குரல் கொடுக்க வேண்டும் என்று காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பிரஜைகள் குழுக்கள் இன்று வவுனியாவில் நடை பெறும் பொதுக்கூட்டம், ஜனநாயகப் போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

"இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னரும் காணாமற்போனோர் பிரச்சினை தீர்க்கப்படாததோடு காணாமற்போகும் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. காணாமற்போனோரை மீட்பதிலும் அவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதிலும் அரசு தொடர்ந்து அசமந்தப் போக்கையே காட்டி வருகிறது.

இலங்கை அரசின் இந்தச் செயற் பாட்டை உலகின் கவனத்திற்கு எடுத்துச்செல்வதற்கு இன்று 30ஆம் திகதி அனைத்துல காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு காணாமற்போன குடும்ப அங்கத்தவர்களை ஒருங்கிணைத்து சமூக அமைப்புகளால் வவுனியாவில் முன்னெடுக்கப்படுகின்ற நீதிக்கான சாத்வீக ஊர்வலங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் அனைவரும் கலந்து கொண்டு தமது மனித நேயத்தை வெளிப்படுத்த முன் வர வேண்டும்" - என்று தெரிவித்தன.

### 73 லட்சம்

ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப் பட்டுள்ளது. அதே நபரிடம் இருந்து சிமெந்து பெற்றுத் தருவதாகக் [illegible] 15 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான காசோலையைப் பெற்று மோசடி செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. அரசடி வீதியைச் சேர்ந்த ஒருவரே அவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் கட்டுவன் மேற்கைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். 2 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் குப்பிளானைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த ஒரு பெண் 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மோசடி செய்யப்பட்டுள்ளன-என்றரார். (த-4)

### சிறுமிகள்

சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுடைய மாணவியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுடைய சிறுமி யைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மற்றொரு நபர்கைது செய்யப் பட்டுள்ளார். அவர் [illegible] இருவரும் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி ஐயர் - சுந்தரராஜன் ஐயர்



ஊரெழுவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஐயர் சுந்தரராஜன் ஐயர் நேற்று (29.08.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஐயர் - காமாட்சி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், ராமநாதக் குருக்கள் - அமிர்தேஸ்வரி (பருத்தித்துறை) தம்பதியரின் மருமகனும் வாமதேவியின் கணவரும் காலஞ்சென்ற பாலநடராஜன் மற்றும் கமலா, ஹேமா காலஞ்சென்ற ராதா மற்றும் லோசனா, பிரபா ஆகியோரின் அண்ணனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.08.2014) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.


தகவல்:
குடும்பத்தினர்.

# அபாயாவிற்கு விதிக்கப்பட்ட தடை அடிப்படை மனித உரிமை மீறலாகும்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கொதிப்பு

தம்பலகாமம், ஓக. 30
திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் முஸ்லிம் பெண் உத்தியோகத்தர்கள் அபாயா அணிவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை அப்பட்டமான மனித உரிமை மீறலாகும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-
இலங்கையில் முஸ்லிம்கள் நீண்ட காலமாக தமது கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணி நடந்து வருகின்றனர். அதில் முஸ்லிம் பெண்கள் அணிகின்ற அபாயாவும் ஒன்றாகும். ஆனால் இன்று அந்த அபாயா அணிவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் அங்கு பணி புரியும் முஸ்லிம் பெண் உத்தியோகத்தர்களை அழைத்து இனி அபாயா அணியக்கூடாது என்றும் சேலையே அணிந்து வர வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.
மாவட்டச் செயலாளரின் உத்தரவுப்படியே தான் இந்த நடவடிக்கையை எடுப்பதாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். புல்மோட்டைக் காணிப் பிரச்சினை, தோப்பூர் நாவற்கேணிக்காடு காணிப் பிரச்சினைகளிலும் அங்குள்ள பிரதேச செயலாளர்கள் இதே கருத்தையே தெரிவித்துள்ளனர். அரசு முஸ்லிம்களை முற்று முழுதாக ஒடுக்கி வருகின்றது.
முஸ்லிம்களுக்கு இவ்வளவு பிரச்சினைகள் நடக்கின்ற போதிலும் முதலமைச்சரும் முஸ்லிம் உரிமைகள் பற்றி பேச வந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். எந்தப் பிரச்சினைக்கும் அவர்களால் நிரந்தரத்தீர்வு காணப்படவில்லை. இந்த மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தும் எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் முஸ்லிம் பிரதேச செயலாளர் இல்லை. மாவட்ட செயலகத்தில் முஸ்லிம் உத்தியோகத்தர் இல்லை. முஸ்லிம் அதிகாரிகள் இருந்தால் இப்படியான பிரச்சினை எழாமல் தவிர்க்க முடியும்.
அயாயா என்பது முஸ்லிம்களின் கலாசார உடை. இன்று திருகோணமலை மாவட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள தடை அடுத்த கட்டம் நாடு முழுவதும் வரும். இது விடயத்தில் அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுபட வேண்டும். பள்ளி வாசல் உடைக்கப்படுகின்ற பிரச்சினை, கிறீஸ் மனிதன் பிரச்சினை, ஹலால் பிரச் சினை, காணிப்பிரச்சினைகள், முஸ்லிம்களின் வீடு, சொத்துகள் அழிக்கப்படுகின்ற பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றனவே தவிர எதுவும் குறைய வில்லை. எனவே, இந்த நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் அனைவரும் தமது உரிமைகளைப் பாதுகாத்து நிம்மதியாக வாழ அரசுக்கும் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் எதிராக ஒன்றுபடவேண்டும். இதுதான் இன்று நம் முன்னுள்ள ஒரே தீர்வாகும் எனத் தெரிவித்தார். (ஒ-10)

# நுகரத்தகாத மீன்கள் களுதாவளையில் அழிப்பு



களுதாவளை, ஓக. 30
களுதாவளை பொதுச்சந்தையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற வகையில் காணப்பட்ட பெருமளவான மீன் வகைகள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.
களுதாவளை பொதுச் சுகாதார பரிசோதகர் மு.கிருபாகரன் தலைமையில் சென்ற குழுவினரே மேற்படி மீன்களைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.
அத்துடன் நுகர்வுக்கு பொருத்தமற்ற வகையில் மீன்களை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மீன் வகைகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. (ஒ-10)

# மட்டு மாவட்டத்தில் நிலவும் வறட்சியால் 71 ஆயிரம் குடும்பங்கள் பெரும் பாதிப்பு

## கிழக்கில் 120 குளங்கள் வறண்டன

திருகோணமலை, ஓக.30
மட்டக்களப்பு மாவட்டத்தில் 71 ஆயிரத்து 479 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 52 ஆயிரத்து 673 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.
கிழக்கில் வறட்சியால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் வாழ்வாதார பயிர்ச்செய்கையான விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 131 குளங்களில் 120 குளங்கள் முற்றாக நீர் வற்றிக் காணப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட கமல சேவைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக 12,000 நன்னீர் மீன்பிடியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.
அம்பாறை மாவட்டத்தில் 10ஆயிரத்து 180 குடும்பங்களைச் சேர்ந்த 31,278 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதோடு திருகோணமலை மாவட்டத்தில் 36,882 குடும்பங்களைச் சேர்ந்த 1,28,500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
நீர் நிலைகளின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதால் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினை அதிகரித்துள்ளதோடு கால்நடைகள் நீர் அருந்த முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் கிழக்கு மாகாண மக்கள் நிவாரண உதவி கோரியுள்ளனர்.
இதேவேளை- நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்வதற்கான சாத்தியம் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ஒ-10)

# நல்லூரில் தவறவிட்ட பொருள்களை பெறலாம்

யாழ்ப்பாணம், ஓக.30
நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின்போது பொதுமக்களால் தவறவிடப்பட்ட பொருள்கள் பல யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளன.
கைக்கடிகாரங்கள், கைப்பைகள், தேசிய அடையாள அட்டைகள், ஏ.ரி.எம். அட்டைகள், சாரதி அனுமதிப் பத்திரம் போன்றவை ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொருள்களைத் தவறவிட்டவர்கள் உரிய ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்று சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-7)


**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 600/=, இருவர் 1500/=
நால்வர் 2500/=
(Attached Bathroom)
Hotal Villa City
422, Galle Road, Wellawatte
T.P 072 255 2222 (J/15793) (16.3)

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவருகின்ற வியாபார நிறுவனமொன்றிற்கு உடனடியாக வேலையாள்கள் தேவை. (51445) (45.3.6)
தொடர்பு: 9.00 A.m. - 7.00 P.m.
021 222 2505, 075 042 4307

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1974 ஆம் ஆண்டு உத்தராடம் 3ஆம் பாதம், கிரக பாவம் 70, லண்டன் PR உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 075 242 1580 (51503) (10)

**Sky Computers (Pvt) Ltd**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Ms office 2013, Internet & E-mail, Graphic Design, Video Mixing, DTP, Hardware, Computer Type Setting, Web Design, Kids Programme.
மேலதிக விபரங்களுக்கு: 0212221417
89, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)

**பிரபலங்களின் நுட்பமான 20வினா விடைகள் பல்திறன் பரிசுப் போட்டி**
மாதம் ஒருமுறை
தரம் 4,3
1 ஆம் பரிசு 750/-
2 ஆம் பரிசு 500/-
3 ஆம் பரிசு 250/-

தரம் 4,3 மாணவர்களின் பல்வேறுபட்ட திறன்களை விருத்திசெய்யும் பொருட்டு தமிழ் மொழி, சுற்றாடல், கணிதம், பொதுவிவேகம் ஆகிய நான்கு துறைகள் உள்ளடங்களாக ஒளிஅரசி மூலம் இலங்கையின் பிரபல்யமான ஆசிரியர்களால் இப்போட்டி நடத்தப்படுகிறது.

பி. அம்பிகைபாகன் கொழும்பு

பி.எம். புன்னியாமீன் கண்டி

வி. அன்பழகன் யாழ்ப்பாணம்

கே. சுதர்சன் கொழும்பு
ஆகியோரால் வினாக்கள் தயாரித்து வழங்கப்படுகின்றன. போட்டியில் பங்குபற்றி வினாக்களை பயிற்சி செய்ய எதிர்வரும் 1ஆம் திகதி வெளிவரும் செப்டெம்பர் மாத ஒளிஅரசியினை வாங்குங்கள்.
தொடர்புகளுக்கு:
ஒளிஅரசி,
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.
T.P : 011 5738855, 071 8628379 / யாழ். 077 656961
OLIARAZI மாத சஞ்சிகை ஒளிஅரசி இல்லத்தரசிகளின் ... தோழி
அன்பு + அறிவு + அழகு + திறன் + போட்டி + வாழ்த்து + பொழுதுபோக்கு
உங்கள் ஒளிஅரசியை புலமைச்சுடர் முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**மணமகன் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு பூசம் 4ஆம் பாதம், கிரக பாவம், 63 ½ உடைய மணமகளுக்கு நிரந்தர வேலையுடைய மணமகன் தேவை. (அரச வேலை விரும்பத்தக்கது).
தொடர்பு: 075 242 1580 (51504) (10)

**சிறுகதைப் பட்டறை**
தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம்
எதிர்வரும் 13.09.2014 சனிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் ஒரு முழுநாள் சிறுகதைப் பட்டறையை நடத்த உள்ளது. சிறுகதை எழுதுவதில் ஆர்வமுள்ளோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொண்டு தங்கள் வருகையைப் பதிவு செய்யலாம்.
077 960 6133, 077 406 8780, 077 886 3041
கோகிலாமகேந்திரன், செயலாளர். (51448) (12.3.6)

ஸ்ரீராம ஜெயம்
**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்**
துன்னாலை வடக்கு, புலோலி.
வழிபடுவோர் சபை அங்கத்தவர்
**வழிபடுவோர் சபைக் கூட்டம்**
தலைவர் : ச.தேவதாசன் (J.P)
இடம் : கண்ணன் இல்லம்
காலம் : 11.10.2014 மு.ப. 10.00 மணி
நிகழ்ச்சி நிரல்
01. இறைவணக்கம்
02. தலைவர் உரை
03. 26ஆம் வருடப் பொதுக்கூட்டறிக்கை வாசித்தல்
04. அறங்காவலர் சபை தலைவர் உரை
05. 31.12.2011 - 31.12.2012 முடிவடைந்த ஆண்டிற்கான அறங்காவலர் சபை ஆண்டறிக்கையும் கணக்காய்வறிக்கையும் சமர்ப்பித்தல்.
06. முகாமைத்துவ திட்ட 2V இன்படி வழிபடுவோர் சபைக்கு கூடுதல் அங்கத்தவர்களாக ஐந்து அங்கத்தவர்கள் தெரிதல்.
07. வழிபடுவோர் சபை அங்கத்தவர் இடாப்பை அங்கீகரித்தல்
08. வழிபடுவோர் சபைத் தலைவர், செயலாளர் தெரிவு
09. ஐந்து அறங்காவலர் தெரிவு
10. பிரேரணைகள் (கடிதங்கள்)
11. ஏனையவை
12. நன்றியுரை
ச.தேவதாசன் வழிபடுவோர் சபைத் தலைவர்
க.சிறீரங்கன் வழிபடுவோர் சபை செயலாளர்
(C/15606)(7.6.3)

# என்ன செய்தீர்கள் என்று கேட்போரே எதையும் செய்யவிடாமல் தடுத்தார்கள்

## வடக்கு மாகாண சபை குறித்த அரசின் விமர்சனத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் பதிலடி

யாழ்ப்பாணம், ஓக.30
வடக்கு மாகாண சபை அமைந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் இந்த வேளையில் நாம் என்ன செய்தோம் என கேள்வி எழுப்புபவர்கள் தான் எங்களை எதையும் செய்ய விடாமல் தடுத்து வைத்திருக்கிறார்கள் எனப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தும்பளை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பற்றிக் உற்பத்தி நிலையத்தின் அடிக்கல் நடும் விழா நேற்று முற்பகல் 10 மணியளவில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் செபிலியன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் இந்த வருடத்துக்குள் என்ன செய்திருக்கிறோம் எனப் பல கேள்விகள் முன் வைக்கப்படுகின்றன. ஆனால் என்ன செய்தோம் எனக் கேட்பவர்களே எதையும் செய்ய விடாமல் தடுத்து வைத்திருக்கிறார்கள். எத்தனையோ இழப்புக்கள், துயரங்கள், உயிர்த் தியாகங்கள் மத்தியில் மாகாண சபை நிர்வாகம் இப்போது தான் கிடைத்திருக்கிறது. இது 86 ஆம் ஆண்டு கிடைத்திருக்க வேண்டியது. ஆனால் எதையுமே செய்யவிடாமல் மத்திய அரசு தடுத்துக்கொண்டே இருக்கிறது.

வரவு - செலவுத் திட்டம் ஊடாக வரும் நிதியின் எத்தனையோ வீதத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு எடுத்துக்கொண்டு குறைந்த வீதத்தையே வடமாகாணத்துக்கு வழங்குகின்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒன்று இல்லாவிட்டால் நிதி முழுவதுமே வடமாகாணத்துக்கு வரும். மாகாண அமைச்சுக்குரிய பல பிரிவுகள் இன்னமும் பிரதேச செயலகங்களுக்குள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை உடனடியாக நீக்கப்பட்டாலே முரண்பாடுகள் இல்லாமல் பணியாற்ற முடியும். முதலமைச்சர் மாகாண அமைச் சர்களுடன் மத்திய அரசு விட்டுக் கொடுத்து செயற்பட்டாலே அபிவிருத்தி சாத்தியமாகும். ஆனால் அவர்கள் எதற்கும் தடைபோடுபவர்களாக - முட்டுக் கட்டை போடுபவர்களாகவே இருக்கிறார்கள்.

கடந்த மூன்று நாள்களாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பற்றிய செய்திகளை மிகைப்படுத்தப்பட்ட பரப்புரையாக அரசு மேற்கொண்டது. ஆனால் இது கடந்த ஓகஸ்ட் மாதமே கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கான 260 மில்லியன் ரூபாவில் 20 வீத நிதியைத் தான் மத்திய அரசு வழங்கியது. அந்தக் கைத்தொழில் பேட்டைக்கான அதிகாரம் அனைத்தும் கூட மாகாண சபைக்கே வழங்க வேண்டும். ஆனால் அதைக் கேட் டால் மத்திய அரசுக்கே அது சொந்தம் என்பார்கள்:



வடக்கில் இவ்வாறு அரசியல் லாபம் தேடும் முயற்சி ஒன்றில் அரசியல் கட்சி ஒன்று ஈடுபடுகிறது. எனவே அந்தக் கட்சி ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் செய்வதெல்லாம் மக்களுக்காகவே அன்றி அரசியல் லாபத்துக்காக அல்ல. போருக்கு முன் வடமாகாணத்தில் பல கைத்தொழில் பேட்டைகள் இயங்கின. இன்று எத்தனை இருக்கின்றது என்பது தெரியவில்லை. எனவே நாம் அனைவரும் எல்லா வளங்களையும் பாவித்து மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்க வேண்டும் - என்றார். (த- 109)

இந்த வருட பரீட்சை எழுதியோர், தமது அடிப்படை ஆங்கில அறிவைப் பெறவிரும்வோர் ஆகியோருக்கான
மாபெரும் இலவச அறிமுக வகுப்பு
Free Introduction Class
இடம் : 11, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம்.
காலம் : 31.08.2014 ஞாயிறு, காலை 09.00 மணி
01.09.2014 திங்கள், காலை 09.00 மணி
அனைவரும் கலந்து பயன் பெறுவீர் !!
Success Language Centre
தொடர்பு: 077 640 8622 (51509) (10)

5ஆம் ஆண்டு நினைவலைகள்
அன்னை மடியில் 29.10.1994
ஆண்டவன் அடியில் 26.08.2009



அமரர் கருணாகரன் மாதுளன்
எம் கண்ணின் மணியே மாதுளனே!
என்றென்றும் எம் இதயக் கோயிலில் வீற்றிருப்பவனே!
மனம் கனிந்த புன்சிரிப்பு மனதை விட்டகலுமோ - ஐயா
விடிவின்றி விழிநீரும் வான் மழைபோல் சொரியுதய்யா
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !
உன் பிரிவால் துயருறும்...
அப்பா, அம்மா, தங்கை, தம்பி.
54/12, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.
(51506)(10)

Home & Office Visit Luxmy Computer Repairing
Tel : 021 320 3387

## கந்த புராண படிப்பு நிறைவு

நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகையான் கோயிலில் கந்தபுராண பிடிப் பின் நிறைவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும்.

அன்றையதினம் காலை 9 மணிக்கு விசேட பூசை அபிஷேகம் இடம்பெற்று கந்தபுராண படனம் நிறைவு இடம்பெற்று தொடர்ந்து நண்பகல் அன்னதானம் நடைபெறும். (த-17)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

ஈராண்டு நினைவதனில்
அன்னை மடியில் 06.12.2000
ஆண்டவன் அடியில் 30.08.2012



அமரர் செல்வி துஷாந்தி ஸ்ரீசோமாஸ்கந்தன்
(மாணவி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, தரம்-7F)

கூடுகட்டி வாழ்ந்திருந்தோம்
கூடுகலைந்ததல்லவோ
எம் கூடு கலைந்ததினால்
எம் வாழ்வு கலைந்ததம்மா
நீ வருவாய் எனப் பார்த்திருந்தோம்
வேரோடு விழவைத்து
எங்குதான் சென்றாயோ அம்மா
விடியாத விடியல்களாய்
தினமும் தேடுகின்றோம்
பத்து மாதம் சுமந்த வயிறை
பற்றி எரிய வைத்து பாரினிலே
எம்மை பரதேசிகளாக அலைய வைத்து
எங்குதான் சென்றாயோ?
ஏன் இந்த மௌனம் எழுந்தோடி வாராய் கண்ணே
இரண்டல்ல ஈராயிரம் ஆண்டு
சென்றாலும் மறந்திடுமோ உன் நினைவு



உன் பிரிவால் என்றென்றும் வாடி நிற்கும்..
அப்பா, அம்மா, தம்பி, தங்கையர்.
செ.ஸ்ரீசோமாஸ்கந்தன்
புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு,
ஸ்ரீ சோமாஸ் அரைக்கும் ஆலை,
300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.
(51512)(10)

மரண அறிவித்தல்
திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்



(ஓய்வுநிலை சிரேஸ்ட பதவி நிலை உத்தியோகத்தர்- சித்த மருத்துவத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)
கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம் நேற்று (29.08.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2014) முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
புலம்வீதி, கைதடி மேற்கு, கைதடி.
021 205 7900
தகவல்: குடும்பத்தினர். (51514) (10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

சிங்களம்
★ மிக இலகுவான முறையில் பேச, எழுத, வாசிக்க கற்பிக்கப்படும்
★ G.C.E O/L (சிங்களம்) பரீட்சைக்கான விசேட விசேட வகுப்பு மற்றும் PAST PAPER CLASS
★ LEVEL I, II, III வகுப்புக்கள் மற்றும் அதற்குரிய சம்பாசனை வகுப்புக்கள்.
சனி, ஞாயிறு மற்றும் வார நாள்களில்
ஸ்ரீ மாஸ்ரர் 0777 033 729
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவனம் (51511) (10)
41, நக்கா லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.
72, டாக்டர் இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு
35 நாள் நிரம்பிய லப்ரோ நாய்க்குட்டிகள் 9மாதம் நிரம்பிய, 1மாத சினையுடன் ஜேர்மன் செப்பேட், பொம்மேரியன் நாய்களும் விற்பனைக்குண்டு.
077 101 6407
(51518)

வீட்டுப்பணிப்பெண் தேவை
சாவகச்சேரியில் உள்ள வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை
(51517) தொடர்பு: 077 3095952 / 021 2270793

கணினி மலிவு விற்பனை
Hp Dual Core Full Set
19" LCD Mon.



24,750/=
✱ ஒரு வருட உத்தரவாதம்
✱ Free 4GB Pen / H.Phone (f/15619) (10)
ST. ANTONY'S
187, K.K.S. Road,
Jaffna Town
021 222 4865
075 069 8608
16ஆவது வருட சேவையில்

கூல் Kool කූල්
SAT/SUN 10 am - 1 pm
Vireanthu@ Yarl Pardy
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (51507) (10)
021 222 6868, 075 987 5800, 077 421 9247

## தொடர்ச்சிகள்

### 18 தடவைகள்

மாகாண சபைத் தேர்தல் கூட நடந்தது. எனவே சர்வதேச அழுத்தம் - நெருக்குதலுக்கே இந்த அரசு செவிசாய்க்கும் என்பது நிதர்சனம். எனவே நாம் சர்வதேசத்துக்கு எமது குறைகளை சொல்வதை ஜனாதிபதி தடுக்கக்கூடாது.

**யாரை ஏமாற்றுகிறார் மஹிந்த**

வடக்கு மாகாண ஆளுநரை மாற்றுமாறு நாம் மாகாண சபையில் பிரேரணை கொண்டு வந்தமையால் தான், ஆளுநருக்கு பதவி நீடிப்பு கொடுத்ததாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். நாம் மாகாண சபையில் பிரேரணை கொண்டு வந்தது கடந்த வருடம் நவம்பர் மாதம். நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியது இந்த வருடம் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி. அன்றைய சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரை மாற்றுவதற்கு ஜனாதிபதி எனக்கு உறுதியளித்திருந்தார்.

நாம் பிரேரணை கொண்டு வந்ததால் தான் மாற்ற மாட்டேன் என்றால் அதனை என்னை நேரில் சந்தித்த போதே ஜனாதிபதி கூறியிருக்க வேண்டும். அவர் இப்போது கூறுவதெல்லாம் நொண்டிச்சாட்டு.

**கொக்கரிக்கும் அரசு**

வடக்கில் பெரிய திட்டங்களை தாங்களே செய்து கொடுக்கின்றோம் என்று இந்த அரசு கொக்கரிக்கின்றது. அரசு நாம் என்ன செய்கின்றோம் என்று கேள்வியெழுப்புகின் றது. இவை வெறும் அரசியல் அலறல்கள் மாத்திரமே. வடக்கில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான பணம் யாரோ கொடுக்கின்றார்கள். அதில் ஒரு பகுதியை அரசு இங்கு செலவிடுகின்றது. அவர்கள் தமது பைகளுக்குள் இருந்து இந்தப் பணத்தை எடுத்துக் கொடுக்கவில்லை.

யாரோ செலவு செய்ய, யாரோ கட்டி முடிக்க பெரியளவிலான தரகுப். பணத்தை தமது கல்லாப் பெட்டிகளில் போட்டுக் கொண்டு, வடக்கு மாகாணத்துக்கு அது செய்தோம், இது செய்தோம் என்று அரசு தம்பட்டம் அடிக்கின்றது.

இந்த அரசு நந்தி போல் குந்தியிருந்து தடையாக இல்லா விட்டால், வெளிநாட்டு அரசுகளுடன் பேசி, நாம் எமது பகுதியில் பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களைச் செய்திருப்போம். வெளிநாட்டு நிதியில் செய்யப்படும் திட்டங்களை வைத்து அரசு அரசியல் செய்வது நகைப்புக் கிட மாக உள்ளது.

**பந்தா காட்டும் அரசு**

முன்னரே கட்டி முடிக்கப்பட்ட துரையப்பா விளையாட்டரங்கைச் செப்பனிடுவதற்காக, கொழும்பிலிருந்து ஹெலியில் வருகின்றார்கள். கூடவே பத்துப் பன்னிரண்டு பாதுகாப்பு வாகனங்களும் வருகின்றன. இவையெல்லாம் அரசியலுக்காகச் செய்யப்படும் சில்லறை வேடிக்கைச் செயல்கள். எனவே அரசியலில் லாபமும், தமக்கு சுயலாபமும் பெற எத்தனிக்கும் அரச உறுப்பினர்களால் எமது பிரதேசம் வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்க முடியாது.

**தடைகளைத் தாண்டிய பணி தொடரும்**

நாம் பல முட்டுக்கட்டைகளின் மத்தியில் முன்னேறி வருகின்றோம். எமது மாகாண சபைக்கு என்று ஒதுக்கப்பட்ட குறைந்த நிதி வளத்தைக் கொண்டு, இயன்றவரை பொது மக்களுக்கு நன்மை பயக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் வரையில் போதிய வெளிநாட்டுப் பணம் கிடைத்தது. அதில் பெரியளவில் ஊழல்கள் நடைபெற்று வந்தன. அரசியல் அனுசரணைக்காகவே அரசு ஆட்டம் போட்டு வந்தது.

இப்போது அந்தப் பண வரவுகள் நிறுத்தப்பட்டு விட்டன. நாம் கிடைக்கும் பணத்தின் ஒவ்வொரு ரூபாவையும், மக்கள் நன்மைக்காக செலவு செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளோம் - என்று தெரிவித்துள்ளார். (ற-5,109,21)

### இராணுவம்

வாக்களிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனாலும் தற்போது இந்த அறிவுறுத்தல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு படையினர் நாட்டின் தேசிய பாதுகாப்புக் கருதி அவ்வாறு ஊவா மாகாணத்துக்கு வர முடியாது என்றும், இதனால் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த வாக்களிக்கத் தகுதியான படையினர் எந்த மாவட்டங்களில் உள்ளார்களோ அங்கு தபால் மூல வாக்களிப்பு நிலையத்தை அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் 70 தபால் மூல வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் தங்கள் முகாம்களில் வாக்களிக்கத் தவறிய படையினர், 11 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ற-5)

### காணி

சென்று சில வாரங்களுக்கு முன்னர் துப்புரவு செய்தனர். அங்கு சென்ற கடற்படையினர் அந்தக் காணிகள் தம்முடையவை என்று கூறியதுடன், அந்தக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கும் அனுமதி வழங்கவில்லை. அதையடுத்து அந்தக் காணிகளுக்கு உரிமையாளர்களான 11 பேர் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அந்தக் காணிகள் பொது மக்களுடையது தானா என்பது கச்சேரி ஊடாக உறுதிப்படுத்த உள்ளோம். அந்தக் காணி பொதுமக்களுடையது தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு பொதுமக்களுக்கு காணிகள் பெற்றுக் கொடுக்கப்படும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள் ளார். (ற-4)

### முள்ளிவாய்க்

இறுதிப் போரின்போது உயிரிழந்தவர்களின் எச்சங்களே எரியூட்டப்படுகின்றனவா என்பதே அவர்களின் சந்தேக மாக இருக்கின்றது.

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்கால் கிழக்கு, விடத்தில் காடு என்ற பகுதியில் மக்கள் செறிவாகத் தங்கியிருந்தனர். பதுங்கு குழிகள் அமைத்து அவர்கள் பாதுகாப்புத் தேடியிருந்தனர். எனினும் பதுங்கு குழிகள் மீதும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் பலர் அப்படியே மாண்டு போயினர் என்று சாட்சிகள் கூறுகின்றன. ஷெல் வெடிப்பால் அள்ளுண்ட மணலினால் மூடப்பட்ட சடலங்களை அப்படியே விட்டு மக்கள் அருகிலிருந்த இடங்களுக்கு நகர்ந்தனர்.

போர் முடிவுற்ற பின்னரும் இந்தப் பகுதியில் கணிசமான இடம் மக்களின் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த இடங்களைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் அண்மையில் அங்கு ஒட்டப்பட்டன.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக, இரவு - பகலாக குறித்த பகுதியில் படையினர் பலவற்றையும் எரியூட்டி வருகின்றனர் என்று நேரில் கண்ட மக்கள் கூறுகின்றனர். பதுங்கு குழிகளுக்குள் அகப்பட்டுக் கிட்ட மனித எச்சங்கள், எலும்புகள் மற்றும் மக்களால் கைவிடப்பட்ட ஏனைய பொருள்கள் எல்லாவற்றையும் ஒன்றாகக் குவித்து படையினர் அவற்றை எரியூட்டுகின்றனர் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர்.

படையினர் திடீரென ஏன் இப்படி அவற்றை எரியூட்டுகிறார்கள் என்ற பீதியும் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் படைத்தரப்பின் கருத்தை உடனடியாகப் பெற முடியவில்லை. (உ-5)

### மகேஸ்வரி நிதிய

படுத்துமாறு அந்த நிதியத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

23 வயதுடைய குறித்த கர்ப்பிணிப் பெண்ணை டிப்பர் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதனால் கொதிப்படைந்த அந்தப் பகுதி மக்கள் குறித்த டிப்பரை தீயிட்டு எரித்தனர். தற்போது அந்த டிப்பரின் சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் அந்த டிப்பருக்கு மணல் ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரம் இல்லை என்று கூறப்படுகின்றது. அது தொடர்பில் யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"குறித்த டிப்பருக்கு வழித்தட அனுமதி உள்ளதா என்பதனை அவர்கள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. அது டிப்பரில் எரிந்து போயிருக்கலாம் என்று டிப்பர் உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டுள் ளது. அதனைத் எமக்குச் சமர்ப்பித்து உறுதிப்படுத்துமாறு அவர்களுக்குக் கூறியுள்ளோம்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

### பணிப்புறக்கணி

பிறப்பித்துள்ளார்.

பிரதான ஆறு கோரிக்கைகளை முன்வைத்து ஐந்து தொழிற்சங்கங்கள் இணைந்த நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுநர்களின் ஒன்றிணைந்த சங்கம் கடந்த 26ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகிறது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என சுகாதார அமைச்சர் ஊடாக அறிக்கை மூலம் வாக்குறுதி அளித்தும் போராட்டம் நேற்று நான்காவது நாளா கத் தொடர்ந்தது. இந்த நிலையிலேயே நீதிமன்றம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்குத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வேலைநிறுத்தப் போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச வைத்திய சேவையை பாதிப்படையச் செய்யும் நோக்காகவே இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது எனவும், இதனால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர் எனவும் மனுதாரர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசார் முஸ்தபா தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த நீதிவான், பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு இடைக் காலத் தடை உத்தரவு பிறப்பித்ததோடு இந்த உத்தரவை உடனடியாக பிரதிவாதிகளுக்கு தொலைநகல் மற்றும் தொலைபேசி ஊடாக அறிவிக்கும்படி உத்தரவிட்டுள்ளார். (ற-சி)

### பேச்சில்

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். அந்தப் பேச்சின்போது, இலங்கை அரசுக்கும் தமக்குமிடையில் எதிர்காலத்தில் நடைபெறும் பேச்சில் இந்தியா குறைந்தப் பட்சம் பார்வையாளராகவாவது பங்கேற்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக்கோரிக்கையை டில்லி ஏற்குமானால் கொழும்பின் பிரதிபலிப்பு எவ்வாறு அமையும் என்று வினவியபோதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு திட்டவட்டமாகப் பதிலளித்தார்.

"இலங்கை அரசு எவ்வளவு தான் அள்ளிக்கொடுத்தா லும் வெளிநாடுகளுக்குச் சென்று ஒன்றுமே தரவில்லை யெனக் கூறுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை. கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர்கள் புலித் தோல் போர்த்திய அரசி யல்வாதிகள் என்பதை மீண் டும் மீண்டும் நிரூபிக்கின்றனர். பிரச்சினைகளை இழுத்தடிப்பதில்தான் அவர்களின் அரசியல் வாழ்வு தங்கியுள்ளது. எனவே, சம்பந்தனுக்கு முடியாவிட்டால் நடுநிலை நபரொருவரிடம் தீர்வு விவகாரத்தை கையாளும் பொறுப்பை விட்டுவிட்டு அவர் விலகியிருக்க வேண்டும்.

தேசியப்பொறிமுறையில் இலங்கை பலமுறை வெற்றி கண்டுள்ளது. எனவே, அரசியல் தீர்வு விடயத்திலும் எம்மால் வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும். எனினும், இந்த விடயத்தில் மூன்றாந் தரப்பு நடுவருக்கு இடமளிக்க முடியாது. கண்காணிப்பளராக எவரையும் ஏற்கவும் நாம் தயாரில்லை" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-சி)

### வீதிகளின்

கள் செல்ல அனுமதிக்கப்படும் வகைகள் தொடர்பில் அறிவித்தல் பலகை போடப்பட்டிருக்கவில்லை. அந்த அறிவித்தல் வீதியில் போடப்பட்டிருந்தால் அவ்வாறான விபத்துகளைத் தடுக்க முடியும் என்று கூறப்பட்டது.

அது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்க உள்ளதாகவும் அவர்கள் மேலதிக நடவடிக்கை எடுப்பர் என்றும் நிஹால் பெரேரா தெரிவித்தார். (த-4)

### 327 பேர்

தொடர்பில் 66 பேரும் கைதாகினர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் எட்டு பொலிஸ் நிலையங்களினாலும் 121 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

பெரிய குற்றங்கள் தொடர்பில் 3 பேரும், சட்டவிரோதமான மது விற்பனை தொடர்பில் 9 பேரும், பிடியாணை பிறப்பிக் கப்பட்ட 12 பேரும், சந்தேகத்தின் பேரில் 11 பேரும், குடிபோதையில் கலகம் விளைவித்தமை தொடர்பில் 14 பேரும், ஏனைய குற்றங்கள் சம்பந்தமாக 72 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர் - என்றார். (த-4-86)

### 4ஆம் கட்ட

தங்கள் எதுவும் இடம்பெற வில்லை எனவும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தியத் தரப்பில் இருந்து பங்குபற்றிய அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறும், எல்லை தாண்டும் மீனவர்களையோ படகுகளையோ இலங்கைக் கடற்படையினர் கைது செய்யக்கூடாது எனவும், இலங்கையின் மீன்பிடி வளர்ச்சிக்குத் தேவையான ஒத்துழைப்பைத் தாம் தருவதாகவும் கூறினார்.

இவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் சுமார் 3 மணி நேரம் பேச்சு நடத்தப்பட்ட போதும் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடிப்பது தொடர்பில் இரு நாட்டு அரசுகளுடனும் கலந்துரையாடி முடிவுகள் எடுப்பதாகவும், இந்த முடிவுகளின் பிரகாரம் அடுத்த நான்காம் கட்டப் பேச்சைக் கொழும்பில் நடத்துவதற்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, படகு விடுவிப்பு தொடர்பில் இந்திய அதிகாரிகள் குழு நீண்ட நேர விவாதத்தில் ஈடுபட்டபோதும் இலங்கை அதிகாரிகள் குழுவால் பதில் எதுவும் வழங்கப்பட வில்லை. தம்மால் இது குறித்து முடிவு எடுக்க முடியாத நிலையில் அடுத்த கட்டப் பேச்சுக்கு இலங்கைக்கு வருமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இந்தப் பேச்சில் சாதகமான முடிவுகள் எடுக்கப்படும் என இந்தியத் தரப்பு எதிர்பார்த்திருந்த நிலையில் அதுவும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. முக்கியமாக இலங்கை அரசால் அரச உடமையாக்கப்பட்டுள்ள தமது படகுகளின் விடுவிப்பு தொடர்பில் உரிய பதில் கிடைக்கும் என இந்திய மீனவர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

இந்தப் பேச்சில் இந்தியா சார்பாகத் தலைமைச் செயலாளர் மோகன் வர்கீஸ் சுங்கத், அரச ஆலோசகர் ஸ்ரீபாலகிருஸ்ணன், அரச தலைமை வழக்கறிஞர் சோமயாயி, மீன்வளத் துறைச் செயலாளர் விஜயகுமார், ஆணையாளர் பிலாராஜேஸ் உள்ளிட்ட அதிகாரிகளும், இலங்கையில் சார்பாகக் கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நிமல் கெட்டியாராச்சி, கடற்றொழில் அமைச்சின் ஆலோசகர் எஸ்.சுபசிங்க, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத், கடற்படை அதிகாரி மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி உள்ளிட்ட குழுவினரும் பங்குபற்றியிருந்தனர். (த-14)

### ஐ.நா.

ஆண்டு போரின் இறுதி வரை இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ள, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் வாய்மொழி மூல அறிக்கை எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனால் இலங்கை இந்தக் கூட்டத் தொடரில் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த மாதம் இடம்பெறும் அமர்வின் இறுதியில், வாய்மொழி மூலமான அறிக்கையின் மீது விவாதம் இடம்பெறும். இந்த அறிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் இலங்கையும் தனது தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது.

இதுவரை காலமும் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அல்லது மனித உரிமை விவகாரங்களைக் கையாளும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகிய இருவரில் ஒருவர் மாத்திரமே பங்கெடுத்திருந்தனர். இந்தக் கூட்டத் தொடரில் இருவரும் இணைந்து பங்கெடுக்கவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, போர்க் குற்ற உள்ளக விசாரணை அமர்வு கிளிநொச்சியில் அடுத்த மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த அமர்வில், இந்த ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்களும் பங்கெடுக்கவுள்ளனர்.

இந்த நிபுணர்கள் அமர்வில் பங்கெடுக்கமாட்டார்கள் என்றும், அவர்கள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை மாத்திரம் வழங்குவர்கள் என்றும் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டபோதும், தற்போது அவர்களும் அமர்வில் பங்கெடுக்கவுள்ளனர். இந்த ஆலோசனைக் குழுவில் உள்ளவர்கள் கிளிநொச்சி அமர்வை அடிப்படையாக வைத்து வெளியிடும் அறிக்கையையும் ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்க, இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக நம்பகரமாக தெரியவருகின்றது. (த-5)

# வடமாகாண கணக்காய்வாளர் யாழ். அலுவலகம் நேற்று திறப்பு

யாழ்ப்பாணம்.ஒக.30

வட மாகாண கணக்காய்வாளர் திணைக்களத்தின் யாழ்.மாவட்டத்துக்கான அலுவலகம் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் பிரதம கணக்காய்வாளர் எச்.எ.எஸ். சமரவீரவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வட மாகாண பிரதம செயலர் ஆர்.விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், உதவிக்கணக்காய்வாளர் ஜீ.தேவஞானன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வரவேற்புரை நிகழ்த்திய வடமாகாண கணக்காய்வு திணைக்களத்தின் உதவிக்கணக்காய்வாளர் ஜி.தேவ ஞானம் தெரிவித்ததாவது:-

கணக்காய்வு திணைக்களத்தால் 7 வகையான கணக்காய்வு அறிக்கைகள் தற்போது இலங்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்கட்டடத்தில் கணக்காய்வாளர்களுக்கான பணிகள் இலகுபடுத்தப்படவுள்ளன.

தற்போது இலங்கை அரசுக்கு 7 வகையான கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண திணைக்களங்கள் என பல்வேறு மட்டங்களில் கணக்காய்வு செய்யப்பட்டு வருகின்றன.

2007 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 5 வருடங்களாக நிரந்தர கட்டடம் இல்லாமல் இந்த அலுவலகம் தற்காலிக கட்டடத்தில் செயற்பட்டு வந்தது.




*வடமாகாண கணக்காய்வாளர் திணைக்களத்தின் யாழ்.மாவட்டத்துக்கான அலுவலகத்தின் பெயர்ப்பலகையை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் பிரதம கணக்காய்வாளர் எச்.எ.எஸ்.சமரவீர திறந்து வைக்கின்றார்.*

34 உள்ளூராட்சி சபைகளும், 37 உள்ளூராட்சி திணைக்களங்களும், 22 திட்ட அடிப்படையிலான அறிக்கைகளும், 53 விவசாயத் திணைக்களங்களின் அறிக்கைகளும் பல்வேறு தொகுதி மட்டங்களில் பொதுமக்களுக்கான சேவை நோக்குடன் கணக்காய்வு அறிக்கை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப்புதிய கட்டடத்தில் இருந்து இன்னும் இலகுவான சேவையை மக்களுக்கு வழங்க முன் வந்துள்ளது"- என்றார்.

கட்டடத்திறப்புவிழாவை அடுத்து பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உத்தியோகத்தர்கள் திணைக்கள அதிகாரிகள் கௌரவிக்கப்பட்டனர்.(வ-14-21)

# அசாதாரண சூழ்நிலைகளால் பெரும் நட்டமடைந்தது நாடு

## பிரதான கணக்காய்வாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக.30

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் நாடு நட்டத்தை எதிர் கொண்டமை கணக்காய்வு திணைக்களத்தால் கண்டறியப்பட்டது. இதனை ஈடு செய்வதற்கான பல்வேறு திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன என்று இலங்கை சோஷலிஸ குடியரசின் பிரதான கணக்காய்வாளர்எச்.எஸ் சமரவீர தெரிவித்தார்.

கணக்காய்வு திணைக்களத்தின் யாழ்.மாவட்டத்துக்கான அலுவலகத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

சிலோன் என்று அழைக்கப்படும் எமது நாடு அசாதாரண சூழ்நிலைகளில் பல்வேறு நட்டங்களை எதிர் கொண்டுள்ளது. இதனை கணக்காய்வு மூலம் எம்மால் கண்டு பிடிக்க முடிந்தது. கணக்காய்வு திணைக்களத்தின் அறிக்கையின்படி அதனை ஈடுசெய்வதற்கான பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெரிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொதுப் பணத்தை பாதுகாக்கும் திணைக்களங்களை நம்பி எமது கணக்காய்வுகள் நடைபெறுகின்றன. எனவே, திணைக்களங்கள் பொறுப்புடனும் வெளிப்படைத் தன்மையுடனும் நடந்து கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.(வ-14)

# ஆஸியில் வாவியில் மூழ்கி இலங்கைப் பெண் சாவு



சிட்னி, ஒக.30

ஆஸ்திரேலியா, சிட்னியில் இலங்கை பெண் ஒருவர் வாவி ஒன்றில் மூழ்கி உயிரிழந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அமேஷா ராஜபக்ஷ என்ற இலங்கைப் பெண் ஒருவர் கடைக்கு பொருள்களை வாங்கச் சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் அவருடைய சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அதனையடுத்து அவர்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

அந்தப் பெண்ணின் சாவு தொடர்பாக சந்தேகம் இருக்குமானால் உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமேஷா ராஜ பக்ஷ 2009ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவுக்கு சென்றிருந்தார்.

இதேவேளை - ஒருவாரத்துக்கு முன்னர் குறித்த பெண் உடல் கட்டுமான நிலையம் ஒன்றுக்கு சென்று நீச்சல் பயிற்சி பெற்றுக் கொள்வது தொடர்பாக விசாரித்து வந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



வரலாற்றுச் சிறப்புமிக்க கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பல இடங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான அடியார்கள் திருவிழாவுக்கு வருகை த்ந்திருந்தனர். (வ)

# குரங்குகளைக் கொல்வது நீண்டகாலத் தீர்வாகாது

## குரங்கினங்களை ஆராயும் நிபுணர் கூறுகிறார்

அம்பாறை, ஒக.30

காத்தான்குடியில் மக்களுக்குத் தொல்லை கொடுத்துவரும் குரங்குகளை சுட்டுக் கொல்வது இந்தப் பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வாகாது என்று இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக குரங்கினங்களை ஆராயும் நிபுணர் சுனில் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

வீடுகள் மற்றும் கடைகளில் புகுந்து தொல்லை கொடுக்கும் குரங்குகளைச் சுட்டுத்தள்ள துப்பாக்கிவழங்குமாறு அரசிடம் கேட்டுள்ளது காத்தான் குடிநகரசபை.

அந்தப் பிரதேசத்தில், இந்த ஆண்டு மட்டும் 45 சிறுவர்கள் உட்பட சுமார் 75 பேர் குரங்குகளின் கடிக்குள்ளாகி காயமடைந்துள்ளார்கள்.

ஆண்டு முழுவதும் உணவும் நீரும் கிடைப்பதால்தான் குரங்குகள் நகர்பகுதிக்கு வருகின்றன என்று சுட்டிக் காட்



டும் சுனில் ஜெயதிலக, பொது மக்கள் குரங்குகளுக்கு உணவு அளிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் மீதமான உணவுகள் கூட குரங்குகளுக்கு கிடைக்காமல் இருக்கும்படி செய்தால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் கூறுகிறார்.

காத்தான்குடியில் அதிக அளவில் காணப்படும் அனுமன் குரங்குகள் அழியும் நிலையில் இல்லை என்றாலும், மக்களிடம் துப்பாக்கியைக் கொடுத்தால், அதிக அளவிலான குர்ங்குகள் கொல்லப்பட வாய்ப்புள்ளதாக அவர் சுட்டிக் காட்டுகிறார். (வ)

# கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் பதவி விலகல்

அம்பாறை, ஒக.30

கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வர் எம்.ஐ.எம். பிர்தௌஸ் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையில் அமைந்துள்ள பிரதி முதல்வர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிரேஷ்ட பிரதித் தலை வர் ஏ.எல்.அப்துல் மஜீதை பிரதி முதல்வராக நியமிப்பதற்கு ஏதுவாக அந்தப்பதவியை விட்டு விலகுமாறு கட்சித் தலைமைத்துவம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே தாம் அந்தப் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக அவர் தெரிவித்தார். (வ)

**கட்டார் நாட்டில் அதிஉயர் சம்பளத்தில் உடனடி வேலை வாய்ப்பு**

- Qatar International School
- Light Vehicle driver - 1200+
- பூந்தோட்டம் Garden helper-900+OT (வயது 30-55)
- Hospital & Supermarket Cleaners-800+OT
- Meson-1300+OT
- Heavy Driver (GCC veild License)-2000+OT
- Balathiya Driver - (Light vehicle) - 800+200+OT

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம், கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம். உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 01.09.2014 Lanka Voice இல-26/2 புகையிரத வீதி, வவுனியா என்ற முகவரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

உடன் தொடர்பு கொள்ள: Lanka Voice (48979)
T.P : 076 669 7789, 024 561 5610 (7.6.3)
CAPITAL RECRUITMENT INTERNATIONAL (P) LTD
No. 130-3/1, Grandpass Road, Colombo-14. L/LNO-2248

## வீடு கையளிப்பு

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய ஏற்பாட்டில் வீடற்றவர்களுக்கான வீடு கையளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு கைதடி மேற்கு உதயநகரில் நடைபெறவுள்ளது.

சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் லயன் பா. செல்லத்துரை யின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேற்படி வறுமைக் கோட்டுக்கு உட் பட்ட மக்களுக்கு புலம்பெயர் வாழ் சனசமூக நிலைய அங்கத்தவர்கள் உதவியுடன் மேற்படி வீடு அமைக்கப்பட்டு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (288)

**FALC FRENCH LANGUAGE CENTRE**
**REGISTERED FRENCH CENTRE.**

**FRENCH CLASSES**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
836 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம்......

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி...
Note: தரமான ஆசிரியரை தெரிவு செய்து பணம், நேரம் விரயமாவதை தவிருங்கள்..
எம்மிடம் கற்ற அதிகமானோர் France, Canada வில் வேலை செய்கிறார்கள்...

ஆரம்பம்:01.09.14 Mon 9.30am.
No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)

ஆரம்பம்:03.09 Wed 4.30pm.
No.181, 1st Floor, Main Street, நெல்லியடி

021 320 2973
0779 789 456

## கல்வியாண்டு –2014-15

### விண்ணப்பம் கோரல்

2009ம் ஆண்டு முதல் இளமானி மற்றும் தொழில்சார் கற்கை நெறிகளை வழங்கி வரும் **K-AIMS Business School** இல் பின்வரும் கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Professional Courses** (தொழில்சார் கற்கை நெறிகள்)

1. **Association of Chartered Certified Accountants : U.K (ACCA)** ( சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனத்தின் பரீட்சை)
   **ACCA** கற்கை நெறியானது மூன்று நிலைகளைக் கொண்டது.
   1. **DIPLOMA** – 6 மாதம்
   2. **DEGREE** – ஒரு வருடம்
   3. **ACCA** – ஒரு வருடம்
2. **Sri Lankan Chartered** (இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் பரீட்சை)

**Academic Courses**

1. **Bsc( Hons) in Applied Accounting from Oxford Brooks University U.K** (பிரயோக கணக்கீடு இளமானிப் பட்டம்)
   (1 ½ - 2 வருடம்)
2. **Higher National Diploma (HND) in Accounting & Finance, Marketing**
   (18 மாதங்கள்)

விண்ணப்ப முடிவுத்திகதி 7th September 2014

மேலதிக தகவல்களுக்கும், விசாரணைகளுக்கும், பதிவுகளுக்கும்
**0773 722 104/0772 555 814**

K-AIMS BUSINESS SCHOOL
Knowledge with aims

**Colombo:** No 35-1/1 Upatissa Road, Colombo 04
**Jaffna:** 249- 2/1 K.K.S Road,Jaffna

ACCA Association of Chartered Certified Accountants
CA The Institute of Chartered Accountants of Sri Lanka
HND Higher National Diploma
OXFORD BROOKES UNIVERSITY

- **A/L 2014** மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்.
- **August 31** இற்கு முதல் பதிவு செய்பவர்களுக்கு **76,000** வரையிலான சலுகைக் கட்டணம் அல்லது புதிய **I Pad Mini2*** வழங்கப்படும்.
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கையில் கே.கே.எஸ் வீதிக்கு பக்கத்தில் 3½ பரப்புக்காணி இரண்டு துண்டுகளாக விற்பனைக்குண்டு. தனித் துண்டுகளாகவும் 1¾ பரப்பு ஆகவும் விற்கப்படும்.

தொடர்பு:
077 589 0618,
077 928 2773,
077 045 0708 (9425) (4.6.3)

**Unique Beauty & Academy**

31.08.2014 அன்று எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Unique Beauty & Academy யின் அழகுக்கலை சம்பந்தமான அனைத்து சேவைகளும் மற்றும் பகுதிநேர, முழுநேர வகுப்புக்களும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தொடர்புகளுக்கு: இல.18 ஏ, மாணிக்கதியாகராஜ வீதி, சுன்னாகம்.
076 638 4450 (51234) (4.6.3)

**VCM INSTITUTE**

**A/L 2014 Repeat**

இணைந்த கணிதம்
B.ரவீந்திரன் B.Sc

ஆரம்பம்: 01.09.2014 (திங்கள்)
9.30 AM (51287) (4.6.3)

**NEW SCIENCE WORLD**
VICTORY MUST

Navalar road-Brown road Junction, Jaffna.
Tel: 077 336 4055
web:www.physicsocean.com Email: info@physicsocean.com

For 2014 A/L...

**DAY CLASSES**

| | |
|---|---|
| பௌதீகவியல் : | R.குகன், R.குமரன் |
| இரசாயனவியல் : | T.சிவகுமார், டயஸ் |
| உயிரியல் : | S.பொன்திவாகரன், V.உமாசங்கர் |

01.09.2014
ஆரம்பம்: திங்கள் காலை 9.30மணி

| | | |
|---|---|---|
| உயிரியல் | காலை | 07.00 - 09.00 |
| பௌதீகவியல் | காலை | 09.00 - 11.00 |
| இரசாயனவியல் | மு.ப | 11.00 - 1.00 |

**2015 A/L DAY CLASSES**

**NEW SCIENCE HALL**

KANNATHIDDY JAFFNA

(2014 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது) திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

ஆரம்பம்: 01.09.2014 திங்கள் காலை 7.00 மணி

PHYSICS : 11.30
S.சோதிலிங்கம், G.பிரபா

CHEMISTRY : 9.30
K.சிவத்திரன், T.சுசாந்தன்

BIOLOGY : 7.00
வழமையான ஆசிரியர் T.கெங்காதரன்

COM.MATHS : 7.00
K.செந்தில்ராஜ், T.செந்தில்நாதன், S.சிவகரன்

WEEKEND & EVENING CLASSES

PHYSICS : 2.00 - 3.30
K.செல்வன் N.கபிலன்
MON, TUE, WED, THURS, FRI

CHEMISTRY - : 2.00 - 3.30
G.BENO J.றஞ்சித்காந் WED, FRI, SAT & SUN

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.